
பாக்கெட்
நாவல்
ஆர்னிகா நாசர்
தெய்வம்
தந்த பூவே!
ரூ.15
உங்களை உருக வைக்கும்
உன்னத மெகா நாவல்!

# தெய்வம் தந்த பூவே!



## ஆர்னிகா நாசர்



## 1

மல்லிகை மொட்டுகள் மலர்வது போல் இரு விழிகளை மலர்த்தினாள் பவதாரிணி. எழுந்து படுக்கையில் சம்மணமிட்டு அமர்ந்தாள். அகலமாய் வாய் திறந்து முரட்டுத் தனமாய் கொட்டாவி விட்டாள். "காளியாத்தா!"

பவதாரிணி நான்கு அங்குல உயரம் கூடிய குஷ்பு. வயது 21. உயரம் 5'8''. மஞ்சளையும் ரோஜாப்பூவையும் குழைத்தடித்த நிறம். வட்ட முகம். கத்தரித்து விடப்பட்ட குட்டை கேசம். அளவில் பெரிய மிரட்டும் கண்கள்; பழுப்புக் கருவிழிகள். மொழுமொழு கொழுகொழு மூக்கு. இரு கனத்த திரட்சியான உதடுகள். மேல்வரிசை பற்களின் இரு பக்கவாட்டில் தெற்றுப்பற்கள். கிராமியம் நனைந்த ஓங்குதாங்கான மார்பகங்கள். கச்சிதமான இடுப்பு. மணிமேகலைப் பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ. படிப்பவள். காளிஉபாசகி.

எழுந்தாள். நைட்டியை தில்லைகணேஷ் சர்வர் போல் தூக்கி டப்பாக்கட்டு கட்டிக் கொண்டாள். தங்கைகள் படுத்திருந்த அறைக்கு நடந்தாள். கஸ்தூரியும் ஸ்வாதியும் கட்டியணைத்தபடி ஆழ்ந்த தூக்கத்தில் காணப்பட்டனர்.

ஸ்வாதி ஸ்னேகா சாயல் - ஆனால் இடுப்பு சிறுத்து. வயது 17. உயரம் 5'-2''. மாநிறம். சிறுவயதில் கை சூப்பி கை சூப்பி மேல்வரிசை பற்கள் முந்திரிக்கொட்டைத்தனமாய் அரை வட்டம் போட்டிருந்தன. ப்ளஸ் டூ இரண்டாம் ஆண்டு படிப்பவள்.

கஸ்தூரி நடிகை லைலா சாயல். வயது 15. உயரம் ஐந்தடி. கறுப்பு நிறம். பத்தாம் வகுப்பு படிப்பவள்.

ஃபிரீஸரிலிருந்து ஐஸ்கட்டி ட்ரே எடுத்து

வந்து பின்னுக்கு தட்டி ஐஸ்கட்டி சதுரங்களை தங்கைகளின் மார்புகளுக்குள் திணித்தாள் பவதாரிணி. இரு தங்கைகளும் துள்ளி எழுந்தனர். உடம்புக்குள் நழுவி ஓடும் ஐஸ் கட்டிகளை பிடிக்க முடியாமல் கூசினர்.

''என்னக்கா இது?''

''ப்ளஸ் டூ, டென்த் படிக்கிற பொண்ணுங்க இப்படித் தூங்கலாமா? கமான் கமான்... உறார்ரியப், பல் துலக்கி எழுந்து வாங்கடி!''

மூன்று வெவ்வேறு நிற பிரஷ்களில் பேஸ்ட் பிதுக்கி தனக்கு ஒன்று வைத்துக் கொண்டு மீதி இரண்டை இருவருக்கும் நீட்டினாள் பவதாரிணி.

தமிழ் தினசரி வாசித்துக் கொண்டிருந்த கமலநாதன் கீழ் மூக்குக்கு இறங்கியிருந்த மூக்குக் கண்ணாடி மூலம் மூன்று மகள்கள் பல் துலக்குவதை ரசித்தார். கமலநாதன் மணிமேகலைப் பல்கலைக்கழகத்தில் தத்துவஇயல் பேராசிரியர்.

கணவனுக்கு காபி கொண்டு வந்து வைத்த சீதாலெட்சுமி, ''மூணையும் வரிசையா பொட்டச்சிகளா பெத்துட்டு என்ன ரசிப்பு வேண்டிக்கிடக்கு?''

''தப்பா சொல்ற சீது. மூத்தது ஆண். மீதி ரெண்டுதான் பெண்!''

''அப்படின்னா பவதாரணிக்கு மாப்பிள்ளை பாக்காதீங்க.... பொண்ணு பாருங்க!''

''வீரமா பொண்ணு இருக்றது கொலைக்குத்தமா என்ன?''

''பவதாரிணிகிட்ட இருக்றது வீரமில்ல - கடைஞ்செடுத்த ரெளடித்தனம்!''

''இருந்துட்டுப் போகட்டுமே!'' காபி உறிஞ்சினார்.

குனிந்து வாய் கொப்பளித்துக் கொண்டிருக்கும் பவதாரிணியிடம் கஸ்தூரி, ''க்கா! உனக்கு விஷயம் தெரியுமா?''



''என்ன?''

''நேத்து ராத்திரி முழுக்க அழுதுக்கிட்டு இருந்தா ஸ்வாதி!''

''அப்டியாடி?''

''கஸ் சும்மா பொய் சொல்றா!''

''எதுக்கு அழுதன்னு கக்கல - உதை விழும்!''

''நேத்தைக்கி எங்க பயாலஜி மிஸ் என்னை 'பீடை'ன்னு திட்டிருச்சு!''

''நீ என்ன தப்பு பண்ணின?''

''அது வச்ச க்ளாஸ் டெஸ்ட்ல பெயிலாய்ட்டேன். அதுக்காக ஒரு தடவ ரெண்டு தடவ இல்ல நாலு தடவை திட்டுச்சு - அதுவும் எல்லா கிளாஸ் பொண்ணுக முன்னாடி. க்ளாஸ் பொண்ணுக கொல்லுனு சிரிச்சிட்டாங்க. எனக்கு வெக்கமும் அவமானமும் பிடுங்கி தின்னிருச்சுக்கா. இனி நா ஸ்கூலுக்கு போக மாட்டேன்க்கா!''

''மண்டு மண்டு!''

''நீயும் திட்றியே?''

''இது செல்லக் கொஞ்சல்டி. நீ தயங்காம கிளாஸ்க்கு போ. இன்னைக்கி உன் பயாலஜி கிளாஸ் எப்ப?''

''காலை ரெண்டாவது பீரியடு!''

''நீ பாட்டுக்கு கிளாஸ்க்கு போய்டே இரு. நான் வச்சுக் காக்கட்டா டைமுக்கு வந்து அவளை வச்சுக்கிறேன்!''

கஸ்தூரி வாயை பொத்திக்கொண்டு சிரித்தாள்.

''கழுதைக்கு டபுள் மீனிங் ட்ரிபிள் மீனிங்கெல்லாம் தெரிஞ்சு சிரிக்குது!''

காலை டிபன் முடித்துவிட்டு கைனடிக் ஜிங்க்கில் ஏறி அமர்ந்தாள் பவதாரணி. குளிர் கண்ணாடி பொருத்திக் கொண்டாள்.

வகுப்புக்குள் பிரவேசித்தாள்.

வகுப்புத் தோழிகள், ''குட்மார்னிங் பொம்பள தாதா மேடம்!''

கடைசி பெஞ்ச்சில் அமர்ந்தாள். விரிவுரையாளர் மிகவும் சீரியஸாக நோட்ஸ் டிக்டேட் பண்ணிக் கொண்டிருக்கும்போது எழுந்தாள் பவதாரிணி. ''எக்ஸ்க்யூஸ் மீ சார்!''

''என்ன பயில்வான்?''

''நேத்தைக்கு கொஞ்சம் அதிகமா பலாப்பழம் சாப்ட்டேன் போலிருக்கு. வயித்ல நான்-ஸ்டாப் கொண்டாட்டம். இப்பக்கூட வயிறு குடமுட பண்ணுது!''

''அய்யய்யோ... நீ எந்தரிச்சு ஓடு... க்ளாஸ் ரூமை அசிங்கம் கி...ங்கம் பண்ணிடாதே!''

கைனடிக் ஜிங்க்கை ஸ்டார்ட் செய்து சஞ்சலா மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு பறந்தாள். மூடியிருந்த கதவில் வாகனத்தை முட்டி மோதி நிறுத்திவிட்டு பள்ளி வளாகத்துக்குள் நடந்தாள். தங்கையின் வகுப்பறைக்கு போனாள். உயிரியல் ஆசிரியை பாடம் நடத்துவதை சில நிமிடங்கள் கைகட்டி கவனித்துவிட்டு விரல் சொடுக்கினாள். ''ஏய் மிஸ்! இங்க வா!''

''என்ன விரலை சொடுக்கி கூப்டுற?''

''கேட்ட கேள்விக்கு பதில். நீதான் ஸ்வாதியின் பயாலஜி மிஸ்ஸா?''

''ஆமாம்!''

''உன் வாய்க்குள்ள பாலமான் சாக்கடையா ஓடுது?- என் தங்கச்சிய பாத்து 'பீடை'ன்னு சொன்னியாமே?''

''வார்த்தைகளை அளந்து பேசு. ஒழுங்கா படிக்கல. ஏன் படிக்கலன்னு கேட்டா அழுற மாதிரி, மூஞ்சிய வச்சுக்கிறா. பொறுமைக்கும் எல்லை உண்டுதானே? அவ அழும்பு தாங்காம 'பீடை' ன்னு வாய் தவறி சொல்லிட்டேன்!''



''அறுபது பேர் இருக்ற க்ளாஸ்ல பத்து பேர் நல்லா படிப்பாங்க. முப்பது பேர் சுமாரா படிப்பாங்க - மீதி இருபது பேர் மக்காத்தான் இருப்பாங்க. எல்லாரையும் சரிசமமா பாவிச்சு அவங்களுக்கு புரியுற மாதிரி சொல்லிக் குடுத்து கரை தேத்றது தானே டீச்சர் வேலை? க்ளாஸோட அறுபது பேரும் ப்ரில்லியன்ட் ஸ்டூடன்ட்டா இருந்திட்டா க்ளாஸ்க்கு டீச்சரே தேவையில்லையே?''

''எங்களுக்கு ரிசல்ட் முக்கியம்!''

''எங்களுக்கு ரிசல்ட்டும் முக்யம். ஸ்டூடன்ஸின் சுயகௌரவமும் முக்யம்!''

''இப்ப என்ன பண்ணச் சொல்ற?''

''என் தங்கையின் மனதை புண்படுத்தி பேசியதற்கு மன்னிப்பு கேள்!''

''முடியாது!''

''உன் மக சரியா படிக்கலைன்னா பீடைன்னு திட்டுவியா?''

''மிஸ்ஸோட மகளும் இதே க்ளாஸ்தான்!'' கோரஸ்.

''எங்கே எழும்பு எழும்பு!''

ஒரு இரட்டைச் சடை எழுந்தது.

''இந்த பொண்ணை மிஸ் என்னைக்காவது பீடைன்னு திட்டியிருக்குதா?''

''இல்லை இல்லை!'' கோரஸ்.

''உன் மகளுக்கு ஒரு நியாயம், என் தங்கச்சிக்கு ஒரு நியாயமா? பேசாம மன்னிப்புக் கேளு!''

ஒரு குண்டுப் பெண்மணி எட்டினாள், ''என்னம்மா வகுப்புல புகுந்து கலாட்டா பண்ற? உன்னை பிரின்ஸ்பால் கூப்பிடுறாங்க!''

பிரின்ஸ்பால் முதுகலைப் பட்டப் படிப்பு முடித்துவிட்டு ஸிஸ்டரான இளம்பெண்!

''என்ன கலாட்டா பண்ற - நீ யார்?''

''நான் ப்ளஸ் டூ படிக்கும் ஸ்வாதியின் அக்கா, மேடம்! நேத்தைக்கி பயலாஜி மிஸ் என் தங்கச்சியை 'பீடை'ன்னு திட்ட என் தங்கச்சி வீட்ல தூக்கு போட்டு சாகப்பாத்தா. தெய்வாதீனமா காப்பாத்திட்டம். நாங்க லேட்டா பாத்திருந்தா என் தங்கச்சி பரலோகம் போயிருப்பா. இன்னைக்கி காலைல உங்க ஸ்கூல் பேரும் உங்க பேரும் பத்திரிகைகளிலேயும் டி.வி. சேனல்களிலயும் நாறுநாறுன்னு நாறிப் போயிருக்கும். எவ்வளவு எதிர்கால கனவுகளோட நீங்க பிரின்ஸி ஆய்ருப்பீங்க! அதை நெர்டில கெடுக்க பாத்திட்டாளே பயாலஜி மிஸ்! (குரலை தாழ்த்தி) உங்களுக்கும் பயாலஜி மிஸ்ஸுக்கும் ஏதாவது முன்விரோதமா? நான் கிளாஸ் ரூமுக்கு அமைதியா போய் 'இப்படி பேசியிருக்கீங்களே மிஸ்!'ன்னு கேட்டா 'பிரின்ஸி பேர் ரிப்பேராகட்டும்னுதான் இப்டி பேசினேன்'னு ராங்கா பேசுது மேடம் அந்த மிஸ்!''

பவதாரணியின் நடிப்புக்கு முன் உயிரியல் ஆசிரியையின் விளக்கம் எடுபடவில்லை. கடைசியாக அவள் ஸ்வாதியிடம் மன்னிப்பு கேட்க வகுப்பு மொத்தமும் ஆர்ப்பரித்தது. கட்டை விரலை உயர்த்தி தங்கையிடம் கண்சிமிட்டியபடி புறப்பட்டாள் பவதாரிணி.

இரவு. ஒரே படுக்கையில் நைட்டி அணிந்த மூன்று சகோதரிகளும் வட்டம் அமைத்து அமர்ந்திருந்தனர்.

''டீயேய் கஸ், ஸ்வா! நல்லா கவனியுங்க. மாதா பிதாவுக்கு அடுத்தபடியாக அக்காவாகிய நான். அப்றம் தான் உங்களுக்கு குரு தெய்வம் எல்லாம். உங்களை விட எனக்கு வெறும் சிலபல வயசுதான் கூட. ஆனாலும் இருந்தாலும் ஒரு காலத்லயும் நீங்க எனக்கு அக்கான்னு தர்றமரியாதையை ஒரு கோட்டும் குறைச்சிரக்கூடாது. எதிலயும் நான் மொதபங்கு எடுத்திட்ட பிறகுதான் உங்களுக்கு



மீதி ரெண்டு பங்கும். மீதி ரெண்டு பங்கையும் குடுங்கடின்னு நா அதட்டி கேட்டா யோசிக்காம எங்கிட்டத் தந்திடணும். உலகத்லயே அழகான நடிகர் குமரிமுத்துன்னு நா சொன்னா மறுபேச்சில்லாம நீங்க ஒத்துக்கிடணும். நீங்க காட்ற மரியாதைக்கு பிரதியுபகாரமா நான் ஆயுளுக்கும் உங்களைக் காப்பேன். நமக்கு கல்யாணமான பிறகும் - ஏன் - போக்குழந்தைகள் பெத்துக்கிட்ட பிறகும் கூட நீங்க ரெண்டு பேரும் நான் கிழிச்ச கோட்டைத் தாண்டக்கூடாது. நமக்குள்ள எந்த காரணத்தை வச்சும் சண்டை வரக்கூடாது. கட்டன புருஷன் முக்கியமா உடன் பிறந்த அக்கா முக்கியமா? - பெத்தபிள்ளைக முக்கியமா உடன்பிறந்த அக்கா முக்கியமா?-ன்னு நிலைகள் வந்தா அக்காதான் முக்கியம்னு நீங்க ரெண்டு பேரும் ஆணித்தரமா அறிவிக்கணும். அண்டர்ஸ்டாண்ட்?''

''அண்டர்ஸ்டாண்ட்!''

''தில்லைகாளி மேல சத்யம் பண்ணுங்கடி!''

''தில்லைகாளிமேல சத்யமா எக்காரணத்தை முன்னிட்டும் அக்கா பேச்சை தட்ட மாட்டோம்! அக்காவை விட்டு ஒரு கணமும் பிரியவும் மாட்டோம்''

விதி உதிரி சிரிப்பு நடிகன் கொட்டாச்சி போல் விழுந்து விழுந்து சிரித்தது. ''ஹெ ஹ ஹே பிரியவே பிரியமாட்டாங்களாமுல்லோ? எனக்கு சிரிப்பாச்சி சிரிப்பாச்சியா வருது!''

## 2

கமலநாதன் கை வைத்த பனியனும் பாம்பே டையிங் கைலியும் அணிந்திருந்தார்.

அவரின் எதிரில் மூன்று மகள்களும் அமர்ந்

திருந்தனர்.

கணவனுக்குப் பின் நின்றிருந்த சீதாலட்சுமி கணவனை முடுக்கிவிட்டாள். ''கேளுங்க!''

''என்ன பவா... நேத்தைக்கி ஸ்வாதி படிக்ற ஸ்கூலுக்கு போய் அவளோட பயாலஜி மிஸ்ஸை உண்டு இல்லைன்னு பண்ணிட்டியாமே... உண்மையா?''

நடந்ததை சினிமாத்தனமாய் விவரித்து, ''நீங்க இதுவரைக்கும் ஸ்வாதியை பீடைன்னு திட்டியிருக்கீங்களாப்பா?''

''இல்லையே!''

''அம்மா?''

''இல்லவே இல்லை!''

''பெத்த உங்க ரெண்டு பேருக்கும் இல்லாத உரிமையை அந்த பயலாஜி மிஸ்ஸுக்கு யார் கொடுத்தா? 'பீடை'ன்ற வார்த்தை எவ்வளவு மோசமானதுன்னு அம்மாவுக்குத் தெரியல. உங்களுக்கு கூடவா தெரியாதப்பா? அந்த வார்த்தையை சொல்லி திட்னதுக்கு பதிலா ஸ்வாதிய அந்த மிஸ் நாலு அடி அடிச்சிருக்கலாம்.''

''என் தங்கச்சிய மோசமான வார்த்தைகளாலே திட்டாதீங்கன்னு நீ க்ளாஸ் முடிஞ்சதும் தனியா போய் பயாலஜி மிஸ் கிட்ட ரிக்குவஸ்ட் பண்ணியிருக்கலாம். அத விட்டுட்டு இப்டியா நடந்துக்கிறது?'' என்றாள் சீதாலட்சுமி.

''அப்படியெல்லாம் கெஞ்சினா எவ கேக்றா? சீதாலட்சுமி! என் வழி தனி வழி! குறுக்கிடாதே! என்னை படைச்ச கடவுளலாலக் கூட என்னை மாத்த முடியாது. என் தங்கச்சிய கிளாஸ் டீச்சர் திட்னதுக்கு இந்த அளவு ரியாக்ஷன் காட்னேன். வேற வெளியாள் யாராவது திட்டியிருந்தா திட்ன வாயை அறுத்து எறிஞ்சிருப்பேன்!''

''எல்லாம் நீங்க குடுக்ற செல்லம்ங்க. இவளோட ரௌடித்தனம் இவளையும் நம் குடும்பத்தையும் எங்க கொண்டு போய் நிறுத்தப்போகுதோ?''



''என் தேவையில்லாம அலுத்துக்கிற சீதா. என் வீட்லயும் சரி- உன் வீட்லயும் சரி- கூடப்பிறந்த மூத்ததுக, இளையதுக மேல இவ்வளவு பாசத்தை காட்டியிருக்கா?''

''நல்லா சொன்னீங்கப்பா. அய்யப்பன் நகர்ல ரோடு ஸைட் ரோமியோக்கள் ஆயிரம் பேர் இருக்கான்க. நாப்பது அம்பது வயசு கிழவிகளைக்கூட அவன்க விடாம துரத்தி துரத்திஈவ்டீஸிங் பண்ணுவான்க. ஆனா எங்ககிட்ட மட்டும் தப்பித் தவறிக்கூட வாலாட்ட மாட்டான்க. ஏன்னா வால்களை ஒட்ட நறுக்கிடும்பா. பவா ஒரு ஒன் விமன் ஆர்மி''

''பவதாரிணிக்கு தங்கச்சிகளாயிருக்க குடுத்து வச்சிருக்கணும். வி லவ் பவா!''

சீதாலட்சுமி காரணமின்றி சிரித்தாள்.

''இப்ப எதுக்கு சிரிச்ச சீதாலட்சுமி?'' பவதாரிணி,

''ஒ... ஒண்ணுமில்ல!''

''சும்மா சொல்லு!''

''இந்த வீட்ல சிரிக்கக்கூட எனக்கு உரிமை இல்லையா?''

''இப்ப எதுக்கு சிரிச்ச? அதச் சொல்லு!''

''நானும் அக்கா தங்கச்சிகளோடதான் பிறந்தேன். ஸ்கூல் டேஸ்லயும் காலேஜ் டேஸ்லயும் எனக்கு உயிர்தோழிகள் இருக்கவே செஞ்சாங்க. ஆனா இப்ப? தே ஆர் லைக் ஸ்ட்ரேஞ்சர்ஸ். புருஷன் மூணு மகள்கதான் என் உலகம்னு ஆகிப் போச்சு. நாளைக்கு உங்களுக்கும் என் நிலைதான் வரும். பிராக்டிக்கலா இருங்க. இப்ப தேவைக்கு அதிகமா பாசத்தைக் கொட்டி பின்னாடி ஏமாந்து

போய்டாதிங்க.''

''என் சீதாலட்சுமி உனக்கு எங்களோட அன்னியோன்யம் பொறாமையை கிளப்புதோ?''

''அப்படித்தான் வச்சுக்கயேன்!''

''நீ உன்னைவச்சு இந்த உலகத்தை எடை போடாதே. நீ சுயநலக்காரி. புருஷன் மகள்களோட உன் உலகத்தை சுருக்கிக்கிட்ட. ஆனா எங்களோட உலகம் பவாக்கா இதயத்திலிருந்து ஆரம்பிச்சு பவா கால்களில போய் முடியுது!''

''அப்டினா உங்க ரெண்டு பேர் உலகமும் என் உலகத்தைவிட குட்டியூண்டு!''

''பவாக்கா வழியா நாங்க பாக்ற உலகம் பரந்து விரிந்த உலகம்!''

இடையே குறுக்கிட்டார் கமலநாதன்.

''வாக்குவாதம் நீண்டுக்கிட்டே போகுது. ஒரே ஒரு வார்த்தை! அம்மா பவதாரிணி!... பேச்சிலயும் செயல்லயும் கொஞ்சம் வன்முறை தொனிக்காம பாத்துக்க!''

தலையாட்டினாள் பவதாரிணி தங்கைகள் பக்கம் கண்சிமிட்டி.

''நான் போன பிறவில உடம்பெல்லாம் புழுதி படர்ந்த பெரிய பெரிய காதுகள் உள்ள ஆப்ரிக்க யானையா இருந்திருக்கிறேன். யானைக்கு அன்பையும் கோபத்தையும் வன்முறையா காட்டத்தான் தெரியும். நானும் அப்படித்தான். ஆண்கள் என்னைக் கண்டு பயப்படுறதை பெருமையா கருதுறேன்.''

''உன்னுடைய முரட்டுத்தனத்தை பார்த்து உனக்கு நல்ல வரனே அமையாம போய்ட்டா?''

''எனது படிப்பும் சம்பளமும் ஆயிரம் வரன்களை ஈர்க்கும். (நிறுத்தி) ஸ்வா! பப்ளிக் எக்ஸாம் நெருங்கிருச்சு. ஒழுங்கா படிக்கிறியா? நீ நல்ல மார்க் எடுத்தால்தான் நல்ல கோர்ஸ் கிடைக்கும்!''



''பயாலஜிதான் சிரமமாய் இருக்குக்கா!''

''டியூஷன் சேத்து விடவா?''

''யார்கிட்ட?''

''உன்னை பீடைன்னு திட்னாளே அதே மிஸ்கிட்ட!''

''சேத்துப்பாங்களா?''

''உனக்கு அவ வீடு தெரியுமா?''

''தெரியும்!'',

''கிளம்பு கிளம்பு. அவளை பாத்து அவகிட்ட உன்னை சேத்துவிட்டுர்றேன்!''

கைனடிக் ஜிங்க் சீறியது. மூன்றாவது தளத்தை கட்டினாள் ஸ்வாதி. மாடிப்படி ஏற கால் வலித்தது. இருபதுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த பயாலஜி மிஸ் பவதாரிணியைக் கண்டதும் பயந்து எழுந்தாள்.

''நா.... நா....நா.. எதுவும் உன் தங்கச்சிய புதுசா திட்டலையே...''

''இன்னும் பழசையே நினைச்சட்டிருக்கிங்களா? ஸாரிஸாரி! இவளை உங்ககிட்ட டியூஷன் சேக்க வந்தேன்!''

''இவ டியூஷன் படிச்சாலும் தேற மாட்டா!''

படாரென்று மிஸ்ஸின் இரு கைகளையும் பாய்ந்து பிடித்துக் கொண்டு தனியறை ஒதுங்கினாள் பவா. ''இது உங்க கையில்ல. காலு. கெஞ்சிக் கேட்டுக்கிறேன். அவ பயாலஜில குறைஞ்சபட்சம் அறுபது சதவீதம் மார்க் எடுக்க வச்சிருங்க!''

''அன்னைக்கு என்னை என்னென்னமோ திட்ன- ஹெச்எம் மிஸ் கிட்ட போட்டுக்குடுத்த!''

''தங்கச்சி பாசம் கண்ணை மறைச்சிருச்சு!''

''இன்னைக்கு?''

''அதே தங்கச்சி பாசம் தான் உங்க முன்னாடி என்னை கூனிக்குறுகி நிக்கவச்சிருக்கு!''

வாயை பொத்திக் கொண்டு சிரித்தாள் மிஸ்.

''உன்னை மாதிரி ஒரு அக்காவ நான் பாத்ததே இல்லை!''

''அதான் இப்ப பாக்றீங்களே.... இந்தாங்க ஆயிரம் ரூபா அட்வான்ஸ் - ஸ்வாதி அறுபது பர்செண்ட் மார்க் பயாலஜில எடுத்துட்டா இன்னும் ரெண்டாயிரம் தருவேன்!''

மிஸ் வாங்கிக் கொண்டாள். ''உன் தங்கச்சிய டியூஷன்ல சேத்துக்கிறேன் - ஒரே ஒரு கண்டிஷனோட!''

''அதென்ன?''

''கடுமையா முயற்சிபண்ணி சொல்லித்தரேன். அதை மீறி ஸ்வாதி நீ நினைச்ச மார்க்கை எடுக்கலைன்னா என்னை நீ அடிக்கக்கிடிக்க வந்திரக் கூடாது.!''

சிரித்தாள் பவா. ''சத்யமா அப்டி நடந்துக்க மாட்டேன்!''

''நல்லது. இன்னைக்கே அவளை நீ விட்டுட்டுப் போகலாம்!'' மாணவிகள் இருக்கும் அறைக்கு மீண்டனர்.

''பெஸ்ட் ஆஃப் லக் ஸ்வா. ஒழுங்கா படி. டியூஷன் முடிஞ்சதும் போன் பண்ணு. வந்து கூட்டிட்டுப் போறேன்.!''

எல்லா மாணவிகளும் திறந்த வாய் மூடாமல் வேடிக்கை பார்க்க - புறப்பட்டாள் பவதாரிணி.

## 3

இன்டர்நெட்டில் ப்ளஸ்டூ தேர்வின் முடிவுகள் ஓடின. ஸ்வாதியின் எண்ணுக்குரிய மதிப்பெண்களை குறித்துக் கொள்ள ஆரம்பித்தாள் பவா.



எல்லா பாடங்களிலும் சிறப்பான சதவீதம் எடுத்து தேர்வாகியிருந்த ஸ்வாதி உயிரியல் பாடத்தில மட்டும் பெயிலாகியிருந்தாள். 68 மதிப்பெண்.

பவதாரிணிக்கு அவமானம் பிடுங்கித்தின்றது. அழும் ஸ்வாதியை அடக்கி பின்னுக்கு அமரச் செய்து வீட்டுக்கு திரும்பினாள்.

பெற்றோர். ''ரிசல்ட் என்னம்மாச்சு பவா?''

''பயாலஜில பெயிலாய்ட்டா!''

''எம்மா ஸ்வா.... பயாலஜி நீ சரியா எழுதலையா?''

''பரவாயில்லாம எழுதினேன்!'

''பயாலஜில அவ சொதப்புவான்னு நான் எதிர்பார்த்ததுதான்!'' என்றாள் கஸ்தூரி.

''திரும்பவும் பயாலஜியை எழுதச் சொல்லலாம். பாஸ் பண்ணிட்டா இந்த அகடமிக் இயர்லயே அவளை ஏதாவது கோர்ஸ்ல சேர்த்திடலாம்!''

''திரும்பவும் எழுதுறது இருக்கட்டும். பேப்பர் திருத்துறதில் மார்க் கூட்டி போடுறதில் ஏதாவது தப்பு நடந்திருக்கலாம்ல்ல? அதனால ரி-டோட்டலிங்குக்கும் ரி- வேல்யூவேஷனுக்கும் அப்ளை பண்ணுவம்!''

''திரும்ப சப்ளிமெண்ட்ரி எக்ஸாம் எழுதிடுறேன்க்கா!''

''ஒரு முயற்சி செய்ய விடேன். திரும்ப எழுதி நீ என்னதான் மார்க் எடுத்து பாஸ் பண்ணினாலும் நீ ப்ளஸ்டூல பெயிலானவன்ற அவப்பெயர் தங்கிடும் - தேவையா?''

பணம் கட்டி ஸ்வாதியின் உயிரியல் விடைத்தாளின் நகலை வரவழைத்து நான்கு உயிரியல் ஆசிரியைகளிடம் அபிப்ராயம் கேட்டாள் பவா.

''சில கேள்விகளுக்கு உன் தங்கை நேரடி பதில

தாவில்லை. அவைகளுக்கு மறுமதிப்பீட்டில் கூடுதல் மதிப்பெண் கிடைக்க பெரும்பாலும் வாய்ப்பில்லை!''

டியூஷன் எடுத்த ஆசிரியை, ''மீண்டும் அவளை என்கிட்ட டியூஷன் சேரு. ஸ்பெஷலா சொல்லிக் குடுத்து எய்ட்டி பர்சன்ட் மார்க் ஸ்கோர் பண்ண வச்சிடுறேன்!''

யார் பேச்சையும் கேளாது மதிப்பீட்டுக்கும் மறுகூட்டலுக்கும் விண்ணப்பித்தாள் பவா. அத்துடன் மீண்டும் தேர்வு எழுத ஸ்வாவை டியூஷனுக்கும் அனுப்பினாள் பவா. தேர்வுக்கு பனிரெண்டு நாட்கள் இருக்கும்போது நள்ளிரவில் ஒரு தந்தி கல்வி இயக்ககத்திலிருந்து பறந்து வந்தது. 'ஸ்வாதியின் உயிரியல் விடைத்தாளின் மதிப்பெண் கூடியுள்ளது. நேரில் வரவும்'

தங்கையுடன் சென்னை பறந்தாள் பவதாரிணி. இயக்குநர் அறையிலிருந்து அழைப்புவர உள்ளே போய் திரும்பினாள் ஸ்வாதி.

''க்கா 121 மார்க் போட்ருக்காங்க!''

''வாவ்!'' தங்கையை உயரே தூக்கி தட்டாமாலை சுற்றினாள் பவதாரிணி.

சிதம்பரம் திரும்பிய அக்காளையும் தங்கையையும் வரவேற்ற மாணவியர் குழுமம் சப்தமாய் காமென்ட் அடித்தது. ''கல்வி அமைச்சகத்தின் இயக்குநரையே அதட்டி மிரட்டி உருட்டி பாஸ் மார்க் போட வச்சிட்டாப்பாரு இந்த பவதாரிணி.''

காமென்ட்டை ரசித்து சிரிக்கும் பவாவின் காதுகளுக்கு குனிந்தாள் கஸ்தூரி. ''நான் பிஸிக்ஸ்ல வீக்கா இருக்கேன்க்கா, என்னையும் பெரியமனசு பண்ணி கரை தேத்திடு!''

''பவதாரிணி இருக்க பயமேன்?'' என கம்பீரமாய் அறிவித்தாள் பவா.



## 4

தில்லை காளியம்மன் கோயில்

வாய் திறந்து உறுமும் புலியின் மீது எட்டு கைகளுடன் அமர்ந்திருந்தாள் காளி. தலையில் கிரீடம். நெற்றியில் குங்குமம். கரு விழிகள் மையம் அறைந்த உக்கிரக்கண்கள். இடது நாசியில் மூக்குத்தி வளையம் ஊஞ்சலாடியது. நாக்கு வெளியே தொங்கியது. ஒரு கையில் தாமரை, ஒரு கையில் சங்கு சக்கரம், ஒரு கையில் சூலாயுதம், ஒரு கையில் திரிசூலம், ஒரு கையில் நீள்வாள், ஒரு கையில் வில், ஒருகையில் மணிமாலை, ஒரு கையில் வெண்சங்கு. கழுத்தில் ஆபரணங்கள். எட்டு கைகளிலும் வளையல்கள்.

கமலநாதனும் சீதாலட்சுமியும் முன் நடக்க பவா, கஸ், ஸ்வா பின்தொடர்ந்தனர். மாலை 1.30 - 6.00 ராகுகால பூஜை ஆரம்பித்திருந்தது. கொண்டு வந்திருந்த மஞ்சள் தூளையும் குங்குமத்தையும் காளி காலடியில் கொட்டி ஸ்லோகங்களை உச்சரிக்க ஆரம்பித்தார் பூசாரி.

ஸ்வாதியின் அட்மிஷன் கார்டை காளியின் காலடியில் வைத்து கும்பிட்டனர். பின் பெற்றோரின் காலடிகளில் கார்டை வைத்து சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தாள் ஸ்வாதி.

''பவா மாதிரி படிச்சு அமோகமா வா ஸ்வாதி!''

எழுந்த ஸ்வாதி மீண்டும் கார்டை பவாவின் காலடிகளில் வைத்து விழுந்தெழுந்தாள். ''என்னை ஆசிர்வாதம் பண்ணுக்கா!''

துள்ளி பின்னுக்கு போனாள் பவா. ''போயும் போயும் என் கால்ல விழுறியேடி?''

''உன்னை நாங்க வெறும் அக்காவா பாவிக்கல. நீ அதுக்கு மேல. போன பிறவில நீ அம்மாவா

இருந்திருக்கனும். எல்லா மாணவர்களுக்கும் மேறபடிப்பு படிக்கனும்னு ஆசை இருக்கத்தான் செய்யும். ஆனா எத்னி அக்காமார்கள் எண்ணத்தை செயல்வடிவமாக்றாங்க? எனக்கு மொதல்ல எந்த கோர்ஸுக்கும் அட்மிஷன் கார்டே வரல. உடனே நீ பயோ கெமிஸ்ட்ரி, ஹெச்டியைப் போய் பார்த்து நைச்சியமா பேசி எனக்கு எம்.எஸ்.ஸி. பயோ டெகனாலஜி பைவ் இயர்ஸ் இன்டகிரேட்டட் கோர்ஸுக்கான அட்மிஷன் கார்டு வாங்கிட்டு வந்திட்ட!''

''என்னை புகழாதே ஸ்வா, மத்தவங்களுக்கும் எனக்கும் ஒரே ஒரு வித்தியாசம். நான் எந்த முயற்சியையும் முழுமையா பண்ணி பாத்திடுறேன். அவ்வளவுதான். என்கிட்ட சுயபச்சாதாபம் இல்ல, நான் பொட்டச்சின்ற தாழ்வுமனப்பான்மையும் இல்ல. நான் உறவுகளை சுமையாய் கருதுவதும் இல்ல. மாறாக நான் பொறுப்புகளை விரும்பி சுமக்கின்றேன். ஐ லவ் ரிஸ்க், ஐ லவ் அட்வென்ச்சர். உனக்கு மட்டுமல்ல ஸ்வா - நாளைக்கு கஸ்தூரிக்கும் என்னாலான உதவிகளை செய்வேன்!''

''நான் ஒரு கேள்வி கேட்டா நீ கோச்சுக்கக் கூடாதுக்கா!''

''கேளு கஸ்!''

''எங்களுக்கு உதவுற மாதிரி எல்லா பெண்களுக்கும் உதவுவியா?''

மறுதலிப்பாய் தலையாட்டினாள் பவதாரிணி. ''என்னுடைய வட்டத்துக்குள்ள இருக்ற தலைகளுக்குத் தான் நான் உதவுவேன். மத்த பெண்களை பத்தி நான் ஏன் கேர் எடுத்துக்கணும்?''

''நீ பெரிய ஆளுக்கா!''

''சரி சரி. ஸ்வா கிளம்பு. சர்டிபிகேட் வெரிபிகேஷன் முடிச்சு உன்னை கிளாஸ்ல தள்ளிட்டு வர்ரேன்!''

காரில் கமலநாதனும் சீதாலட்சுமியும் கஸ்தூரி



யும் எறிக்கொண்டனர். பவாவின் கைனடிக் ஜிங்கில் தொற்றிக் கொண்டாள் ஸ்வாதி. மாணவர் சேர்க்கைக்கான அனைத்து சம்பிரதாயங்களையும் முடித்துவிட்டு கைனடிக் ஜிங்கில் சீறினாள் பவா. எதிரில் வரும் பைக்கின் மீது மோதுவது போல் பாய்ந்தாள். பைக் கிரீச்சிட்டு நின்றது. பைக்கின் முன் டயரை தனது முன்டயரால் உரசிய படி சிரித்தாள் பவா.

பைக்கில் இருந்த அரவிந்த் பவதாரிணியுடன் படிப்பவன். நடிகர் சூர்யா சாயல்.

''என்ன பயந்துட்டியா அரவிந்த்?''

''இ.... இல்லையே!''

''எங்க - லேடீஸ் ஹாஸ்டல் பக்கம் போய்ட்டு வர்ற?''

''அய்யய்யோ.... நா அங்க போகல.... வடக்கிருப்புக்கு போய் டீ குடிச்சிட்டு வரேன்!''

''கடந்த ஒரு வாரமா நீ ஏன் என் கண்ணுல தட்டுப்படல?''

''தெரியலையே!''

''கிளாஸ்க்கு ஒழுங்கா வந்தல்ல?''

''வந்தேனே!''

''பின்ன ஏன்? என்னை பாத்து ஒளிஞ்சிக்கிறியா?''

''இல்லையே!''

''எதைக் கேட்டாலும் இல்லையே தெரியலையேன்னு பதில் சொல்லு. நான் உன்கிட்ட கொஞ்சம் தனியா பேசணும். லஞ்ச் அவர்ல நீ பெவிலியன்ல இருகிற மஞ்சள் பூமரத்தடில காத்திரு. வந்திடுறேன்.!''

''என்ன விஷயம் பேசணும்?''

''எல்லாத்தையும் இங்கயே சொல்ல முடியுமா செல்லம்? லைஃப்ல எதுலயும் கொஞ்சம் கொஞ்சம் சஸ்பென்ஸ் வேணும் கண்ணா. இப்ப நீ

கிளம்பு!''

பதட்டத்தில் பைக்கை ஸ்டார்ட் செய்ய முடியாமல் திணறினான் அரவிந்த்.

''தள்ளி நில்லு. நா ஸ்டார்ட் பண்றேன்!''

ஒரே உதை. பைக் ஸ்டார்ட் ஆனது. பவதாரிணியை திரும்பி திரும்பி பார்த்தபடி கிளம்பிப் போனான் அரவிந்த்.

மஞ்சள் பூ மரத்தடி. ஸ்டாண்டிட்ட பைக்கின் பில்லியனில் சரிந்து அமர்ந்திருந்த அரவிந்த் பவானை பார்த்ததும் முழு உயரத்துக்கு நிமிர்ந்தான். ''வா பவா!''

வந்தவள் அரவிந்தை பார்வையால் துளைத்தாள். ''நான் கேக்ற கேள்விகளுக்கு நீ மறைக்காம டக்டக்குன்னு பதில் சொல்லணும்!''

''சரி!''

''நீ எத்னி வருஷமா என்னை இந்த கேம்பஸ்ல பாக்ற?''

''ஆறு வருஷமா!''

''என்னை பத்தி நீ என்ன நினைக்ற அரவிந்த்?''

''நீ ரொம்ப ஸ்ட்ரெய்ட் ஃபார்வர்டு பொண்ணு. படிப்புல மகா கெட்டிக்காரி, நினைச்சதை அடைஞ்சே தீரணும்ன்ற உத்வேகம் உள்ள பொண்ணு நீ. இந்திய தரைப்படை தளபதிக்கு தேவைப்படும் மிடுக்கும் கம்பீரமும் உன்கிட்ட நீக்கமற நிறைஞ்சிருக்கு!''

''நான் அப்டி இருக்றது தப்பா?''

''நீ எப்டி வேணாலும் இருக்கலாம். நானெப்டி உன் கேரக்டரை தப்பு சொல்றது?''

''என்னை பாத்தா உனக்கு பயம் வருதா?''

''நீ பண்ற 'டமார் டுமார்'ல கொஞ்சம் படபடப்பு ஏற்படுது!''

''காதலை பத்தி உன் அபிப்ராயம் என்ன?''



''காதல் ஒரு நுட்பமான விஷயம். உயிரெடுக்கும் விஷமாகவும் உயிர் காக்கும் மருந்தாகவும் செயல்படும் விநோத அபௌதிக வஸ்து காதல்.''

''நீ இதுவரை யாரையும் காதலிச்சிருக்கியா?''

''இல்லை!''

''பொய்சொல்லாத அரவிந்த். இதுவரைக்கும் எந்த பொண்ணையும் பார்த்து நீ உடல் கிளர்ச்சி அடைந்ததில்லையா?''

''உடல் கிளர்ச்சி வந்திருக்கிறது; காதல் வந்ததில்லை!''

''யாராவது உன்னை காதலிப்பதாக கூறியிருக்கிறார்களா?''

''சிலர் கூறியிருக்கின்றனர். நாசுக்காக மறுத்திருக்கிறேன்!''

''யாரிடமாவது 'ஐ லவ் யூ' சொல்ல விரும்பியிருக்கிறாயா?''

''இல்லை!''

''என்னை நீ ஒரு பெண்ணாகவே கருதலையா?''

''சேச்சே.... அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை பவதாரிணி!''

''நீ படிச்சு முடிச்சு வேலைக்கு போனதும் திருமணம் பண்ணுவதானே?''

''நிச்சயமா திருமணம் பண்ணிக்குவேன்!''

''உனக்கு அடங்கி நடக்கும் ஒரு அடிமையை கல்யாணம் பண்ணிப்ப!''

''அப்படியில்லை!''

''அரவிந்த்!'' குரலில் மிடுக்கு ஏற்றினாள். ''என்னைப்பார்! என் கண்களைப்பார்! எத்தனையோ செய்திகளை சொல்லத் துடிக்கும் என் உதடுகளை பார். இன்னுமா உனக்கு புரியவில்லை - உன்னை ஏன் தனியா பேச

கூப்டேன்னு. என்னைக்கு உன்னை பாத்தேனோ அன்னைக்கே உன் மேல உலக காதலாய்ட்டேன். மிருதுவான- சங்கோஜமான- ஹைக்கூக் கவிதைத்தனமான உன் பொசனாலிட்டி எனக்கு மிகவும் பிடிக்கும். நம் இருவருக்கும் எதிர் எதிர் குணங்கள். எதிர்எதிர் குணாதிசயம் கொண்ட ஆணும் பெண்ணும்தான் சிறந்த தம்பதியாய் விளங்குவர். ஆறு வருஷமா காத்திருக்கேன். மண்டலம் மண்டலமா காளி கோயிலுக்கு எலுமிச்சை அகல் விளக்கு எத்தி என் காதல் கைகூட ஆத்தாளை இறைஞ்சியிருக்கேன். நீ மொதல்ல ஐ லவ் யூ சொல்வன்னு பாத்தேன். பட் நீ சொல்லல. வெககத்தை விட்டு நான் மொதல்ல பரபோஸ் பண்றேன் அரவிந்த். நான் உன்னை நேசிக்கிறேன்!''

மௌனித்தான் அரவிந்த்.

''ஏன் பதில் சொல்லாம நிக்ற அரவிந்த்?''

''என்ன பதில் சொல்றதுன்னு தெரியல!''

''பிடிக்குது- பிடிக்கல- ரெண்டுல ஒரு பதிலைச் சொல்லு!''

பதில் பேசவில்லை அரவிந்த்.

''என்னுடைய நடவடிக்கைகளை அருவெறுப்பாய் உணர்கிறாயா?''

''இல்லையே. உன்னுடைய நடவடிக்கைகளை மகாபிரமிப்புடன் வேடிக்கைதான் பார்த் திருக்கிறேன்!''

''ஆனா நீ என்னைக் காதலிக்கல - அப்படித் தானே?''

''உன்னை எவ்வித தனிப்பட்ட உணர்வோடும் நான் பாத்ததில்ல. நவீன பெண்களின் ரோல்மாடல் - நீ. அவ்வளவுதான்!''

''கடந்த நொடிகளை விடு. நடப்பு நொடிக்கு வா. நான் என் காதலை அறிவித்து விட்டேன். நீ



என்ன செய்யப் போகிறாய்?''

படபடத்தான். ''எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல!''

''ஏதாவது சொல்லு!''

''பவதாரிணி! எல்லா ஆண்களையும் போல நானும் சிறுசிறு தப்புகள் செய்வேன். யாருக்கும் தெரியாம தம் அடிப்பேன். சில பல சமயம் பீர் குடித்திருக்கிறேன். பெண்கள் சம்பந்தமான தப்பு எதுவும் நான் செய்ததில்லை. ஆசை இருக்கு. எய்டஸ் கிய்ட்ஸ் வந்திரும்ன்ற பயதல பெண்கள் சாரந்த தவறு நான் செய்யல. நாளைக்கு நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா ஏதாவது சிறுசிறுதப்பு செஞ்சாக் கூட தடாலடியா அதிரடியா கண்டிப்பா தண்டிப்பன்னு ஒரு பக்கம் பயமா இருக்கு. உன்கூட நடக்கும் போது நான் என்னையும் அறியாம ஏதாவது ஒரு பொண்ணை பராக்கு பாத்துட்டா- வீட்டுக்கு என்னை இழுத்துட்டு வந்து என் கண்ணுல சூடுகீடு போட்ருவியோன்னும் இன்னொரு பக்கம் உதறல் எடுக்குது''.

விழுந்து விழுந்து சிரித்தாள் பவதாரிணி. ''அப்படியெல்லாம் எதுவும் பண்ணமாட்டேன். அரவிந்த்!''

''நானும் உன்னை காதலிக்றதா சொல்றேன்னு வச்சுக்க. உன் பெற்றோரும் என் பெற்றோரும் நம்ம காதலுக்கு ஒத்துக்கணுமே?''

''ஒத்துக்க வைக்றது என் பொறுப்பு!''

''இன்னைக்கு லெவல்ல உனக்கு என்னை பிடிக்குது. நாளைக்கி என்னைவிட பெரிய லெவலுக்கு போய்டுவ நீ. உன் காதலை அடைய ஆயிரம் ஆண்கள் முயற்சிப்பர். அன்னைக்கு நீ என்னை போடான்னு ஒதுக்கிட்டா?''

''என்னுடைய வாழ்வும் சாவும் உன்னோட தான் அரவிந்த். இனி உன் வாழ்க்கையில் ஆயிரம்

பெண் கடந்து செல்வர். இனி என் வாழ்க்கையில் ஆயிரம் ஆண்கள் கடந்து செல்வர். யாருமே நமக்கு உறவாக உயிராக முடியாது. அரவிந்த்துக்குள் பவதாரிணியும் பவதாரிணிக்குள் அரவிந்தும் ஐக்கியமாகி விட்டனர்.''

''எல்லாம் சரி பவதாரிணி, என்னை திருமணம் செய்து கொண்டால் வாழ்வின் எத்தருணத்திலும் நீ என் மீது கோபப்படக்கூடாது என சத்தியம் செய். நான் உன்னை நேசிப்பதாக உரக்க அறிவிக்கிறேன்!''

''சத்தியமா உன்னை ஆயுளுக்கும் கண்கலங்காம பாத்துப்பேன்!''

''நான் உன்னை நேசிக்கிறேன் பவதாரிணி!'' இதயத்தின் ஆழத்திலிருந்து அறிவித்தான் அரவிந்த்.

ஷிக்ஷிக்ஷிர்ரஷிக். பவாவுக்கும் அரவிந்த்துக்கும் இடையே ஒரு புதிய உறவு முடிச்சு விழுந்தது. அது இருவரையும் எதிர்காலத்தில் எத்தகைய அதள பாதாளங்களில் உருட்டித் தள்ளப் போகிறது என்பதனை இருவரும் அந்த கணம் அறிந்தார்களில்லை!

## 5

**வ**குப்பறை. பாடம் நடத்திக் கொண்டிருந்தார் கமலநாதன். திடீரென்று இடது நெஞ்சில் கனத்து வலித்தது. முகமெங்கும் வியர்த்தது.

உதடுகளை சுளித்தபடி சுருண்டார். மாணவர்கள் பதைபதைப்பாய் ஓடி வந்தனர்.

ஒரு மாணவன் உலா தொலைபேசி எடுத்து நடேசபுரம் ஓ.பி.யை தொடர்பு கொண்டு ஆம்புலன்ஸை அனுப்பச் சொன்னான்.



வலியால் துடிக்கும் கமலநாதனை ஆம்புலன்ஸுக்குள் ஏற்றினர். செயற்கை சுவாச முகமூடி பொருத்தப்பட்டது.

இன்டென்ஸிவ் கேர் யூனிட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இருதயத்தில் ஏற்பட்ட இரத்த உறைவை கரைக்க விசேஷ மருந்தை செலுத்தினர்.

நான்கு மணிநேர போராட்டத்துக்கு பின் கமலநாதனின் உடல்நிலை சற்றே சீரடைந்தது. இருதய மருத்துவர் ஐ.ஸி.யூ. விலிருந்து வெளியே வந்தார்.

அவரிடம் பவதாரிணி ஓடினாள். ''மறைக்காம சொல்லுங்க டாக்டர் எப்படி இருக்கு?''

''இன்னும் அதிகபட்சம் ஆறுமணி நேரம் உயிரோட இருப்பார்... நீங்களும் உங்களது தாயாரும் எதாவது பேச விரும்பினா போய் பேசுங்க. பத்து நிமிஷத்துக்கு மேல் அதுவும் கூடாது. தொடாம பேசுங்க!''

செவிலியர் நங்கை கொடுத்த ஏப்ரன்களை கட்டிக்கொண்டு அப்பாவிடம் ஓடினாள். அப்பாவின் முகத்தில் நிலா அடித்திருந்தது.

அப்பாவின் முகத்தருகே குனிந்தாள். ''என்னப்பா இதெல்லாம்?''

''நான் போற நேரம் வந்திருச்சு!''

''இந்த எண்ணம் இருந்தா மரணத்தை எப்படி விரட்றது? உங்களோட பேரக் குழந்தைகளுக்கு கல்யாணம் பண்ணி பாத்திட்டு போகலாமில்ல?''

எதிர்மறையாய் தலையாட்டினார். ''வாழ்க்கை போரடிச்சு போச்சும்மா. வாத்தியார் தொழிலே அரைச்ச மாவை அரைக்கிறதுதானே? அதுவும் தத்துவ யியல் வாத்தியார்னா கேக்கவே வேணாம். விரும்பின அளவு படிச்சிட்டேன். 'படிச்சத போதுமான அளவுக்கு பிறருக்கு சொல்லிக்

குடுத்திருக்கேன். குடும்பஸ்தனாயிருந்து மூணு மகள்களை வேற பெத்திருக்கேன். போதும்மா. போய்டுறேன்!''

''ஸ்.... இப்டி பேசக்கூடாது..... அம்மாவுக்காக நீங்க கொஞ்ச நா இருக்கக்கூடாதா?''

மனைவியை அர்த்தபுஷ்டியாய் வெறித்தார்.

''நான் இருந்து அம்மாவுக்கு விசேஷமா செஞ்சது எதுவுமில்லை. தத்துவயியல் புத்தகங்களையும் தினசரிகளையும் வாசிச்சுக்கிட்டு இருப்பேன். அவ சமையல் வேலைகளை பாத்துக்கிட்டுருப்பா. மூணு குழந்தைகளை பெத்ததுமே எங்களுக்கு தாம்பத்யத்தின் மீதிருந்த லயிப்பு அறவே அத்து போய்ருச்சு. கடந்த பதினோரு வருஷமா நான் உங்கம்மாவின் விரல் நுனியைக் கூட தொட்டதில்லை. வயதுக்கு வந்த மகள்களின் முன் கண்ணியம் காக்க வேண்டுமல்லவா?''

பவதாரிணி அழுதாள்.

''அட, உனக்கு அழக்கூடத் தெரியுமா? தெரியாத காரியங்கள்ல ஈடுபடாதே. லஜ்ஜையான விஷயங்களை உன்கிட்ட பேசறேனேன்னு பாத்தியா? நீ எனக்கு மகன் மாதிரி. உன்கிட்ட மறைக்கறதுக்கு ஒண்ணுமில்லை!''

''அதிகம் பேசாதிங்கப்பா. மூச்சிரைக்குது உங்களுக்கு!''

''நான் நசநசன்னு பெய்ற ஐப்பசி மழை. பால் குடுத்த பிறகும், தாலாட்டிய பிறகும், ஈர ஆடை மாற்றிய பிறகும், நள்ளிரவில் தொடர்ந்து அழும் கைக்குழந்தை நான். கொஞ்ச நேரமாவது இந்த மழை நின்னு தொலைக்கக் கூடாதான்னு திட்டுவோம். எல்லாம் செஞ்சும் குழந்தை அழுது பிராணனை வாங்குதே - குழந்தை அழுகையை கொஞ்சநேரம் நிறுத்தக் கூடாதான்னு மனம் பேதலிப்போம். அம்மாவுக்கு நான் இல்லாம இருந்தா பெரிய சிலீப். ஹாயா இருப்பா. அவளுக்கு



விரும்பியதை செய்வா. எப்போதும் அழுதுவடியும் அவளது முகம் பிரகாசிக்கும்!''

''அப்பா என்னை பத்தி ஏதோ சொல்றார் போல!''

''இல்லம்மா... இதுவேற விஷயம்....''

''மரணத்தைக் கண்டு எல்லோரும் ஓடுறோம். ஏன் ஓடணும்? மரணம் தித்திப்பானது. மரணம் பேரானந்தமானது. மரணம் மனித ஆன்மாக்களை ஒளிவெள்ளத்தில் கரைக்கும் ஓர் ஊடகம். மரணம் அமைதியானதொரு நீள் தூக்கம். மரணம் மனிதர்களை உலக அவலங்களிலிருந்து மீட்கும் தேவ மேய்ப்பன்.''

எதிர்வார்த்தை பேசாமல் மௌனித்தாள்.

''ஒரு விஷயம் நான் சொன்னா நீ ஆச்சரியப் பட்டு போவாய்!''

''என்னப்பா?''.

''அம்மாவின் மீது எனக்கு அளவிட முடியாத காதல்''

''ஆனா.... நீங்க அந்த காதலை அம்மா மீது எப்போதுமே காட்டியதாகத் தெரியவில்லையே....''

''அன்பு எல்லோரிடமும் இருக்கிறது. ஆனாலும் அதனை எத்தனை பேருக்கு முறைமையா காட்டத் தெரிகிறது? தினசரிகளை வாசிப்பது போல் பாவனை செய்து கொண்டே அவளது நடைஉடை பாவனைகளை ரசிப்பேன். இன் ஃபேக்ட் ஒரு உண்மையைச் சொல்லணும்னா அவ அழகுல பாதிகூட நீங்க யாரும் இல்லை. அடுத்த பிறவின்னு ஒண்ணு இருந்தா நான் மனைவியாகவும் உங்கம்மா கணவனாகவும் பிறக்க வேண்டும். அப்பத்தான் இந்த பிறவில நான் உங்கம்மாவுக்கு பட்ட கடனை அடைக்க முடியும்!''

''வாட் இஸ் திஸ்? இந்த நோத்ல இதெல்லாம் பேசலாமா?''

''இது போலொரு வாய்ப்பு இனி பேச கிடைக்காது மகளே... அணையப்போகிற விளக்கு பிரகாசமாய் எரியுமென நீ கேள்விப்பட்டதில்லையா பவா?''

விரக்தியால் ஹூம் கொட்டினாள் பவதாரிணி.

''என் நேரம் நெருங்கிட்டுருக்கும்மா.... (சூன்யத்தை வெறித்து) இதோ எங்கம்மாப்பால்லாம் வந்து நிக்கறாங்க. இன்னும் என்னடா வெட்டிப் பேச்சு கிளம்புடா-ன்னு அவசரப்படுத்றாங்க. சித்த வெயிட் பண்ணுங்கோ என் மக கிட்ட ரெண்டு முக்யமான காரியம் பேசிட்டு வந்திடுறேன்-னு சொன்னேன். சரின்னு சொல்லிக் காத்துக்கிட்டுருக்காங்க!''

சுற்றும் முற்றும் காற்றில் தேடினார். எதுவும் காணக் கிடைக்கவில்லை.

''சரி, பேச வேண்டியதை பேசிடுறேன். பவா! உன்கிட்ட நான் மூணு பெண் குழந்தைகளை விட்டுட்டுப் போறேன். மொத பெண் குழந்தை -என் பொண்டாட்டி சீதாலெட்சுமி. அவளை பத்ரமா பாத்துக்க. அவ விரும்பினபடி இருக்கட்டும். அவ கேக்ற வர்ணத்ல புடவை வாங்கிக் குடு. அவளோட நாக்குக்கு ருசியா பலகாரம் செஞ்சு போடு. மொத்தத்ல அவளுக்கு நம்ம புருஷன் போய்ட்டானேன்ற மனவேதனை வரவே கூடாது!''

''ஓகேப்பா!''

''கமலநாதனின் மூணு மகள்களும் லௌகீக வாழ்க்கைல மிகப்பெரிய வெற்றிபெறணும். நீயும் ஜெயிச்சு உன் தங்கைகளையும் ஜெயிக்க வை. உன் தங்கைகளை நீ தாயுமானவளா தந்தையு மானவளா நின்னு பாத்துக்கிடணும். 'கமலநாதன்னு ஒருத்தர் யூனிவர்சிட்டில பிலாஸபி புரபஸரா இருந்து மறைந்தார்' என்ற டயலாக் பேசப்படணும். உங்க மூவரின் குழந்தைகள் உங்க மூணு பேரையும் விட மிகச் சிறப்பா செயல்படணும். மொத்தத்தில் நம்ம



தலைமுறையின் புகழ் ஏறுமுகமா இருக்கணும்...''

''அப்படியே செய்றோம்ப்பா!''

''நான் இறந்துட்டா நீங்க யாரும் வாய்விட்டு அழக்கூடாது. கண்ணியம் காக்கணும். ரொம்ப தூரத்ல இருக்ற நம்ம உறவுக்காரங்க யாரையும் போன பண்ணியோ தந்தி அடிச்சோ கூப்ட்ராதிங்க. செய்தி கிடைச்ச ஒரே காரணத்துக்காக அவங்க பதினைஞ்சு மணிநேரம் இருபது மணிநேரம் ட்ராவலிங் மேற்கொள்ளக்கூடும். வர்றவங்க என்னை திட்டிக்கிட்டேதான் வருவாங்க. உள்ளூர்ல இருக்கறவங்க தானா வருவாங்க. அவங்களுக்கும் தகவல் தெரிவிக்காதிங்க. என்னோட அஸ்தியை தத்துவவியல் துறை நூலகத்தில கொஞ்சம் தூவி விடுங்க. கொஞ்சத்தை சாஸ்திரி ஹாலுக்கு எதிர்த்தாப்ல இருக்கும் பவுண்டைன்ல கரைச்சிருங்க. கொஞ்சத்தை கிள்ளை கடல பகுதிலயும் கொஞ்சத்தை போர்ட்னோவா கடல்லயும் கரைச்சிடுங்க...''

கண்ணீருடன் தலையசைத்தாள் பவதாரிணி.

''அஸ்தி அஸ்தின்னு பேசுறேனே.... எனக்கு யார் கொள்ளி வைக்கணும்னு இன்னும் நான் சொல்லல பாரு....''

''சொல்லுங்க!''

''நீதான்ம்மா. நீதான் வைக்கணும். நீ கொள்ளி வச்சாத்தான் சிரமமில்லாம எரிஞ்சு சாம்பலாவேன்!''

''வைக்றேன்ப்பா!''

சீதாலெட்சுமி பவதாரிணியின் காதுகளில் ஏதோ முணுமுணுத்தாள்.

''அம்மா என்ன சொல்றா?''

''என் கூட மட்டும் பேசுறீங்களாம். அம்மா கூட பேசமாட்டீங்களான்னு அம்மா கேக்குது!''

''நியாயமான கேள்வி. என் வாய்க்கு பக்கத்ல குனியச்சொல்லு!''

குனிந்த சீதாலெட்சுமி அழுதாள்.

''ஏன் அழற?''

''நீங்க இல்லாம நா எப்டி உயிர் வாழப் போறேன்?''

''அதெல்லாம் ஒரு சிரமமும் இல்லை. சீதா! அடியே சீதா!''

''என்னங்க?''

''நான் உனக்கு ஏதாவது தப்பு பண்ணியிருந்தா- உன் மனம் கோணும்படி நடந்திருந்தா - நாராசமாய் திட்டியிருந்தா என்னை மன்னிச்சிருடி சீதா!''

''நீங்க என்னைக்குமே என்னை மோசமா நடத்தினதில்லை... நா எதுக்கு உங்களை மன்னிக்கணும்? நான் உங்க மனம் கோணுகிற மாதிரி பல சமயம் நடந்திருக்கேன். பெரிய மனசு பண்ணி ...ன்னிச்சிருங்கோ!''

''கையைக் கொண்டாடி!''

வாங்கி பாதி செயலிழந்து போன தனது இடது கைக்குள் பொத்திக் கொண்டார்.

''நான் புறப்படட்டுமா சீதா?''

''என்னங்க சொல்றீங்க?''

''நேரம் வந்திருச்சுடியம்மா. இதோ எங்கம்மா அப்பா வந்திட்டாங்க. சீதா! அம்மா பவதாரிணி! நான் கிளம்புறேன்ம்மா!''

உடலின் இரத்தத்திலிருந்து அருபவடிவமாய் உயிர் கோர்த்து நாசி வழி விரிந்தது. முகம் புன்னகையில் உறைந்தது. கமலநாதனின் ஆன்மா பெற்றோரின் கைகளை பிடித்துக் கொண்டு ஏழாம் வானம் பறந்தது.

வாய்விட்டு அழத்தோணாமல் ஸ்தம்பித்து சீதாலெட்சுமியும் பவதாரிணியும் நின்றிருந்தனர்.

தந்தைக்கு கொள்ளி வைத்தாள். சிதை திருப்தியாய் எரிந்தது. எவ்வித துர்நாற்றமும் இல்லாமல்



சந்தனக் கட்டைகளுடன் இணைந்து எரிந்து சாம்பலானது கமலநாதனின் பூத உடல்.

அஸ்தியை தந்தையின் விருப்பத்துக்கு கரைத்தாள் பவா.

சீரியல் லைட் சதுரத்தில் அப்பா கமலநாதன் அமானுஷ்யமாய் புன்னகை சிந்தினார்.

இடது கக்கத்தில் தாயையும் வலது கக்கத்தில் இரு தங்கைகளையும் சேர்த்து அணைத்தபடி பவதாரிணி முணுமுணுத்தாள்.

''அம்மா உட்பட மூன்று பெண் குழந்தைகளையும் சிறப்பாய் பராமரிப்பேன்ப்பா. நம் குடும்பம் சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தை அடைய உயிரைக் குடுத்து உழைப்பேன்ப்பா. இது சத்தியம்.!''

'மனிதர் நினைப்பதெல்லாம் நடந்து விடுமா...? அல்லது நான் நடக்கத்தான் விட்டுவிடுவேனா?' என எக்காளமிட்டு சிரித்தது விதி. விதியின் வாயோரம் இரத்தம் இரத்தம்!

## 6

**ஸ்**வாதி தயங்கி தயங்கி அக்காளை நெருங்கினாள். பவதாரணி எம்.பி.ஏ. முடித்துவிட்டு மணிமேகலைப் பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளராக சேர்ந்திருந்தாள். அரவிந்த்தும் சகவிரிவுரையாளராக பணி சேர்ந்திருந்தான்.

மறுநாள் வகுப்பெடுக்க தகவல் குறிப்புகள் சேகரித்துக் கொண்டிருந்த பவா, ''என்ன ஸ்வாதி?''

''ஒரு சிறு விண்ணப்பம்!''

''என்ன?''

"நான் பயோ-டெக் முடித்துவிட்டு வேலை வாய்ப்பு செய்திகளை வாசித்துக் கொண்டிருக்கிறேன். கடைக்குட்டி தங்கை எம்.பார்ம். படித்துக் கொண்டிருக்கிறாள். அம்மா நிம்மதியாக பகவத் கீதையையும் மகாபாரதத்தையும் வாசித்துக் கொண்டிருக்கிறாள். நீயும் பணிக்கு போய் விட்டாய்!"

"நீட்டி முழக்காதே. என்னதான் சொல்ல வருகிறாய் ஸ்வாதி?" என்றாள்.

"காலாகாலத்தில் திருமணம் செய்து கொள் என்கிறோம்!"

பவாவின் முகம் கோபத்திலிருந்து சிரிப்புக்குத் தாவியது. "எவடி உனக்கு சொல்லிக் குடுத்தது?"

"நான்தான்!" என நெஞ்சில் கைவைத்து கூறியபடி ஸ்வாதிக்கு பின் தோன்றினாள் கஸ்தூரி.

"பொடிகழுதை பொடிகழுதை! உனக்கு எவடி சொல்லிக் குடுத்தது?"

"நான்தான்!" என வலது கையை உயர்த்தியபடி தோன்றினாள் சீதாலெட்சுமி.

"அம்மா நீயுமா?"

"நான்தான் இவங்க ரெண்டு பேரையும் தூண்டி விட்டது. உனக்கு கல்யாண வயசு வந்து ரெண்டு வருஷம் ஓடிருச்சு!"

"நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா என் அம்மாவையும் என் இரு தங்கைகளையும் யார் பாத்துக்கிறது?"

"உனது கல்யாணம் உன் தங்கைகளின் எதிர் காலத்துக்கு உதவவே செய்யும். தயங்காம நீ திருமணம் செஞ்சிக்கலாம்!"

மேஜையைத் தட்டிச் சிரித்தாள் பவதாரிணி.

"என்னம்மோ நூறு மாப்பிள்ளைகள் நம்ம வீட்டு வாசல்ல நின்னு முட்டி மோதிக்கிற மாதிரி



பேசறீங்க! நான் ஒரு ரௌடி. பெண் உருவில் இருக்கும் ஆண். என்னை போய் எவன் கட்டிக் குவான்?"

"சும்மா எங்களை ஆழம் பார்க்கிறாயா பவாக்கா?" ஸ்வாதி.

"உன் கதையெல்லாம் எங்களுக்கு நல்லா தெரிஞ்சு போச்சு!" கஸ்தூரி.

"என்ன கதை?"

"காதல் கதை !"

"என்னடி உளர்றீங்க?"

"அரவிந்தும் நீயும் காதலிக்கல?"

மழுப்பலாய் சிரித்தாள். "அந்த தொடைநடுங்கி பய்யனை நான் காதலிக்கிறேனா... எந்த முட்டாள் சொன்னது?"

"மாமாவை தொடைநடுங்கி பய்யன் கிடை நடுங்கி பய்யன்னு பேசாதே. நீ அரவிந்த்தை காதலிக்கலதானே?"

"ஆமாம்!"

"சத்தியமா?"

"அப்டின்னா நான் அரவிந்த்தை கல்யாணம் பண்ணிக்கிறேன். நீ அரவிந்த் பெற்றோர்கிட்ட இது பற்றி பேசுறியா?"

"எய்!" என கூவியபடி பாய்ந்தாள் பவா. ஸ்வாதியின் குரல்வளையை பிடித்து நசுக்கினாள். ஸ்வாதியைக் கொண்டு போய் சுவரில் சாத்தினாள். ஸ்வாதியின் பின்னந்தலை 'ணங்' என சுவரில் அடிபட்டது. பொறி கலங்கிப்போனாள் ஸ்வாதி.

துள்ளத்துடித்தாள் ஸ்வாதி. ஸ்வாதியிடமிருந்து பவாவை பிரித்தெடுக்க கஸ்தூரியும் சீதாலெட்சுமியும் பிரம்ம பிரயத்தனம் செய்தனர்.

"விடுறி விடுறி... அவ கழுத்த விடுறி! செத்துகித்து போய்டப் போறா!"

பிடி விலகவில்லை.

சீதாலெட்சுமி ஆங்காரமாய் பவதாரணியி கன்னத்தில் அறைந்தாள். "விடுறின்னா!"

"அக்காவுக்கு புருஷனாக வரப் போறவன எப்டிடி கேட்ப?"

குரல்வளையை தடவிக் கொண்டா ஸ்வாதி. புரையேறியது. கண்கள் சிவக்க கண்ண ததும்ப இருமினாள். அப்படியே தரையில் அமர்ந் கொண்டாள். தாளாமல் மல்லாக்க படுத்து கொண்டாள்.

பிரக்ஞை மீண்டு பவதாரிணி முழங்காலிட் தங்கையின் குரல்வளையை தடவிக் கொடுத்தா "மன்னிச்சுக்கடி, கோபத்துல என்ன பண்றேன் ஏத பண்றேன்னு தெரியாம நடந்துக்கிட்டேன் உனக்கு அரவிந்த்தான வேணும்... கட்டிக்கடி!"

"கதைவசனத்தையே மாத்றியே பவாக்கா உனக்கும் அரவிந்த்துக்கும் இருக்ற காதல் எங்களுக்கு நல்லாத் தெரியும். அரவிந்த் உன் கிட்டதான் பயந்து பயந்து பேசுவாரே தவிர எங்ககிட்ட ஜாலியா பேசுவார். அவர் கல்யாணத் துக்கு அவரசப்படுறார்க்கா. அவர் சார்பாத்தான் நாங்க பேச வந்தோம்!"

"அவனுக்கு அதுக்குள்ள கல்யாணம் கேக்குதோ? எங்கே அவன்? நாலு போடு போட்டா சரியாய்டுவான்!"

"அப்ரக்க தப்ரா! மிஸ்டர் அரவிந்த் வெளிய வாங்க!"

பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு வெளிவந்தான் அரவிந்த்.

"அட திருட்டுப்பய்யா! இதெல்லாம் உன் வேலையா?"

அசடு வழிய சிரித்தான் அரவிந்த்.

"உனக்கு அவசரம்னா யாரையாவது கட்டிக்க...



என்னை விட்ருப்பா!"

சீதாலெட்சுமியிடம் ஓடிப்போய் முறையிட் டான். "பாருங்கத்த - பவா குண்டக்கமண்டக்க பேசறதை. நீங்கதான் பவாகிட்ட பேசி பவாவை திருமணத்துக்கு சம்மதிக்க வைக்கனும். மாமா காலமாகி மூனு வருஷமாகுது. வீட்ல நாலு பெண் கள் வளையவளைய வரீங்க. ஒரு ஆண்துணை வேணாமா? நான் உங்க மூத்தமக பவதாரிணிக்கு நல்ல கணவனாகவும் உங்களுக்கு அன்பான மகனாகவும் ஸ்வாதிக்கும் கஸ்தூரிக்கும் பாசமான சகோதரனாகவும் நடந்துப்பேன். என்னை நம்புங்க அத்த. அர்த்தமில்லாத காத்திருத்தல் எதுக்குன்னு கேளுங்கத்த!"

நுனிநாக்கு துருத்தி மிரட்டினாள் பவதாரிணி.

"இந்த டயலாக்கெல்லாம் யார் எழுதிக்குடுத்தா? எத்னி நாளா மனப்பாடம் பண்ணின?" பதில் சொல்லாமல் சிரித்தான்.

"சிரிச்சு சிரிச்சே ஆளை மயக்கிடுவான் இந்த அரவிந்த். (திரும்பி) நிஜம் போலவே உனக்கு கோபம் வராதா? அல்லது கல்யாணம் ஆகிற வரைக்கும் நடிப்போம்னு நடிக்றியா? படுவா படுவா!"

அதற்கும் சிரித்தான் அரவிந்த்.

"இப்டி என் பக்கத்ல வா அரவிந்த்!"

பக்கத்தில் போய் நின்றான்.

"என்னை எதுக்கு நேசிக்ற? ஒரு பெண் சிங்கத்தை ஒரு ஆண்மான் காதலிக்கலாமா? சிங்கம் தனது காதலைக் காட்ட ஆண்மானை உயிர் போக ஒரு சாத்தல்லவா சாத்தும்?"

அரவிந்த்தின் கண்கள் படபடத்தன. சில நொடிகளில் அவனது கண்கள் ஈரமாகின.

"நான் உன் மேல உயிரையே வச்சிருக்கேன். நான் திருமணத்திற்கு அவசரப்படுவதற்கு காரணம் அற்ப ஆசைகளினால் அல்ல. ஒதுங்கி நின்று

வேடிக்கை பார்க்காமல் உங்க குடும்பத்தோ
குடும்பமாய் ஐக்கியமாக அபிலாஷிக்கிறேன்."

"நீ இம்முன்னு தலையசைச்சா கடன பேங்
போட ஓடி வந்திடுறேன்ற டயலாக்கை மற
திட்டியா?"

"நான் ஏன் ஓடி வரணும்? நம்ம கல்யாண
திருட்டுக் கல்யாணமாக நடக்காது. ஜி.வெ
வாண்டையார் மண்டபத்ல ஜாம்ஜாம்னு நடக்கும்

"நம்ம கல்யாணத்துக்கு உன் பெற்றோ
சம்மதிப்பாங்களா?"

"ரொம்ப தாமதமான கேள்வி இது. எ
பெற்றோரும் உனது தாயாரும் ஏற்கனவே பலமுறை
இதுபற்றி பேசியிருக்காங்க. எல்லாரு
காத்திருக்றது உன் மனசு மாறத்தான்!"

புகைய புகைய சிரித்தாள் பவதாரிணி.

"பார்ரா நமக்குத் தெரியாம நாட்ல எவ்
காரியம் நடக்குதுன்னு! வெரிகுட்! வெரிகுட்!"
கைகளைத் தட்டினாள்.

"கல்யாண தேதியும் குறிச்சு மண்டபத்துக்கு
அட்வான்ஸும் குடுத்துட்டு வந்திருக்க
வேண்டியது தானே?"

"நீ இப்ப உன் வாயால சம்மதம் தெரிவி. மத்த
காரியங்களை மளமளன்னு நடத்தி முடிச்சிரலாம்
ப்ளீஸ் ப்ளீஸ்.... யோசிக்காம தலையாட்டிரு!"

ஸ்வாதி ஒருபக்கம் சமிக்ஞையால் இறைஞ்சி
னாள்.

கஸ்தூரி 'சம்மதம் சொல்லு பெண்ணே!' என
பரதநாட்டிய பாவனைகள் காட்டினாள்.

சீதாலெட்சுமி அப்பாவின் புகைப்படத்தைக்
காட்டி, 'நீ உடனடியாக திருமணம் செய்து
கொள்வது அப்பாவுக்கு பிடித்தமான காரியம்!' என
பேசாமல் பேசினாள்.

அப்பாவின் புகைப்படத்துக்கு நடந்து



போனாள் பவதாரிணி.

"நீங்க என்ன சொல்றீங்கப்பா?"

சில நொடிகளுக்கு பிறகு அப்பாவின் முகம் அசைந்தது.

"கல்யாணம் தானே? பண்ணிக்கயேன்! இது ஒரு சிறப்பான யோசனைதான்!"

பவதாரிணி சரேலென்று திரும்பினாள். "நான் திருமணத்துக்கு சம்மதிக்கிறேன். ஆனா ஒரு கண்டிசன்!"

"என்ன கண்டிசன்?"

"திருமணம் ஆடம்பரமாக நடக்கக்கூடாது. எளிமையான பதிவுத் திருமணத்துக்கு நான் தயார்."

"நல்ல யோசனை பவா!"

"இந்த யோசனையை உன் பெற்றோர் ஏற்றுக் கொள்வார்களா?"

"ஏற்றுக்கொள்ள வைக்கிறேன்!"

அடுத்த இருவாரங்களில் பவதாரிணி-அரவிந்த் திருமணம் எளிமையாக நடந்தேறியது.

முதலிரவுக் கட்டில்.

பவதாரிணியும் அரவிந்தும் அருகருகே அமர்ந்திருந்தனர்.

"அரவிந்த்! நம்ம திருமணத்தின் நோக்கமே ஸ்வாதி, கஸ்தூரிக்கு சிறப்பான எதிர்காலத்தை அமைத்துத் தருவதுதான். அதற்கு சிறு பங்கமும் வந்துவிடாது நாம் கட்டுப்பாடான பத்திய - தாம்பத்யம் நடத்துவோம்."

"அப்படியே நடந்துப்போம். இப்ப நான் உன்னைக் கட்டியணைக்கலாமில்லையா?"

சிரித்தாள். அணைத்துக் கொண்டான். காரு முரடான செய்யுள்கள் இரவு முழுக்க எளிய வடிவ ஹைக்கூ கவிதைகளாய் வடிவம் மாறி ஒலித்தன.

## 7

உலா தொலைபே
சிணுங்கியது.
முனையில் ஸ்வாதி. "க
"என்னடி?"
அதட்டினாள் பவதாரணி.

"எ... எ... எனக்கு ஒரு சின்ன ப்ராப்ளம்!"

"என்ன ப்ராப்ளம்?"

"ரெண்டு மாசமா என்னை ஒருத்தன் பாடே பண்ணிக்கிட்டே இருக்கான். எப்டியோ என் செ போன் நம்பர் தெரிஞ்சிக்கிட்டு போன்ல நல விசாரிக்கிறான். எஸ்.எம்.எஸ். அனுப்புகிறா எனக்கு பயமாயிருக்கு!"

"அவனோட பெயர் என்ன சொன்னான்?"

"முரளியாம்!"

"அவனை நேரில் பாத்திருக்கியா?"

"ரெண்டு மூனு தடவை!"

"எங்க?"

"ஸ்ரீமதி கம்ப்யூட்டர்ஸ்ல!"

"என்ன... படிக்கிறானா?"

"படிச்சு முடிச்சிட்டு இரால்மீன் பண்ணை வச்சிருக்கான் போல!"

"அவனைக் கண்டுபிடிச்சு மிதிமிதின்னு மிதிச்சு...."

"அய்யய்யோ... அதெல்லாம் பண்ணிட வேண்டாம்!"

"வேற என்ன பண்ணலாம்?"

"என்னைத் தொந்திரவு பண்ணாம விலகிப் போகச் சொல்லு!"

"விலகிப் போக மறுத்தா?"



"போலீஸ்ல கம்ப்ளைன்ட் குடுப்போம்னு சும்மானாச்சுக்கும் மிரட்டு!"

"மிரட்டினா பயந்திருவானா?"

"அது சந்தேகம் தான்க்கா!"

"அவனை வேற என்னதான் பண்ணச் சொல்ற?"

"அவனைக் கூப்ட்டு தோரணையா விசாரி. அவன் எனக்கு சும்மா பொழுது போகிறதுக்கு போன் பண்றானா, இல்ல என் மேல பைத்தியமாகி போன் பண்றானான்னு கேட்டுத் தெரிஞ்சிக்க. என்னை மெய்யாலுமே லவ் பண்றான்னா பேசாம அவனை எனக்கு கட்டி வச்சிரு!"

"ஏய் என்னடி பேச்சு ட்ராக் மாறுது? அக்காகிட்டயே இப்டி பேச உனக்கு தைரியம் வந்திருச்சா?"

"நேரா பேச தைரியம் வராதுன்ற காரணத்துக்காகத்தான் ஸெல்போன்ல பேசறேன்!"

"பையன் எப்டிடி இருப்பான்?"

"மேன்லியா இருப்பான்!"

"வீட்டுக்கு ஒரே பய்யனா?"

"மொத்தம் மூனுபேர். ஓர் அண்ணன் ஒரு தம்பி!"

"க்ஷேமம. படு க்ஷேமம். மீதி விஷயத்தை நான் பாததுக்கிறேன்!"

"அவன் ஒரு நோஞ்சான் பையன். அடிச்சுக் கிடிச்சுப்பிடாதே"

"சரி லஞ்ச் டைம்ல வந்து உன் ஸெல்போனை என்கிட்ட குடுத்துப்புட்டு என் ஸெல்போனை வாங்கிட்டு போ!"

"அப்படியே செய்றேன்!"

"அவனோட ஸெல்போன் நம்பர் என்ன?"

சொன்னாள். "மனப்பாடமா இருக்கு போல!"

அசடுவழிந்தாள் ஸ்வாதி. மதிய உண வேளையில் பதட்டமாக வந்து தனது உலா தொலை பேசியை அக்காளிடம் கையளித்தாள். "ஸாப்ட் டீல் பண்ணுக்கா!"

"நீ கிளம்புடி!"

தங்கை கிளம்பிப்போன ஒரு மணிநேர கழித்து வராண்டாவில் நடந்தபடியே அவனது எண்ணை முயற்சி செய்தாள். "ஹலோ முரளி?"

"ஆமா... நீ ஸ்வாதியா?"

"ஆமா!"

"உன் குரல் ஒரு மாதிரி இருக்குது!"

"இல்லையே?"

"எதுக்கு போன் பண்ணின?"

"ரெண்டு மாசமா என்னை நீதான் டார்ச்ச குடுக்கிற. எதுக்கு இதெல்லாம் பண்ற?"

"நீ உன் அக்காகிட்ட சொல்லிக் குடுத்தி மாட்டன்னா நான் உண்மையைச் சொல்றேன்!"

"சொல்லமாட்டேன்... சொல்லு!"

"ஐ லவ் யூ ஸ்வாதி!"

"இந்த வாக்கியத்தை வாரத்துக்கு பத்து பொண்ணுககிட்ட சொல்லுவியாக்கும்?"

"அய்யய்யோ.. அப்டியில்ல.. வாழ்க்கைல மொதத் தடவையா சொல்றேன்..."

"இது என்ன திடீர் காதல்?"

"யார் சொன்னது? உன்னை டென்த்லயிருந்து பாத்திட்டு வர்றேன். நீ பள்ஸ்டூ முடிச்சிட்டு பயோ-டெக் போய்ட்ட. நான் இளங்கலை விலங்கியல் முடிச்சிட்டு பிரான் கல்ச்சர்ல இறங்கிட்டேன். கடுமையான வேலைப் பளுக்களுக்கு இடையே உன்னை விடாம பாத்துக்கிட்டுதான் இருக்கேன். செல்போன்ல பேசிக்கிட்டுத்தான் இருக்கேன்!"

"நாம நேர்ல சந்திச்சு பேசலாமா?"



"நிஜமாத்தான் சொல்றியா? உன் அக்காகிக்கா கிட்ட என்னை போட்டுக் குடுத்திட மாட்டியே..."

"மாட்டேன்!"

"இடம் சொல்லு.... சந்திக்கலாம்!" முரளி.

"பெரியார் டிப்போவுக்கு பக்கத்ல எங்க மாமா காரை எடுத்துக்கிட்டு வந்து நிக்றேன்.. இன்னைக்கி சாயந்தரம் அஞ்சு மணிக்கு மறக்காம வந்திரு!"

"சரி!"

மாலை ஐந்துமணி.

தூரத்தில் சாலையை விட்டு இடப்புறம் ஒதுங்கி நின்ற காரை நோட்டமிட்டபடி தனது காரைக் கொண்டு போய் நிறுத்தினான் முரளி. இறங்கி முன்னால் நின்ற காருக்கு போனான். காரின் பின் கதவைத் திறந்து பார்த்தான். யாருமில்லை. முன் கதவைத் திறந்து அதிர்ந்தான். பவதாரிணி!

"நீ... நீங்களா?"

"நீ வேற யாரை எதிர்பார்த்த?"

திரும்பி ஓட முயன்றான் முரளி.

"திரும்பி ஓடுனா - துரத்தி வந்து உதைப்பேன். நில்லு... காருக்குள்ள ஏறு! உங்கிட்ட கொஞ்சம் பேசணும்!"

"நான் காருக்குள்ள ஏறமாட்டேன். ஈவ் டீஸிங், செல்போன்ல பெண்களை தொந்திரவு செய்தல் போன்ற குற்றங்களை சுமத்தி என்னை போலீஸ்ல தள்ளிருவீங்க!"

"மாட்டேன். கார்ல ஏறு!"

காரில் ஏறினான். கார் சீறிப்பாய்ந்தது. முரளியின் வீட்டின் முன் போய் கார் நின்றது.

"இறங்கு!"

இறங்கினர்.

''உன் பெற்றோர் வீட்லதான இருக்காங்க?''

''ஆ....ஆமாம்!''

அவனை இழுத்துக் கொண்டு உள்ளே நடந்தாள் பவதாரிணி. வீட்டுக்குள் இருந்தோர் அனைவரும் பதறினர். அனைவரையும் அலட்சியப்படுத்தி விட்டு முரளியின் பெற்றோரின் முன் போய் நின்றாள்.

''வணக்கம். என் பெயர் பவதாரிணி. உங்க பய்யன் என் தங்கச்சியை ரெண்டு மாசமா செல் போன் மூலமா டார்ச்சர் குடுத்துக்கிட்டு இருக்கான். கேட்டா அமரத்துவமான காதல்ன்றான். அதான் இவனைக் கையோட இழுத்திட்டு வந்திருக்கேன். என்னன்னு விசாரிங்க!''

தலைகுனிந்திருந்தான் முரளி.

''சொல்லுடா... இவங்க சொல்றதெல்லாம் உண்மையா?''

''ஆ....ஆமா!''

''எங்ககிட்ட ஒரு வார்த்தை சொல்லிருந்தா உனக்கு நாங்களே பொண்ணு பாத்திருப்போமே... இது என்னடா அசிங்கம்?''

''எனக்கு ஸ்வாதி மேல உண்மையான காதல், பேசாம அவளையே எனக்கு பேசி கல்யாணம் பண்ணி வச்சிருங்க!''

முரளியின் பெற்றோர் தலைஉயர்த்தினர்.

''அம்மா பவதாரிணி! முரளி எங்க வீட்டு செல்ல பையன். இதுவரைக்கும் நாங்க அவன் கேட்டதை எல்லாம் வாங்கிக் குடுத்திருக்கோம். முரளி மேல உங்க வீட்டுப் பொண்ணுக்கும் காதல் தானே?''

''ஆமா!''

''நல்லதா போச்சு. ஒரு நல்ல நாளா பாத்து நாங்க உன் தங்கச்சியை பெண்பார்க்க வரோம். அப்பவே மத்ததெல்லாம் பேசி முடிச்சிடலாம்!''



இறுக்கமாய் இருந்த பவதாரிணி இயல்புநிலை மீண்டாள்.

''உக்காருமம்மா!''

டிபனும் காபியும் உபசரித்தனர்.

பெயருக்கு கொறித்துவிட்டு காபி உறிஞ்சினாள்.

''நான் புறப்படுறேனம்மா... புறப்படுறேன சார்!''

வணங்கியபடி காருக்கு நடந்தாள். பின்னாடியே ஓடிவந்தான் முரளி. ''எதுக்கு தூக்கிட்டு வர்ற?''

''காரை சிட்டி அவுட்டர்ல நிறுத்திட்டு வந்திருக் கேன். என்னை அங்க போய் விட்ருங்க. ப்ளீஸ்!''

காரில் ஏறி அமர்ந்தான். காரை செலுத்தினாள் பவதாரிணி.

''நன்றிங்க. என்ன ஆகுமோ எது ஆகுமோன்னு பயந்தேன். எல்லாம் நல்லபடியா முடிஞ்சிருச்சு. எங்க காதலை வாழ வைச்ச உங்களை வாழ்நாளுக் கும் மறக்க மாட்டேன்!''

''என் தங்கச்சி எனக்கு உயிரை விட மேல. அவளை உனக்கு கல்யாணம் பண்ணி வைக்றேன். அவளை நீ நல்லா பாத்துக்கணும். உன்னால அவ கண்ணை கசக்கினான்னா உன்னை நான் கொல் லவும் தயங்கமாட்டேன். அண்டர்ஸ்டாண்ட்?''

உமிழ்நீரை மிடறு விழுங்கியபடி ''சரி'' என்றான்.

''இந்த செல்போன்ல பேசிப்பேசி பெண்களை மயக்கும் கலையை என் தங்கச்சி ஸ்வாதி யோட நிறுத்திக்க. நோ மோர் அட்வெஞ்சர்ஸ்!''

''ஹிஹி''

''இறங்கு. உன் கார் நிக்ற இடம் வந்திருச்சு!'' இறக்கிவிட்டாள்.

அடுத்த ஒரு மாதத்திலேயே ஒரு சுபயோக

சுபதினத்தில் முரளி- ஸ்வாதி திருமணம் நடந்தது. ஸ்வாதி முரளியை இழுத்துக் கொண்டு அக்காளின் காலில் விழுந்தெழுந்தாள்.

''அமோகமா இருங்க!'' ஆசீர்வதித்தாள் பவதாரணி.

பிரத்தியேகமாக அக்காளின் கால்களில் மட்டும் தங்கை கணவனை இழுத்துக் கொண்டு விழுவதைக் கூடியிருந்த கூட்டம் முகஞ்சுளித்தபடி பார்த்தது. முரளியின் பெற்றோரும்.

''அக்கா தங்கச்சி அன்னியோன்யத்தை நரித்தந்திரம் பண்ணி மொதல்ல கெடுக்கணும். ரெண்டே மாசத்ல கிராமத்து சண்டை சேவல்கள் மாதிரி அக்காளும் தங்கச்சியும் முட்டிக்கணும் மோதிக்கணும்; ரெத்தம் சொட்டிக்கணும்!'' கொடூரமாய் முணுமுணுத்தாள் முரளியின் அம்மா!

## 8

கஸ்தூரி பவதாரிணியிடம் ஒரு கோப்பை நீட்டினாள். வாங்கி பிரித்தாள் பவா. அதில் கஸ்தூரி சொந்தமாய் ஒரு மருந்துக் கம்பெனி ஆரம்பிக்கஆகும் பட்ஜெட்டை கணக்கிட்டிருந்தாள்.

''பவாக்கா! சொந்தமா தலைவலி மாத்திரை, ஜலதோஷத்துக்கு நிவாரணம் அளிக்கும் மாத்திரை, தலைவலி தைலம், பூசும் மருந்து, சிரப்புகள் தயாரிக்கும் மருந்துக்கம்பெனி ஒண்ணு ஆரம்பிக்கப் போறேன். ஆரம்ப பணத் தேவை இருபது லட்ச ரூபாய்!''

''கஸ்! மார்க்கட்ல ஏற்கனவே நூத்துக்கணக்கான தலைவலி மாத்திரைகளும் தைலங்களும் புழங்குகின்றனவே... அதில நீ புதுசா குதிச்சு



எப்படி ஜெயிக்கப் போறே?''

கஸ்தூரி முகம் சூரியனித்தது. ''மத்த கம்பெனிகளை விட தரமா- விலை குறைவா தானியங்கும் இயந்திரங்களைக் கொண்டு சுத்தமா தயாரிச்சு - ப்ராடக்ட்களை மார்கெட்டிங் பண்ண முடியும்னு நம்புறேன்!''

''மருந்துக் கம்பெனிக்கு இடம்?''

''சீர்காழி ரோட்ல எடம் புடிச்சிருக்கேன்...''

''வாடகைக்கா, போக்கியத்துக்கா?''

''அஞ்சு வருஷத்துக்கு போக்கியத்துக்கு பிடிச்சிருக்கேன். தொகை அஞ்சு லட்சம்!''

''மருந்துக் கம்பெனிக்கு தேவையான யூனிட் முடிவு பண்ணிட்டியா?''

''என் கூட படிச்ச தினகர் துணைக்கு வாரான். யூனிட்டுக்குத் தேவையான ஆட்களை அவன் முடிவு செய்வான்!''

''பட்ஜெட் இருபது லட்சம்னு சொன்ன. பத்து லட்சம் நாம போடுவோம்.மீதி பத்து லட்சம் அந்த தினகர் போடுவானாக்கும்?''

''அவன் வெறும் வொர்க்கிங் பார்ட்னர் தான்!''

''லாபத்ல அவனுக்கு பர்சன்டேஜ் உண்டா?''

''ஐந்து சதவீதம்!''

''நஷ்டத்ல அவன் பொறுப்பேற்பானா?''

''பொறுப்பேற்க மாட்டான்!''

''இருபது லட்சம் ரூபாயை எப்படி ஏற்பாடு பண்ணப் போற?''

''க்கா, நீ தரமாட்டியா? உன்னால முடியலேன்னா பேங்க்ல லோன் வாங்கித் தரமாட்டியா?''

''தரலாம்... ஆனா போடுற காசு திரும்ப கிடைக்கும்னு நம்பிக்கை இருந்தா தரலாம்!''

''திரும்ப வராதுன்னு எதை வச்சு சொல்ற?''

''நான் மொதல்ல உன்னுடைய வொர்க்கிங் பார்ட்னரை சந்திக்கனும்!''

''எதுக்கு? நீ அவன்கிட்ட கரடுமுரடா பேசினா தலைதெறிக்க ஓடிருவான்... வேற ஆளை பிடிக்கறது கஷ்டம்!''

''அன்பா பேசுறேன். போதுமா?''

''சரி, எப்ப வரச் சொல்ல?''

''இப்பவே வரச் சொல்லு!''

உலா தொலைபேசியை எடுத்து அவனுடன் பேசினாள் கஸ்தூரி.

''தினகர்! நான் கஸ்!''

''..............''

''என் அக்கா உடனே உன்னை பார்க்கனுமாம்!''

''..............''

''ஒரு டென்மினிட்ஸ் வந்திட்டுப் போயேன்!''

உலா தொலைபேசியை மௌனப்படுத்தினாள் கஸ்தூரி. அடுத்த பதினைந்து நிமிடங்களில் தினகர் ஆக்ஸ் எபக்ட் அன் லிமிட்டட் நறுமணத்துடன் புயலாய் நடந்து வந்தான்.

''ஹாய் பவதாரிணி!''

''கால் மீ பவாக்கா!'' அதட்டினாள்.

''ஓகே ஓகே.... கூப்பிடுங்களாமே?''

''மருந்துக் கம்பெனி ஆரம்பிக்க திட்டம் தீட்டச் சொன்னா தோழியை சுரண்ட திட்டம் தீட்டலாமா நீ?''

''இது அபத்தமான குற்றச்சாட்டு!''

''புதிதாக தொழில் தொடங்கினா பொதுவா ஆண்கள்தான் பெரும் அளவு பணத்தை முதலீடு பண்ணுவாங்க. நீ என்னடான்னா வொர்க்கிங் பார்ட்னரா மஞ்சள் குளிக்கலாம்னு பாக்ற!''



''என்ன இப்படி பேசுறாங்க உங்கக்கா கஸ்?''

''என்னை பாத்து பேசு தினகர். கஸ்தூரிக்கும் உனக்கும் காதல் இருப்பது உண்மைதானே?''

''உண்மைதான்!''

''தொழில் ஆரம்பிக்கும் சிரமங்களை நீ முதுகில தாங்கிக் கொள்ளாமல பாரத்தை கஸ்தூரி முதுகில கைமாற்றி வைத்தால் எப்படி?''

மௌனித்தான் தினகர்.

''தொழில் தொடங்க எப்பவும் அவசரப்படக் கூடாது. மினிமம் கோரன்டி தேவை. ஆறு மாசம் ஒரு வருஷம் பொறுத்திருங்க. நான் பைலட் சர்வே பண்ணி நீங்க எவ்வகை மருந்துக் கம்பெனி ஆரம்பிக்கலாம் என யோசனை கூறுகிறேன். அதுவரை தினகர் நீ ஏதாவது ஒரு மருந்துக் கம்பெனியில் வேலை பார்த்து அனுபவம் பெறு. கஸ்தூரியை வேறொரு மருந்துக் கம்பெனிக்கு அனுப்புகிறேன். இருவரும் தனித்தனியே பணி புரிந்து பெறும் அனுபவங்களை பணத்துடன் சேர்த்து தொழிலில் முதலீடு செய்யப் பாருங்க!''

தலையசைத்தான் தினகர்.

''காதலிக்கு இப்படி ஒரு அக்கா இருப்பான்னு மொதல்லயே தெரிஞ்சிருந்தா கஸ்தூரியை காதலிச்சிருக்கவே மாட்ட- இல்ல?''

''நான் எங்க அப்டிச் சொன்னேன்?''

''உன் முகம் சொல்லுதே!''

கீழுதட்டைக் கடித்துக் கொண்டான்.

''உங்களிருவரையும் எந்தெந்த மருந்துக் கம்பெனியில் வேலைக்கு அமர்த்துவது என்று முடிவெடுத்து விட்டேன். தினகருக்கு பெங்களூரில் இருக்கும் ஆல்ட்டர்- நேட்டிவ் மிரகிள் மெடிசின்ஸ் பார்மசூட்டிகல்ஸ். கஸ்தூரிக்கு சென்னையில் இருக்கும் சாரதாஞ்சன் கம்பெனி. இன்னும் ஒரே வாரத்தல நீங்க ரெண்டு பேரும் டூட்டி

ஜாய்ன் பண்ணலாம்!''

''ஏதேது எங்களை பிரித்து பார்க்க முதல்லயே தீர்மானம் பண்ணிட்டீங்க போல!''

''தினகர்! நீ பெங்களூர் கம்பெனில வேலை பாக்ற ஒரு வருஷத்ல கஸ்தூரிய ஆறே ஆறு தடவ மீட் பண்ணலாம்....''

''கூடுதல் தடவைகள் மீட் பண்ணினா?''

''பெங்களூர் வந்து உதைப்பேன்!''

''அடக்கடவுளே!'' தலையில் கைவைத்துக் கொண்டான்.

''தினகர்! உன் பெற்றோர் என்ன பண்றாங்க?''

''அப்பா ஹிந்துஸ்தான் லீவர் கம்பெனில எக்ஸிக்யூடிவ்வா வேலை பாக்றார். அம்மா ப்யூட்டி பார்லர் நடத்துறாங்க!''

''உன் பெற்றோருக்கு எத்னி பிள்ளைகள்?''

''மூத்தது அக்கா. கட்டிக் குடுத்தாச்சு. பிலாய் நகர்ல செட்டிலாய்ட்டாங்க. ரெண்டாவது நான். இதோ உங்ககிட்ட லோல் பட்டுக்கிட்டுருக்கேன்!''

''தொழில் தொடங்க உன் பெற்றோர் பணம் தர மாட்டாங்களா?''

''நான் பணம் கேக்கமாட்டேன்!''

''அப்படின்னா பேங்க் லோன் உங்க ரெண்டு பேர் மேலயும் போடுவம்.. மாதாந்திர தவணை பணத்தை நீங்க ரெண்டு பேரும் சேந்து கட்டுங்க!''

''அதை தொழில் தொடங்கிறப்ப பாக்கலாம்!''

''சூடா இருக்க தம்பி! காபி குடிக்றியா?''

''நோ தாங்க்ஸ்!''

''கஸ்! உன் ப்ரண்ட் கொஞ்சம் பதட்டமாயிருக்கான். தனியா கூட்டிட்டு போய் சமாதானப் படுத்து!''

இருவரும் விலகினர்.



வீட்டுக்குள் ஸ்வாதியும் முரளியும் பிரவேசித்தனர். ஸ்வாதி கன்றுக்குட்டி போல் ஓடி வந்து அக்காளைக் கட்டிக் கொண்டாள். ''ஹாய் பவாக்கா!''

''ஹாய் ஸ்வாதி செல்லம்!''

''ஹலோ பவா மேடம்!''

''ஏண்டி அடிக்கடி நம்ம வீட்டுக்கு வரமாட்டேங்கிற?''

''உனக்கும் எனக்கும் இடையே உள்ள உறவு நெருக்கம் பலபேருக்கு பொறாமைத் தீயை மூட்டியிருக்கு. குறிப்பா எங்க மாமியாருக்கு. 'எங்க வேணாலும் போ... உன் அக்கா வீட்டுக்கு நீ போகக் கூடாது'ன்னு கட்டளை பிறப்பிச்சிருக்கா. இப்பக்கூட என் மாமியாருக்கு தெரியாமத்தான் இங்க வந்திருக்கம்!''

தங்கையின் கன்னத்தை வருடிவிட்டாள். தங்கையின் உடலை ஆராய்ந்தாள். ''ஸ்வா! நீ ஒரு நல்ல செய்தி சொல்ல வந்திருக்க. ஆம் ஐ கரக்ட்?''

''பவாக்கா நீ பெரிய்ய ஆளுக்கா! நான் நாற்பது நாள் கர்ப்பமாயிருக்கேன்..''

''வாழ்த்துக்கள் செல்லக்குட்டி!'' கர்ப்பிணிப் பெண்ணுக்கு சொல்ல வேண்டிய எல்லா அறிவுரைகளையும் சொல்ல ஆரம்பித்தாள் பவதாரிணி.

கஸ்தூரி ஓடிவந்து ஸ்வாதியைக் கட்டிக் கொண்டாள். ஸ்வாதியும் முரளியும் சீதாலெட்சுமியின் கால்களில் விழுந்து எழுந்தனர்.

''அமோகமா இருங்க!''

ஒருவருக்கொருவர் குலோப்ஜாமூன் ஊட்டிக்

கொண்டனர். ஸ்வாதி பவதாரிணி காதுகளில் கிசுகிசுத்தாள். "பவாக்கா! நீ தற்காலிக குடும்பக் கட்டுப்பாடு முறைகள் ஏதாவதை உபயோகப் படுத்துகிறாயா? எனக்கு சீனியர் நீ. என் குழந்தையை உன் குழந்தை தூக்கி வரவேற்க வேண்டாமா? மருத்துவ ஆலோசனை பெற்றாயா? எங்களுக்காக நல்லதை சிந்தித்து சிந்தித்து உன் நல்லதை மறந்துவிடாதே!"

ஒரு மின்னல் மானசீகமாக பவதாரிணியை தாக்கி மறைந்தது. கற்பனையில் கோடிக்கணக்கான குழந்தைகள் ஒன்றன் மேல் ஒன்று உருண்டு விளையாடிக் கொண்டிருந்தன. அவைகளில் தனக்கான குழந்தை இருக்கிறதா என ஆராய்ந்தாள் பவதாரிணி. பவதாரிணிக்கான குழந்தை அங்கு இல்லை.

பவதாரிணியின் கர்ப்பப்பை ஓலமிட்டு அழுதது. 'எனக்கொரு மகனோ மகளோ பிறப்பார்களா மாட்டார்களா?' கேள்வி விஸ்வரூபித்தது.

அழுகையை மறைத்துக் கொண்டு முறுவலித்தாள் பவதாரிணி. பவதாரணியின் வேதனையை இனம் கண்டுகொண்ட சீதாலெட்சுமி குமைந்தாள்.

'மூத்தவள் நான் மலடியாய் நிற்க என் தயவில் திருமணமான என் தங்கைக்கு முதலில் குழந்தை பிறக்கப் போகிறதா?' - பவாவின் மனதில் பொறாமைத் தீமூட்டினான் சாத்தான்.

## 9

ஜே.ஜி மருத்துவமனை. கார் நிதானமாக சென்று நின்றது. அதிலிருந்து பவதாரிணியும் அரவிந்த்தும் இறங்கினர். உள்ளே நடந்தனர்.



வரவேற்பாளினி அவர்களை எதிர்கொண்டாள். "மிஸஸ் பவதாரிணி?"

"யெஸ்!"

"உங்க முறை வர ஒரு மணிநேரம் காத்திருங்கள்!"

இருபதுக்கும் மேற்பட்ட திருமணமான பெண்கள் காத்திருந்தனர். அவர்களின் கண்களில் குழந்தை ஏக்கம் அப்பட்டமாய் தெரிந்தது. அவர்களது உதடுகள் முத்தமிட குழந்தைகளின் கன்னம் கிடைக்காமல் துடித்தன. அவர்களது மார்பகங்கள் உறிஞ்ச குழந்தையின் சின்னஞ்சிறு வாய் இல்லாமல் விதும்பின. ஒவ்வொரு பெண்ணும் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுத் திரும்ப குறைந்தது அரைமணி நேரமானது. செவிலியர் நங்கை எட்டினாள். "பவதாரிணி - அரவிந்த்."

"நான் காத்திருக்கேன். நீ போய்ட்டு வா!"

"பரவாயில்ல... நீயும் வாப்பா!"

மருத்துவர் தலையாட்டி வரவேற்று அமர சமிக்ஞை காட்டினார். அமர்ந்தனர். பவதாரிணி-அரவிந்த் இருவரின் மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் இரு கோப்பில் கோர்க்கப்பட்டிருந்தன. மருத்துவர் கோப்பை பிரித்து முழுமையாக வாசித்தார். "உங்க ரெண்டு பேரோட கம்ப்ளீட் மெடிக்கல் ரிக்கார்ட்ஸை வாசிச்சேன். அரவிந்த்தின் ரிக்கார்ட்ஸ் நார்மல். அரவிந்த்தின் விந்தணுக்கள் தேவையான எண்ணிக்கையில் உள்ளன. அவற்றின் நகர்ச்சித் திறனும் சிறப்பாகவே அமைந்துள்ளன. பவதாரிணி! உங்ககிட்ட தான் ப்ராப்ளம்... உங்க பெல்லோபியன் ட்யூப்களில் கொழுப்பு அடைத்துள்ளது. அத்துடன் சினை முட்டைகள் உற்பத்தி அறவே இல்லை. ஒழுங்கீனமான மாதவிலக்கு. மேலும் ஹார்மோனல் இம்பாலன்ஸ் பிரச்சனையும் உங்களுக்கு இருக்

கிறது!''

பவதாரிணி இருண்டு போனாள். ''ஒரு தடவைக்கு இருதடவை சோதித்து பார்த்தீர்களை லவா டாக்டர்? எனது ரிப்போர்ட்ஸ் எல்லாம் நூற்றுக்கு நூறு சரிதானா?''

''எங்க லேப் ரிசல்ட்ஸ் என்னைக்கும் பொய் சொல்லாது. உங்களுக்கு எங்க மீது அவநம்பிக்கை இருந்தா வேற எங்கயாவது டெஸ்ட் பண்ணி டெஸ்ட் ரிப்போர்ட்ஸ் எடுத்துட்டு வாங்களேன்!''

'நான் அந்த அர்த்தத்ல சொல்லல....''

''உங்க மனநிலையை நான் குத்தம் சொல்ல விரும்பல. 'நமக்கு எந்த மருத்துவக் குறைபாடும் வராது'- எனகிற உலக நம்பிக்கையோடுதான் ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் வாழ் கின்றனர். உங்க எடத்ல நானிருந்தா உங்களை மாதிரிதான் பேசுவேன்!''

''ஓகே... என்ன பண்ணலாம் டாக்டர்... அட எனி காஸ்ட் எனக்கொரு குழந்தை பிறக்கணும் டாக்டர்!''

இறுக்கமடைந்தது மருத்துவரின் முகம். ''ட்ரீட் மென்ட் உங்களுக்குத்தான் பண்ண வேண்டிவரும். ஆனா....''

''ஆனா?''

''ஆனா சக்ஸஸ் ரேட் ட்வெண்ட்டி- எய்ட்டி பர்செண்ட்டேஜ்தான். அடுத்த ஆறு மாசத்துக்கு நீங்க ஃபேட் ப்ரீ டயட் கன்ட்ரோல் இருக்கணும். ஹார்மோன் சுரப்பை நெறிப்படுத்த கீமோ தெரபி தேவை. அத்துடன் நீங்க உங்களது எடையை குறைந்தபட்சம் பத்து கிலோவாவது குறைக்க வேண்டி வரும். மாதாந்திர செக்கப்புக்கு வந்திடுங்க. லெட்டஸ் ஸி தி ரிசல்ட்!''

பவதாரிணியின் கண்களில் அழுகையும் ஆங்காரமும் பொங்கின. ''நான் உங்களை அதிகம் எதிர்பார்த்து வந்தேன் டாக்டர்!''



மருத்துவர் புன்னகைத்தார். ''நானொன்னும் கடவுள் இல்ல பவதாரிணி. குழந்தை பிறக்க வாய்ப்பு கம்மியாக இருக்கறவங்களுக்கு வாய்ப்பை அதிகப்படுத்தி குடுப்பேன். தற்காலிகமான குறைபாடுகள் இருந்தா நீக்கித் தருவேன். எல்லாமே சாத்தியமான விஞ்ஞான எல்லைக்குள் தான்!''

''வேற வழியே இல்லையா டாக்டர்?''

யோசித்து நிமிர்ந்தார் மருத்தவர். ''இருக்கு. ஆனா அந்த வழியை நீங்க ஒத்துப்பீங்களான்னு எனக்குத் தெரியல..''

''சும்மா சொல்லுங்க!''

''உங்களோட கேரக்டரை பத்தி அரவிந்த் என்கிட்ட லேசுபாசா சொல்லிருக்கார். நான் உங்களுக்கு பிடிக்காததை சொல்ல - நீங்க பாஞ்சு என் கழுத்தை பிடிச்சிட்டீங்கன்னா....''.

திரும்பி அரவிந்தை முறைத்தாள் பவதாரிணி. ''கட்ன பொண்டாட்டிய பத்தி அவதூறான பிரச்சாரம் பண்ணிட்டிருக்கியா நீ?''

''சேச்சே... அப்டியில்ல.. உன்னை பத்தி பாஸிட்டிவ்வாத்தான் சொல்லி வச்சிருக்கேன், பவா!''

''இந்தான் கெடக்கான்... நீங்க சொல்லுங்க உங்க யோசனையை!''

''உங்க கணவரின் விந்தணுவை ஏதேனும் ஒரு வாடகைத்தாய் வயித்ல செயற்கை முறைல பதிச்சு வெச்சிடறது. வாடகைத்தாய்க்கு பேசின பணத்தை குடுத்துட்டு குழந்தையை தூக்கிட்டு போகலாம் நீங்க!''

''குழந்தைக்கு தந்தை அரவிந்த்தாய் இருப்பார்; ஆனா உண்மையான தாய் அந்த வாடகைத்தாயாக இருப்பார்!''

''ஆமா!''

''இந்த யோசனை எனக்கு அறவே பிடிக்கல!''

''சரி, இந்த யோசனையாவது பிடிக்குதான்னு பாருங்க. முகம் தெரியாத பெண்ணின் சினை முட்டையை எடுத்து பரிசோதனைக்கூடத்தில் வைத்து உங்க கணவரின் உயிரணுவுடன் இணைப்பது. சில நாட்களுக்கு பின் அந்த கருவை எடுத்து உங்க கர்ப்பப்பைல பதிப்பது. உலகின் எல்லா கர்ப்பிணிகளுக்கும் கிடைக்கும் இன்ப அவஸ்தைகள் உங்களுக்கும் கிடைக்கும். பிரசவத்ல ஒரு அழகான குழந்தையை பெற்றிருப்பீர்கள்!''

''ஷிட்!''

''இதிலயும் இன்னொரு நவீன முறை வந்திருக்கு. ரெண்டு சினை முட்டைகளை தானமாய் வாங்கி ஒரு விந்தணுவோட இணைக்கிறது. ஆணோ பெண்ணோ ஒரு குழந்தைதான் பிறக்கும். குழந்தை மிக மிக ஆரோக்கியமானதாய் இருக்கும். உங்க குழந்தைக்கு எந்த சினைமுட்டை தானம் செய்த பெண்ணும் தனியே சொந்தம் கொண்டாட வரமாட்டாள். இன்பேக்ட்.... சினை முட்டைதானம் செய்யும் பெண்கள் கர்ப்பக் காலத்திலோ பிரசவத்துக்கு பிந்திய காலத்திலோ தானம் பெறும் பெண்களை சந்திக்க அறவே வாய்ப்பில்லை.''

''நீங்க சொல்ற யோசனைகள் குமட்டுது டாக்டர்'

''கன்வென்ஷனலா வளர்க்கப்பட்டிருக்கீங்க. அதனால இப்டி பேசுறீங்க. குழந்தை இல்லாத சில பெண்கள் மருத்துவமனைகளிலிருந்து குழந்தைகளை திருடுகிறார்கள். குழந்தைகள் வேண்டி எத்தனையோ குற்ற செயல்பாடுகள் நடக்கின்றன. நீங்க உரிய வயதில வந்திருக்கீங்க. நான் சொன்ன உபாயத்ல குழந்தை பெத்துகிட்டீங்கன்னா வாழ்நாள் முழுக்க நிம்மதியா இருக்கலாம்..

''என்னால ஒத்துக்கிட முடியல டாக்டர்!''



''உங்க குணத்துக்கு தத்தெடுக்கிறது வெற்றிகரமா இருக்காது. உங்க நெருங்கிய உறவில தத்தெடுக்கலாம். அது ஓரளவு வெற்றிகரமா அமையக்கூடும்.!''

மௌனித்தாள் பவதாரணி.

''சினைமுட்டைகளை நீங்க முகம் தெரியாத பெண்ணிடமிருந்துதான் தானம் பெறணும்னு கட்டாயமில்லை. உங்க உறவுக்கார பெண்களிடமிருந்தும் பெறலாம். இதனால் ஒரு சின்ன சகாயம் கிடைக்கும். பிறக்கும் குழந்தை உங்க சாயல்லயே இருக்கும்!''

மறுதலிப்பாய் தலையாட்டினாள் பவதாரிணி.

''ஓக்கே ஓக்கே. முதலில் நான் சொன்னமாதிரி பட்டியில் இருந்து மருந்து மாத்திரைகளை உட்கொள்ளுங்கள். சினைமுட்டை உற்பத்தி கடவுள் புண்ணியத்தில் ஆரம்பிச்சாலும் ஆரம்பிக்கும்!''

மருந்து மாத்திரைகள் எழுதிக் கொடுத்தார். ''அடுத்த மாதம் இதே தேதி வாங்க!'' வழியனுப்பும் விதமாய் வணங்கினார்.

இருவரும் காருக்கு நடந்தனர். ''டாக்டர் சொல்றதெல்லாம் கேட்டியா அரவிந்த்? உன் அபிப்ராயம் என்ன?''

''நீ எதை சரி என்கிறாயோ அதனை சரி என்பேன். நீ எதை தவறு என்கிறாயோ அதனை தவறு என்பேன். எனக்கு நீயும் உனது மனசும் மட்டுமே முக்யம். நமக்குள் திருமணமாகி மூன்று வருடங்கள்தான் ஆகின்றன. குழந்தையைப் பற்றி தேவைக்கு அதிகமாய் கவலைப்படுகிறோமோ என்று தோணுகிறது.''

கணவனை ஊடுருவிப் பார்த்தாள். ''சிதம்பரத்துக்கு கிளம்புவோமா?''

தலையாட்டினான். கார் கிழக்குக் கடற்கரை

சாலையில் சீறிப் பாய்ந்தது.

உலா தொலைபேசி 'மயிலிறகே... மயிலிறகே' ட்யூனில் அழைத்தது.

ஸ்வாதியின் கணவன் முரளி பேசினான். ''மன்னி! ஒரு ஹாப்பி நியூஸ்!''

''சொல்லுங்க!''

''ஸ்வாதிக்கு அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது. சுகப்பிரசவம். குழந்தையின் எடை மூணே கால் கிலோ. எல்லாரும் குழந்தைக்கு தாத்தா சாயல் என்கிறார்கள்!''

பவதாரிணிக்கு பெரிய சந்தோஷம் எதுவும் கிளறவில்லை. பதிலாக ஏதோ ஒரு பொருள் காணாமல் போனது போன்ற எண்ணம் பீறிட்டது.

'ஒரே தாய்க்கு பிறந்த மூன்று மகள்களில் மூத்தவளின் கர்ப்பப்பையை கொழுப்பு சுற்றியுள்ளதாம்! அவளுக்கு குழந்தை பிறக்காதாம்! ஆனால் இரண்டாவது மகளுக்கு திருமணமான பத்தே மாதங்களில் அழகிய ஆண்குழந்தை பிறக்குமாம்! இது என்னடா நியாயம்?எங்கே போய் முட்டிக் கொள்வது? தங்கைகளின் நலனையே சதா யோசிக்கும் எனக்கு கடவுள் கொடுக்கும் சிறப்பு பட்டம் 'மலடி'. சபாஷ் பிரமாதம்!'

''மன்னி! என்ன பதிலையே காணம்?''

''ரொம்ப ரொம்ப சந்தோஷம்! எந்த ஆஸ்பத்திரில வச்சு பிரசவம் பாத்தீங்க?''

''பிருந்தா கிளினிக்!''

''இன்னும் மூணே மணி நேரத்ல நாங்க அங்கிருப்போம்!''

''மன்னி! நீங்க போன காரியம் என்னாச்சு?''

''அதை அப்றம் பேசிக்லாம்!''

உலா தொலைபேசியை மௌனமாக்கினாள். சோகம் படர்ந்திருந்த பவதாரிணி முகத்தை



உள்ளித்தான். ''இது தப்பு பவா!''

''எது?''

''தங்கச்சிக்கு குழந்தை பிறந்த சந்தோஷம் உன் முகத்ல துளியுமில்லை; பதிலா டன் கணக்ல பொறாமையும் வயித்தெரிச்சலும் தான் பொங்கி வழியுது! கெட்ட எண்ணத்தை மனசுக்குள்ள நுழைய விடாதே. குழந்தைக்கு தேவையான பரிசு பொருட்களை பாண்டியில் வாங்கிக் கொள்வோம்!''

''சந்தோஷம்? சந்தோஷம்! சந்தோஷம்... சந்தோஷம்தானா? இதோ படுறேன்!'' சிரிப்பது போல் முகம் காட்டி பின் வாய் கோண அழ ஆரம்பித்தாள் பவதாரிணி. அத்துடன் தனது முகத்தை இரு கைகளால் பொத்தி பொத்தி அறைந்தாள். தலைக்கேசத்தை பிய்த்து விட்டுக் கொண்டாள். டாஷ் போர்டில் நெற்றியை மோதிக் கொண்டாள்.

பயந்துபோய் காரை சாலையோரம் நிறுத்தினான் அரவிந்த். தொடர்ந்து அழுது ஆர்ப்பாட்டம் பண்ணும் மனைவியை திகிலுடன் வெறித்தான் அரவிந்த்.

இனி குடும்பத்திற்குள் 'காத்தரீனா'வும் 'ரீட்டா'வும் சுற்றிச் சுழன்று கும்மியடிக்கப் போகின்றன. குடும்பமே சிக்கிச் சீரழியப் போகிறதா அல்லது ஓரிரு தலைகளாவது தப்புமா?

# 10

பிருந்தா மகப்பேறு மருத்துவமனை. அழுது வீங்கிய முகத்தை குளிர் நீரால் கழுவியிருந்தாள் பவதாரிணி. கிழக்குக் கடற்கரை சாலையில் அரைமணி நேரம் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணின பவா தன்னைத்தானே தேற்றிக் கொண்டெழுந்தாள்.

''நான் எதுக்கு அழணும்? தங்கச்சிக்கு குழந்தை பிறந்தா அழலாமா? போன் செய்தி கிடைத்தவுடன் அருமை அக்கா சென்னையிலிருந்து எப்போது பாய்ந்து பறந்து வருவாள் என காத்திருக்கும் தங்கைக்கு நான் காட்டும் அன்பின் வெளிப்பாடு இதுதானா? எனக்குள்ளிருக்கும் மிருகத்தை அடிக்கடி அவிழ்த்து விட்டு விடுகிறேன். அது உறவென்னும் ஊருக்குள் புகுந்து பிரியமானவர்களைக் கடித்துக் குதறிவிடுகிறதே! மிருகத்தை இரும்புச் சங்கிலியால் பிணைப்பது நலம். பயந்துட்டியா அரவிந்த்? 'பொண்டாட்டி மலடுன்னு மட்டும்தானே நினைச்சோம்; வெறி பிடிச்ச பைத்தியம்னு இப்பத்தான தெரியுது?'-ன்னு முழிக்றியா கண்ணு?''

பதில் சொல்லாமல் நுனிநாக்கை வலிக்காமல் கடித்துக் கொண்டான்.

''அரவிந்த் அரவிந்த்! இங்க நடந்தத யார்கிட்டயும் சொல்லிடாத!''

பரிசுப் பொதிகளுடன் பவதாரிணியும் அரவிந்தும் மகப்பேறு மருத்துவமனைக்குள் ஓடினர். சுகப்பிரசவமானவர்கள்- ஸிஸேரியன் செய்து கொண்டவர்கள் - பிரசவ நிமிஷத்துக்கு காத்திருக்கும் தாய்மார்களைத் தாண்டி ஸ்பெஷல் வார்டு ஓடினர். ஏற்கனவே அங்கிருந்த சீதாலெட்சுமியும் கடைக்குட்டி தங்கை கஸ்தூரியும் அவளது காதலன் தினகரும், பவா- அரவிந்த்தை எதிர்கொண்டனர். வலியை மீறி ஆனந்தமாய் கூவினாள் ஸ்வாதி. ''பவாக்கா! என் குழந்தையைப் பாரேன்!''

'என் குழந்தையை' என்கிற வார்த்தை இதயத்தை தைத்தது.

ஓடினாள் பவா. தொட்டிலில் கிடக்கும் குழந்தையை உன்னித்தாள். குழந்தை ஏகாந்தத்தை வெறித்து கைகால்களை ஆட்டிக் கொண்டிருந்தது. சீழ்க்கையடித்து குழந்தையின்



கவனத்தை கவர முயன்றாள். இருகைகளை தட்டி சப்தம் எழுப்பினாள். குழந்தையைக் கண்டதும் பவதாரிணியின் கல்மிஷமெல்லாம் கரைந்தோடின. குழந்தையை பின்னங்கழுத்து சேர்த்து கையில் எடுத்தாள். அதன் கண்களையும் மூக்கையும் வாயையும் காதுகளையும் ஆராய்ந்தாள். ''ஏ அப்பா ! குழந்தை தத்துவ பேராசிரியர் கமலநாதன் மாதிரியே இருக்கு. இந்த மூக்கு அவருடையதுதான். ஆனா குழந்தையோட நிறம் அப்பாவை விட கூட. ரோஜாவும் சந்தனமும் மல்லிகையும் ஒன்று சேர்ந்த நிறம் குழந்தைக்கு. வாவ்! செல்லக்குட்டி! பொன்னுக்குட்டி! மியாவ் குட்டி! ஜுஜ்ஜுக்குட்டி! அச்சுக்குட்டி! கன்னுக் குட்டி! வெள்ளைப்பன்னிக் குட்டி! கழுதக்குட்டி! குதிரக்குட்டி! குட்டிகுட்டி! சுட்டிக்குட்டி! என் கட்டுக்குட்டி!'' கன்னத்தில் முத்தம் கொடுக்கப் போனாள் பவா.

அம்மா தடுத்தாள். ''மொகத்ல குடுக்காத. எச்சித்தழும்பு வந்திரும்!''

அம்மாவை கொலைவெறியாய் முறைத்தாள. ''நீ கொஞ்சம சும்மா இருக்கியா? குழந்தையைக் கொஞ்சுறதுக்கு எனக்கு சொல்லிக் குடுக்காதே!''

''எனக்கு மூணு குழந்தை பெத்து வளத்த அனுபவம் இருக்கு. சொல்றேன்!''

''நான் மலடி. எனக்கு குழந்தை வளர்த்த அனுபவமே இல்லைன்றியா?''

''அடக்கடவுளே! நான் அந்த அர்த்தத்ல சொல்லல!''

''அப்படின்னா கொஞ்சம் வாய மூடிக்கிட்ரும்மா. வீணா ஏன்ம்மா என் மனசை புண் படுத்ற?''

அம்மா வெளிப்படையாக வலதுவிரல்களை வாயில் வைத்து மூடி விலகினாள். அரவிந்த் வாங்கி வந்த செயினையும் மோதிரத்தையும் குழந்தைக்கு

போட்டு விட்டான். காட்டன் மெல்லிகைசட்டைகள் - நாப்கின்கள் - ஜான்சன் அண்ட் ஜான்ஸன் அழகு பொருட்கள் - விளையாட்டுப் பொம்மைகள் வாங்கி வந்த அனைத்தையும் மூளியின் கையில் கொடுத்தான் அரவிந். அம்மா எதை செய்யக் கூடாதென்று சொன்னாளோ அதனை செய்ய மனம் ஆவலாதித்தது. குழந்தையின் கன்னத்தில் பச்பச் என்று முத்தங்கள் பதித்தாள். குழந்தையின் வாயில் உமிழ்நீரும் தாய்ப்பாலும் கலந்த வாசனை யடித்தது. குழந்தையின் தலைக் கேசத்தை கோதிக் கொடுத்தாள். கேசத்தின் மிருதுத்தன்மைக்கு உதாரணம் சொல்ல தமிழில் வார்த்தைகள் இல்லாது தத்தளித்தாள். குழந்தையை தனது இடது மார்பகத்தில் சாத்திக் கொண்டாள். குழந்தையின் முன்னுடலும் கால்களும் பட்ட மார்பகம் அளவிட முடியா பேரானந்தமடைந்தது. குழந்தையுடன் அறையை நான்கு முறை சுற்றி வந்தாள். அக்கா குழந்தையை வைத்துக் கொண்டு செய்யும் குதியாட்டங்களை பயத்துடன் ரசித்தாள் ஸ்வாதி.

''பவாக்கா! இங்கே வாயேன்!''

''என்னடி?''

குழந்தை சின்னஞ்சிறு குரலில் 'ங்கா - ங்கா' என்றது.

''குட்டேன் பால் குடுக்கணும்!'' குழந்தையை வாங்கி குழந்தையின் வாய்க்கேற்றபடி தன்னுடலை நகர்த்தி தனது மார்பகக்காம்பை குழந்தையின் பிஞ்சு வாய்க்குள் திணித்தாள் ஸ்வாதி. பவாவின் மார்பக நுனியில் மினகாய்த்தூள் தொழிற்சாலை. குழந்தை பால் உறிஞ்ச உறிஞ்ச ஸ்வாதியின் முகத்தில் நூற்றுக்கணக்கான தாய்மை முகபாவங்கள் க்ளைடாஸ்கோப்பின. ஒரு மார்பகத்தின் பாலே குழந்தைக்கு போதுமானதாய் இருந்தது. மிகைபால் குழந்தையின் வாயில் வழிந்தது. குழந்தையின் வாயைத் துடைக்கும் பாவணையில் வழிந்த பாலை சுண்டி தன் நுனி



தாக்கில் விட்டுக் கொண்டாள் பவா. திகதித்தது

மனைவியின் நடவடிக்கைகளை அரைக்கண் மூடி ரசித்துக் கொண்டிருந்தான் அரவிந்த். 'கணவன் - மனைவி தாம்பத்யத்தில் எப்போதாவது அரிதாக கிடைக்கும் உச்சகட்ட சுகம் ஒரு பெண்ணுக்கு பெற்ற குழந்தையை கொஞ்சும்போது நொடிக்கு நொடி கிடைக்கிறது. பெற்ற தாய்க்கு மட்டுமல்ல தாய்மை தகுதியுடைய அனைத்து பெண்களுக்கும் பிற குழந்தைகளை கொஞ்சும் போதும் கூட உச்சகட்ட சுகம் நொடிக்கு நொடி கிடைக்கத்தான் செய்கிறது. ஒரு ஆணின் / ஒரு பெண்ணின் வாழ்க்கையில் எத்தனையோ வந்தாலும் எத்தனையோ போனாலும் அத்தனையும் அவன்/ அவள் பெறும் குழந்தையின் அரைமிலி உமிழ் நீருக்கு ஈடாகுமா? புனுகுப்பூனை ஆயிரம் தடவை காவல் கம்பிகளை உரசினால் சிறிதளவு புனுகு கிடைக்கும். காமம் ஆயிரம் தடவை காதலை உரசினால் ஓர் அழகிய குழந்தை கிடைக்கும். ஒரு குழந்தையின் அகப்புறத் தன்மைகளை ஆழம் அகலமாக ஆராய்ந்தாலே அதன் பெற்றோர் செய்த தாம்பத்தியத்தின் தன்மை புரிந்து போகும். பவாவையும் என்னையும் கடவுள் தொடர்ந்து நிராகரித்து விடமாட்டான். ஒன்றல்ல இரண்டு குழந்தைகளை தக்க தருணத்தில் பரிசளிக்கவே போகிறான். பவா குழந்தைகளை கொஞ்சிக் கொஞ்சி இன்னொரு குழந்தையாகப் போகிறாள்!'

கஸ்தூரி தனது பங்குக்கு ஒரு வெள்ளி அரைஞாண் கொடியும் தங்கக் கொலுசும் குழந்தையின் உடலில் பூட்டிவிட்டாள். தினகர் குழந்தையின் கையில் ஆயிரம் ரூபாய் நோட்டை திணித்து விட்டான்.

அம்மா சீதாலெட்சுமி ஸ்வாதியின் முன் வந்து நின்றாள். அவளது கண்கள் கலங்கின. ''ஒரு பெண்ணுக்கு ஆயிரம் இருந்தாலும் புருஷனுக்கு அவை

சமமாகுமா? என் புருஷன் உயிரோட இருந்தா என் முதல் பேரனுக்கு சிதம்பரம் நகரத்தையே கிள்ளித் தருவேன். இப்ப நான் சகலத்துக்கும் மூத்த மகளை எதிர்பார்த்திருக்கும் கிழவி. என்னால முடிஞ்சது இதுதான்!'' சங்கு, பால்கெண்டி, நடை வண்டி, தொட்டில் கட்டை, கிலுகிலுப்பை நீட்டினாள். ''இதெல்லாம் பவதாரிணி பிறந்தப்ப என் மாமியார் பரிசளிச்சது. பத்ரமா பீரோல பூட்டி வச்சிருந்தேன். பவாவுக்கு குழந்தை பிறக்றப்ப பரிசளிக்றதாயிருந்தேன். நினைச்சதெல்லாம் எங்க நடக்குது? மூத்தவளுக்கு குடுக்க இருந்தது ரெண்டாவது மகளுக்கு போகுது!''

தன் குழந்தைக்குரிய சொத்து ஸ்வாதியின் குழந்தைக்கு போவது அறிந்து வேதனித்தாள் பவா. அவளது இதயத்தில் ஈட்டி பாய்ந்தது.

பவாவின் முகத்தை உறுத்த சீதாலெட்சுமி, ''இத நான் ஸ்வாதி குழந்தைக்கு குடுக்கலாமில்ல பவா?''

'குடுத்துட்டு இதென்ன கேள்வி?'

''தாராளமா. நீ உன் கையால குடுக்கலேன்னா எடுத்து நான் என் கையால குடுத்திருப்பேன்!''

ஒரு மணிநேரத்திற்கு பின் ஸ்வாதி பவாவை சமிக்ஞை செய்து அருகில் அழைத்தாள். ''என்னடி?''

''சென்னை ஜி.ஜே. மருத்துவமனைக்கு போனாயே என்ன சொன்னாங்க?''

''ச்ச... அத விடு!''

''சொல்லு பவாக்கா. நான் பிரசவ வேதனைல துடிச்சிட்டு இருந்தப்ப கூட உன்னை பத்தித்தான் நினைச்சிட்டுருந்தேன். டாக்டர் நல்லபடியா தானக்கா சொல்றாங்க?''

''அப்றம் சொல்றேன்டி!'' பவதாரிணி அழுகையை அடக்கிக் கொண்டாள்.

''எப்றம்?''



''எனக்கா மூடு வரும்போது சொல்றேன்!''

அக்காளின் முகத்தை பார்த்துவிட்டு மேற் கொண்டு பேசாமல் மௌனித்தாள் ஸ்வாதி.

மறுநாள் எடுக்கப்போகும் பாடத்திற்காக சிறு குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்தாள் பவதாரணி. திறந்திருந்த கதவு மும்முறை தட்டப்பட்டது. திரும்பினாள் பவா.

கஸ்தூரியும் தினகரும்!

''உள்ளே வாங்க!''

ஒருவரையொருவர் பேச வற்புறுத்தினர்.

''யாராவது ஒருத்தர் பேசுங்க!''

''ஆளுக்கு ஒரு வருஷம் ஒரு மருந்துக் கம்பெனில இருந்து அனுபவம் பெற்றுவிட்டோம் பவாக்கா. சித்தமருந்துகள் தயாரிக்கும் நிறுவனம் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறோம். சீர்காழி ரோட்டில் இடம் பார்த்திருக்கிறோம். சித்த மருந்து தயாரிக்க தேவைப்படும் மூலிகைகளை தொழிற் சாலை வளாகத்துக்குள்ளேயே வளர்க்கவும் உத்தேசித்துள்ளோம். முதலீட்டை நான்கு சித்த மருத்துவர்கள் செய்கின்றனர். லாபத்தில் பத்து சதவீதத்தை அவர்கள் நால்வருக்கும் பிரித்து தர வேண்டியிருக்கும்!'' தொடர்ந்து திட்டத்தின் முழுமையையும் விளக்கினர்.

''இவ்வளவு அறிவுபூர்வமா செயல்பட எங்கயிருந்து கத்துக்கிட்டீங்க?''

''எங்க காதல்தான் எங்களுக்கு அறிவுபூர்வமாகவும் செயல்பட கத்துக்குடுத்துச்சு...''

''வெரிகுட்!''

''அடுத்த மாதம் எங்களது சித்த மருந்து தொழிற்சாலை ஆறுவித கேப்ஸ்யூல்களை தயாரித்து விற்பனைக்கு அனுப்ப தொடங்கிவிடும்! (தயங்கி) நீ சொன்னமாதிரி நானும்

தினகரும் நடந்துக்கிட்டம்க்கா. இப்ப நாங்க விரும்பினதை நீ நடத்தி வைக்க வேண்டிய தருணம் வந்திருச்சு!''

''எதைச் சொல்ற?''

''எங்க கல்யாணத்தை!'' கஸ்தூரியும் தினகரும் பவதாரிணியின் கால்களில் விழுந்து சேவித்தனர்.

''அமோகமா இருங்க. இன்னும் ரெண்டே மாசத்ல உங்க கல்யாணம் நடக்கும். போதுமா?''

''அதுபோதும் அது போதும்க்கா!''

சித்தமருந்து தொழிற்சாலை தொடங்கிய ஒரே மாதத்தில் கஸ்தூரி - தினகரின் திருமணம் அமோக மாய் நடந்தேறியது. பவா - அரவிந்த் கால்களில் விழுந்தெழுந்தது திருமண ஜோடி.

சாந்திமுகூர்த்தம் நடந்து கொண்டிருக்கும் வேளையில் பவதாரிணியின் உதடுகள் பொறாமைத் தீ கக்கின. அரவிந்த் காதுகளில் ''இவளும் அடுத்த பத்துமாசத்ல குழந்தையை பெத்துப் போடப் போறா. நாம பரிசுப் பொருளோட போய் நிக்கப் போறோம். உலகத்ல யாரார்க்கோ விடிவு காலம் வருது! நமக்கு விடிவுகாலம் வராதா?''

பதில் சொல்லாமல் சிரித்தான் அரவிந்த்.

மூன்று மாதங்கள் கழித்து ஒருநாள்.

கஸ்தூரி ஓங்காரமாய் வாந்தியெடுத்துக் கொண் டிருந்தாள். பெண் மருத்துவர் வரவழைக்கப் பட்டார். கஸ்தூரியை சோதித்துவிட்டு உரக்க அறிவித்தார் மருத்துவர். ''கஸ்தூரி கர்ப்பமாயிருக்கா!''

வீடே கொண்டாட - பவா கறுத்திருந்தாள். உலா தொலைபேசி சிணுங்கியது. எடுத்து காதில் இணைத்தாள். எதிர்முனையில் ஸ்வாதி.

''ஸ்வாதி? ஒரு குட் நியூஸ்.... கஸ்தூரி கர்ப்ப மாயிருக்கா!''



''பவாக்கா! நானும் என் பங்குக்கு ஒரு குட் நியூஸ் சொல்றேன்... நானும் கர்ப்பமாயிருக்கேன். கஸ்தூரிக்கும் எனக்கும் ஒரே நேரத்ல வளைகாப்பு வைக்க வேண்டிவரும். பாத்துக்கிட்டேயிருக்கா. நாங்க ரெண்டுபேரும் ஒரே நாள்லதான் குழந்தை பெறப்போறம்!''

தீப்பற்றி எரிந்தாள் பவதாரிணி. காலை தரையில் உதைத்தாள். கடவுளின் மீது ஒற்றை கெட்ட வார்த்தையை உமிழ்ந்தாள். காரில் காட்டுமன்னார் கோயில் ரோட்டில் பறந்து யாருமில்லாத சாலை யோரத்தில் காரை நிறுத்தி ஸ்டியரிங்கின் மீது முகம புதைத்து கதறியழ ஆரம்பித்தாள். அழுது ஓய்ந்த பவா நிமிர்ந்தாள். ''இப்டி செஞ்சா என் மனக்குறை நீங்கிவிடும்!'' புதிய திகில் முடிச்சுகள் பூத்தன!

## 11

ஒரே வீட்டிற்குள் வெவ்வேறு விதமான உடல் நிலைகளுடன் மூன்று சகோதரிகள் நடமாடுவது காண்பதற்கு அரிய காட்சி பவதாரிணி + அரவிந்த், ஸ்வாதி + முரளி, கஸ்தூரி + தினகர்.

தொடர்ந்து மருந்து மாத்திரைகள் உட்கொண் டும் பவதாரிணியின் சினை முட்டைக் குழாயில் சினைமுட்டை உற்பத்தி ஏற்படவே இல்லை. ஹார்மோன் மாத்திரைகள் சாப்பிடுவதால் பவா வின் உடல் கறுத்துப் போனது. உணவுக் கட்டுப் பாட்டினால் உடல் எடை 15 கிலோ குறைந்திருந் தாள்.

கர்ப்பிணி ஸ்வாதி, பிறக்கப்போகும் குழந் தைக்கு ஸ்வெட்டர் பின்னினாள். வளைகாப்பு வளையல்கள் ஸ்வெட்டர் பின்னும்போது ஜீலிங்

ஜிலிங் சப்தம் எழுப்பின. புட்டங்கள் பின்னுக்கு தள்ளி யிருந்தன. மார்பகங்கள் முன்னுக்கு தள்ளியிருந்தன. முகம் வீங்கியிருந்தது. ஒன்றரை வயது மகன் விக்னேஷுக்கு தொடர்ந்து தாய்ப்பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். விக்னேஷின் வாலுத்தனங்களை அனைவரும் ரசித்தனர். தாத்தா கமலநாதன் போல நடந்து காட்டினான். பெரியம்மா பவதாரிணி போல பேசிக் காட்டினான். குட்டிக்கரணம் அடித்தான். சுவரில் பொம்மைகள் வரைந்தான்.

கர்ப்பிணிப்பெண் கஸ்தூரியின் முகத்தில் கர்ப்பமான பெருமை வழிந்தது. ஓர் அசுர தாம்பத்யத் துக்குப் பின் குழந்தை சூல் கொண்டால் குழந்தை சூல் கொண்ட விதம் பற்றி கணவனும் மனைவியும் இரகசியமாய் பெருமிதம் கொள்வர். ஒலிம்பிக்கில் மெடல் கிடைத்த குஷி. கஸ்தூரியின் இரு கைகளிலும் வளைகாப்பு கண்ணாடி வளையல்கள்.

விக்னேஷுக்கும் பவதாரணிக்கும் தினம் தினம் செல்லச்சண்டை.

''எய் பவி!''

''உதைப்பேன். பெரிம்மான்னு கூப்ட்ரா!''

''மாத்தேன்!''

''அவ்வளவு தைரியம் வந்திருச்சா உனக்கு?''

''நீ மமாவ மிதத்தாம் என்ன மித்த முலியாலு!''

''மிரட்னா என்னடா செய்வ?''

''லுப்பாக்கி எடுத்து லுத்துருவேன்!''

''சுடுடா செத்துப் போய்டுறேன்!''

''துத்துத்து லெயிலுக்கு போகணுமா? நா மாத்தேன்!''

''அவ்வளவு முன் ஜாக்கிரதை முத்தண்ணவா நீ?''



''பவி... எங்கம்மாவுக்கும் சின்னம்மாவுக்கும் வயிது பெதுத்தாருக்கு. உனக்கு ஏன் வயிது பெதுத்தா இல்ல?''

இருண்டாள். உரையாடலில இருந்து கழன்று தனது அறைக்குள் போய் அறையை உட்புறமாக பூட்டிக் கொண்டாள்.

நள்ளிரவு. மொட்டை மாடியில் மல்லாந்து படுத்திருந்தாள் பவதாரிணி. வானத்தில் முழு நிலா. கண்ணாடி வளையல் சப்தங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் படியேறி வந்தன.

''பவாக்கா!'' பதில் இல்லை.

இம்முறை கஸ்தூரி, ''பவாக்கா!''

பவா திரும்பி, ''என்னடி?''

''தூங்கிட்டியா?''

''இல்ல!''

''கொஞ்சநேரம் நானும் ஸ்வாதியும் உன் பக்கத்ல படுத்துக்கலாமா?''

''ம்!''

பவாவின் இடப்புறம் ஸ்வாதியும் வலப்புறம் கஸ்தூரியும் படுத்துக் கொண்டனர்.

புளியங்கொட்டைகள் நிரம்பிய இரு பல்லாங் குழிகளுக்கு நடுவே வெறுமை வழியும் பல்லாங் குழி!

''இப்படி மூணு பேரும் தனிமையா படுத்து ரகசியம் பேசி ரொம்ப நாளாகுதுல்ல பவாக்கா?''

''நீங்க ரெண்டு பேரும் ரொம்ப ரொம்ப மாறி போய்ட்டிங்கடி!''

''எப்டிச் சொல்ற?''

''பவாக்கான்ற பயங்கலந்த மரியாதை போயே போய்டுச்சு. கல்யாணம் ஆனவுடன் உங்க ரெண்டு பேருக்கும் பெரிய மனுசி தோரணை வந்திருச்சு. நமக்கும் நம்ம அக்காவுக்கும் ரெண்டு

மூணு வயசுதான் வித்தியாசம். அவளுகளுக்கெதுக்கு அம்மா ஸ்தானத்ல மரியாதை? ன்னு யோசிக்க ஆரம்பிச்சிட்டீங்க.''

''அப்படியெல்லாம் இல்ல பவாக்கா!''

''சமாளிக்காதிங்கடி. இப்ப நம்ம வீட்ல சீனியாரிட்டி லிஸ்ட்டை ஆண்டவன் மாத்திப் போட்டு ஓட்டிட்டான். ரெண்டாவது குழந்தையை பெத்துக்கப் போகும் ஸ்வாதி சூப்பர் சீனியர். முதல் குழந்தையை பெத்துக்கப் போகும் கஸ்தூரி சீனியர். மலடியா நிக்கும் நானோ சப் - ஜூனியர்..''

''என்னக்கா இப்டியெல்லாம் பேசற.... நீ எங்களுக்கு எவ்வளவு உதவிகள் செஞ்சிருக்க! எங்களுக்கு படிப்பைக் குடுத்து எங்க காதலை சீர்ப்படுத்தி எங்களுக்கொரு பாதுகாப்பான வாழ்க்கையைப் பரிசளிச்சிருக்க. நாங்க நன்றி மறப்போமா?''

''செய்யும் உதவிகள் தொடர்ந்தாதான் செய் நன்றி தொடரும். நீங்க ரெண்டு பேரும் தனித்தனியா வேர் ஊன்றிய முருங்கைக் கிளைகள். ஒற்றை முருங்கைக்கிளையா இருந்த நீங்க ஊட்டமா வளந்து பெரிய பெரிய முருங்கை மரங்களா பூத்துக்குலுங்குகிறீங்க. மரங்கள் முழுக்க முருங்கைப்பூக்களும் நீளநீள முருங்கைக்காய்களும். நானோ பூச்சியடிச்ச முருங்கைமரம். பூக்கள் கொட்டிவிட்டன. பேருக்கு ஒரு முருங்கைக்காய் கூட என் மரத்தில் இல்லை!''

இரு தங்கைகளும் கண்ணீருடன் பவதாரணியின் வாயைப் பொத்தினர்.

''ஜி.ஜே. மருத்துவமனைக்கு போன ஏறக்குறைய எல்லா பெண்களும் தாய்மை அடைஞ்சிருக்காங்க. உனக்கும் மணிமணியா குழந்தை பிறக்கும்.''

''எனக்கு அறவே நம்பிக்கை இல்லிங்கடி. எனக்கு எதை பார்த்தாலும் எரிச்சல் பொங்குது.



பெயர் தெரியாத நபர்களிடம் தோற்றுவிட்டதாக நினைக்கிறேன். எனது ரெண்டித்தனத்துக்கும் உயர்வு மனப்பான்மைக்கும் கடவுள் சரியான தண்டனை குடுத்துவிட்டான் போல...''

''உனக்கு ஏதாவது ஒரு விதத்ல உதவ அபிலாஷிக்கிறோம் பவாக்கா!'' ஸ்வாதி

''இப்டி செஞ்சா என்னக்கா?''

''எப்டி?''

''ஜி.ஜே. மருத்துவமனை பெண் மருத்துவர் சொன்ன யோசனை ஆக்கப்பூர்வமா தெரியுது. நாம செய்றது நம்மளோட மூணு புருஷன்மாருக்கும் தெரிய வேணாம்!''

''என்ன சொல்ற நீ?''

''என்னுடைய சினை முட்டையையும் ஸ்வாதியோட சினைமுட்டையையும் தானமா தருகிறோம். அதனை உன்னவர் விந்தணுவோட சேத்து உன் கர்ப்பப்பைக்குள்ள பாதுகாப்பா பதிக்கச் சொல்லு. நீ தாயாய்டுவ. உன்னை விட்டு மலடின்ற பட்டம் ஓடியே போய்டும்!''

''கேக்றதுக்கே விரசமாயிருக்குடி... இதுக்கு நீங்க ஒத்துக்கிட்டாலும் நான் ஒத்துக்க மாட்டேன்!''

''வேற என்னதான் பண்ணச் சொல்ற?'' கஸ்தூரி.

''நம்ம நெருங்கின சொந்தத்ல ஏதாவது ஒரு குழந்தையை தத்தெடுத்திருவோமா?''

எதிர்மறையாய் தலையாட்டினாள் பவதாரிணி.

''பின்னே?''

''என் மனசுக்குள்ள ஒரு ஆசை இருக்கு. சொன்னா தப்பா எடுத்துப்பீங்களாடி?''

''இல்ல... சொல்லு!''

''ஸ்வாதிக்கு ரெண்டாவது குழந்தை பிறக்கப் போகுது. கஸ்தூரி உனக்கோ முதல் குழந்தைதான் பிறக்கப் போகுது. உங்கள்ல யாராவது ஒருத்தர் உங்களோட ஒரு குழந்தையை எனக்கு தத்துக் குடுத்திருங்களேன்!''

விக்கித்துப் போனாள் ஸ்வாதி. பவதாரிணியின் இந்த பேச்சை ஏற்கனவே யூகித்துவிட்ட கஸ்தூரி முறுவலித்தாள்.

''விளையாட்டுக்குத்தான பேசற பவாக்கா?'' வினவினாள் ஸ்வாதி.

''இல்ல ஸ்வாதி.. ஹன்ட்ரட் பர்சன்ட் சீரியஸாத் தான் கேக்கிறேன்!''

''இது நடக்ற காரியமா?''

''நீங்க சம்மதிச்சா உங்க புருஷன்மார் எதுக்கு குறுக்கவந்து நிக்கப் போறாங்க! விக்னேஷுக்கு நீதான் அம்மான்னு நல்லாத் தெரியும். அவனை த்தெடுக்கிறது எனக்கு உசிதமா படல!''

''வேற என்னதான் திட்டம் போட்டிருக்க?''

''நீங்க ரெண்டு பேருமே நிறைமாசக் கர்ப்பிணி கள். உங்களுக்கு பிறக்கப்போறது ஆணா பெண் ணான்னு எனக்குத் தெரியாது. குழந்தை பிறந்த 16 நாட்களுக்குள் உங்களிரு குழந்தைகளில் ஒன்றை எனக்கு தத்துக்குடுத்துடுங்க!''

ஸ்வாதி அழுதாள். ''உன் மேல எனக்கு நன்றி இருக்கு. பாசம் இருக்கு. ஆனா நான் பெறுகிற குழந்தையை உனக்கு தத்துக்குடுக்க எனக்கு துளியும் மனசு வரலை. என் விரலை வெட்டிக் கேளு வெட்டித்தரேன். எனது மார்பகங்களில் ஒன்றை அறுத்துக்கேள். அறுத்து தந்து விடுகிறேன். குழந்தையை மட்டுக் கேக்காதே. என்



கணவர் ஒத்துக்கிட்டாலும் நான் ஒத்துகிட மாட் டேன்... ப்ளீஸ்... இந்த நினைப்பை இந்த கணத் தோட விட்டுரு!''

''நீ என்னடி சொல்ற கஸ்தூரி?''

''நான் சென்டிமென்ட் பிசாசு கிடையாது. என் பிள்ளையை நான் யாருக்கும் காசுக்கு விக்கல. என் கூடப்பிறந்த அக்காவுக்கு பரிசாய் தரப் போறேன். குழந்தையும் என் பார்வைலதான் வளரப் போகுது. நா தரேன் பவாக்கா என் குழந்தையை. குடுக்க விரும்பாத ஸ்வாதியை விட்டுரு!''

ஹிஸ்டீரிகலாய் கஸ்தூரியை கட்டிச்சுட்டி ஆட்டினாள் ஸ்வாதி. ''கஸ்தூரி பேசறது கரக்ட் அவதான் குடுக்றேன்னு சொல்றாள்ல. அவ குழந் தையையே வாங்கிக்க. என்னை விட்டுரு!''

''இல்ல ஸ்வாதி!'' தீர்மானமாய் மறுத்தாள் பவதாரிணி. ''உனக்குத்தான் நான் அதிகம் உதவி செஞ்சிருக்கேன். இனிமேலும் பல சந்தர்ப்பங்களில் உதவவும் இருக்கேன். அவ மெச்சுரிட்டி இல்லாத பொடிச்சி. நானு நானுன்னு முட்டி மோதிக்கிட்டு முன்னாடி வந்து நிக்கிற. எனக்கு உன் ரெண்டாவது குழந்தைதான் வேண்டும். அதுவும் சட்டப்படி தத்தை எழுத்துப் பூர்வமா செய்து தர வேண்டும் நீ. யோசிச்சு ஒரு முடிவுக்கு வா!''

''நான் அப்பவும் தர மறுத்தா?''

''நா என்ன பண்ணுவேன்னு எனக்கேத் தெரி யாது. ஐ எம் மோர் டெஸ்பரேட்!''

''செஞ்ச உதவிக்கு கூலி கேக்றியா நீ?''

''பேசாதே. நீங்க ரெண்டு பேரும் எந்திரிச்சு அவங்கவங்க ரூமுக்குப் போங்க. பிரசவ நாளன் னைக்கி மத்தத பாத்துக்கலாம். குழந்தை பாசம் முக்யமா, கூடப்பிறந்த அக்காபாசம் முக்ய

மான்னு அப்ப முடிவெடு!''

மூவரும் எழுந்தமர்ந்தனர். மூவரின் மனக் கடற்கரையிலும் 'சுனாமி' எனப்படும் ஆழிப்பேரலைகள் ராட்சச உயரத்துக்கு எழுந்து உயிர்பலி கேட்டு பேரிச்சரைச்சல் கிளப்பின!

## 12

அழுக்குத் துணிகளைப் போட்டு வைக்கும் கூடைக்கருகே சம்மணமிட்டு அமர்ந்திருந்தாள் ஸ்வாதி. விக்னேஷை மடியில் படுக்கியிருந்தாள். முந்தின நாள் இரவு பவா பேசியதை அசைபோட்டு அசைபோட்டு அழுது கொண்டிருந்தாள் ஸ்வாதி. வீட்டின் சகல இடங்களையும் துழாவிக் களைத்த முரளி ஸ்வாதியைக் கண்டுபிடித்து விட்டான். அவளருகே அவனும் சம்மணமிட்டு அமர்ந்தான். ''என்ன பண்ணிட்டுருக்க இங்க?''

''என் தலைவிதியை நினைச்சு அழுதுக்கிட்டுருக்கேன்!''

''உன் தலைவதிக்கு என்னாச்சு இப்ப?''

''பிறக்கப்போற நம்ம ரெண்டாவது குழந்தையை வலுக்கட்டாயமா தத்தெடுத்துப்பாளாம் எங்கக்கா. எவ்வளவு கெஞ்சியும் அடங்கமாட்டேங்றா. ஆணவமும் அகங்காரமும் மமதையும் பிடிச்சவ.''

''உன் குழந்தையை கேட்ட உங்கக்கா கஸ்தூரியோட குழந்தையை கேட்டாளா?''

''கேட்டா.... கஸ்தூரி தர ரெடியாயிருக்கா.... பவாவுக்கு கஸ்தூரி குழந்தை வேணாமாம்.... நம்ம குழந்தைதான் வேணுமாம்.... என்னா நாமதான்



அவளுக்கு கொத்தடிமையாம்!''

''உன் சொந்தக்காரங்க என் சொந்தக்காரங்க எல்லாம் அவளோட அடாவடித்தனத்தை தட்டிக் கேட்போமா?''

''யாரையும் மதிக்க மாட்டா!''

''உங்கம்மா சொன்னாகூட கேக்க மாட்டாளா?''

''எங்கம்மா பவதாரிணியின் மூத்த கொத்தடிமை!''

''போலீஸுக்கு போவமா?''

வேதனையாய் சிரித்தாள் ஸ்வாதி. ''ம்ஹூம் .... வேணாம்!''

''வேற என்னதான் பண்ணலாம்ன்ற?''

''ராத்திரியோட ராத்திரியா ஊரை விட்டு ஓடிப் போய்டலாம். - எங்கயாவது கண்காணாத எடத்துக்கு. கூலி வேலை செஞ்சாவது பிழைச்சுப்போம். நமக்கு நம்ம ரெண்டு குழந்தைகளும் ரெண்டு கண்ணு போல!''

எதிர்மறையாய் தலையாட்டினான்.

எதனையோ யோசித்து பற்களை நறநறவெனக் கடித்தாள் ஸ்வாதி. ''குழந்தை உயிரோட பிறந்தாத் தான தத்துக்கேப்பா... பிறக்கப்போற குழந்தையை நாம்பளே விஷஊசி போட்டுக் கொன்னுட்டா?''

''உங்கக்காக்காரி மாதிரியே வெறிபிடிச்சு பேசுற... முந்தின வாக்கியத்துக்கும் பிந்தின வாக்கியத்துக்கும் தொடர்பில்லாம பேசுற.... இது நல்லதுக்கில்லை!''

''ஏங்க.... ஏங்க.... இப்டி செஞ்சா என்ன?''

''எப்டி?''

''நீங்களும் தினகரும் சேர்ந்து அரவிந்த்தை தனியா சந்திச்சு பேசி பவாவின் தத்து அய்டியாவை ட்ராப் பண்ண வைங்க!''

''அரவிந்த் ஒரு தொடை நடுங்கி. மனைவிக்கு

எதிரா ஒரு துரும்பைக்கூட கிள்ளிப்போட மாட்டான். அவன்கிட்ட பேசுறது கிரிமினல் வேஸ்ட்!''

''பின்ன என்னதான் பண்ணச் சொல்றீங்க? யோசிச்சு யோசிச்சு மண்டை விண்விண்ணுன்னு தெறிக்குது. தூக்குப் போட்டு செத்திரலாமான்னு கூட தோணுது!''

''அட பைத்தியக்காரி! அதுக்காகவா நாம காதலிச்சம்? கல்யாணம் பண்ணினம்? குழந்தை பெத்துக்கிட்டம்? நீ இல்லாம ஒரு நொடி நான் இந்த உலகத்தல இருப்பேனா? நாம ரெண்டு பேரும் இல்லாம விக்னேஷ் தன்னந்தனியா இந்த உலகத்தல என்ன பண்ணுவான்?''

''அவனையும் நாம கூட்டிட்டு போய்டுவோம்!''

''ப்ளீஸ்... தற்கொலைன்னு இனி ஒரு தடவ பேசாதே! தெளிவா யோசிச்சு பாத்தா எந்த பிரச்சனைக்கும் ஓர் ஆக்கரீதியான தீர்வு கிடைக்கும். யோசி யோசி யோசி. கோபதாபங்களையும் பழிவாங்கும் உணர்ச்சிகளையும் ஒதுக்கி வச்சிட்டு யோசி''.

''சேத்தல சிக்கின கால் போல என் மனசு நகர மறுக்குதுங்க!''

''நாம வேறொரு கோணத்தல இந்த விஷயத்தை அலசுவோம். நமக்கு குழந்தை பிறக்காமயிருந்து, பவதாரிணிக்கு ரெண்டு குழந்தைகள் பிறந்திருந்தா, ஒண்ணை நமக்கு தத்து தருவாளா? நடுநிலையா பதில் சொல்லு!''

''நாம கேக்கவே வேணாம். இடது கையில் ஒரு குழந்தையின் கால்களையும் வலது கையில் ஒரு குழந்தையின் கால்களையும் பிடித்துக் கொண்டு வந்து இரண்டில் ஒன்றை என் மடில போடுவா. 'வச்சுக்க ஒரு குழந்தையை!'ன்னு சொல்லிட்டு போய்ட்டே இருப்பா பவா. ஏன்னா அவ கொடுக்கப்பிறந்தவ. வாழ்க்கையோட மொதலும்



கடைசி தடவையுமா குடுன்னு கை நீட்ரா. அவ மனசு எனக்கு இல்லையே? அவ குடுப்பதும் வன்முறையாத்தான் குடுப்பா. கேக்றதும் வன்முறையாத்தான் கேப்பா!''

''அக்காளோட நல்ல குணங்களையும் ஒத்துக்கிற!''

''அவளை நானும் கஸ்தூரியும் பெண்கடவுள் மாதிரி மதிக்கிறோம். கடவுள் குடுக்கணுமே தவிர பக்தைகளிடம் யாசிக்கக்கூடாது!''

''நான் பேசுறதைக் கேட்டு நீ உணர்ச்சிவசப் பட்றக்கூடாது. நம்ம ரெண்டாவது குழந்தை இறந்தே பிறந்தா என்ன பண்ணுவ?''

''ஒரு பாட்டம் அழுதுட்டு என் செல்வத்தை புதைப்பேன்!''

''பாகிஸ்தான்லயும் காஷ்மீர்லயும் ஏற்பட்ட மாதரி ஒரு பூகம்பம் இங்கயும்....''

''உங்க உதாரணங்களை நிறுத்துங்க. கோராமையா இருக்கு!''

''அப்படின்னா நேரடியா விஷயத்துக்கே வரேன். உன் அக்கா முடிவை மாத்திக்க மாட்டா. நீதான் உன் மனசை மாத்திக்கணும். வன்முறை கிட்ட இழிவா தோக்றதைவிட சகோதர பாசத்துக் கிட்ட பெருந்தன்மையா தோக்கலாம். தோறபது உறுதி என்றான பிறகு கண்ணியமா விட்டுக்குடுத்து விடலாமே?''

''நீங்களா இப்டி பேசுறது?''

''வேற வழி தெரியல. ரெண்டாவது குழந்தையை அவளுக்கு விட்டுக் குடுத்திரு. தத்துக்கு பிறகு உங்கக்கா நம்ம காலடில கிடப்பா; நாம அவளோட தலை மேல நிப்போம். அவ நிரந்தரமா உனக்கு ஒரு ஒற்றை மாட்டுவண்டி ஆய்டுவா. நீ சாட்டையைச் சொடுக்கு. அவ உன்னை எங்க வேணாலும் கூட்டிட்டு போவா!''

''கிடைக்கப் போகும் சலுகைகளுக்காக குழந்தையை விக்கத் தயாராயட்டீங்க!''

''நான் பணத்துக்கு மயங்காதவன் ஸ்வாதி!''

''குழந்தை நம்பள விட்டுட்டு அவகிட்ட இருக்குமா?''

''குழந்தை பிறந்த 16 நாட்களுக்குள்ள அவ உன் குழந்தையைத் தூக்கிட்டு போய்டுவா. குழந்தைக்கு விவரம் தெரியுறப்ப பவாதான் நிஜ அம்மாவாத் தெரிவா!''

''தாய்ப்பால்?''

''பொருளை தானம் பண்ணின பிறகு பொருளின் பசியைப் பற்றி நாம ஏன் கவலைப்படணும்?''

''இன்னும் என்னால தத்து விஷயத்தை ஜீரணிக்க முடியல!''

''காலம் ஜீரணிக்க வைக்கும் கண்ணே!''

அழுதுகொண்டே முரளியின் கையை பிடித்து தனது அடிவயிற்றுக்குள் செருகினாள். ''குழந்தை நகர்றது தெரியுது பாருங்க!''

''ஆமா!''

''தத்து குடுக்றதை பத்தி குழந்தைகிட்ட நாம ஒரு வார்த்தை கேக்க வேணாம்?''

அழுதபடி சிரித்தான் முரளி. ''கேட்டுட்டா போச்சு!'' என்றவன் ஸ்வாதியின் வயிற்றில் உதடுகளை பொருத்தி பேசினான். ''மகனே! / மகளே! உன்னை வலுக்கட்டாயமா தத்து கேக்கிறா உன் பெரிம்மா. நாங்களும் வேற வழி இல்லாம உன்னை குடுக்கப் போறோம். உன் அபிப்ராயம் என்னடா/ என்னம்மா செல்லம் / குட்டி?''

அம்னியாட்டிக் திரவத்தில் மிதந்துகொண்டிருந்த குழந்தை சொல்ல அபிப்ராயம் இருந்தும் சொல்லாமல் சாமர்சால்ட்டியது.

''ஆங்! அப்டிச் சொல்றியாக்கும்!''



''குழந்தை என்னங்க சொல்லுது?''

''தத்து போய்டுறேன்னு சொல்லுது!''

''நிஜம்மாவா?''

''இம்!''

நீண்டதொரு பெருமூச்சு விட்டாள் ஸ்வாதி. ''சரிங்க... தத்துக்குடுத்திரலாம் நம்ம ரெண்டாவது செல்வத்தை !'' மனைவியைத் தேற்றிய முரளி தன்னைத் தேற்றிக் கொள்ள முடியாமல் ஊமையாய் அழுதான்.

மகப்பேறு மருத்துவமனை. அறுவை சிகிச்சை அரங்கத்துக்கு ஸ்வாதி எடுத்துச் செல்லப்பட்டாள். மகப்பேறு மருத்துவர் ஒரு உறுதிமொழித் தாளை நீட்டினார். ''இதில கையெழுத்துப் போடுங்க மிஸ்டர் முரளி. உங்க மனைவிக்கு நாங்க செய்யப் போறது மிகமிக சிக்கலான ஸிஸேரியன். அத்துடன் இன்னொரு முக்யமான உண்மையையும் நான் உங்களுக்கு தெரிவிக்க வேண்டிருக்கு. உங்க மனைவியின் கர்ப்பப்பையில் சிறுசிறு கட்டிகள் முளைத்திருந்தன. ஸ்கேனிங்கில் அவைகளைக் கண்டுபிடித்தும் பிரசவம் வரை கட்டிகளை அகற்ற நாங்க எந்த முயற்சியும் எடுக்கல. இப்ப நாங்க ரெண்டு விஷயம் பண்ணப் போறம். ஒண்ணு - ஸிஸேரியன் பண்ணி உங்க குழந்தையை எடுக்கப் போறம். ரெண்டு - உங்க மனைவியின் கர்ப்பப்பையை அகற்றப்போறம். இனி உங்க மனைவி கருத்தரிக்க முடியாது! எப்படியும் ரெண்டு குழந்தைகளுக்கு பிறகு லேப்ராஸ்கோபி செஞ்சிக்கதான் போறீங்க. ஸோ.... கர்ப்பப்பை அகற்றல் உங்களுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தாது!''

எந்த பதிலும் பேசாமல் அந்தத் தாளில் கையெழுத்திட்டான். ஸிஸேரியனில் ஆண் குழந்தை பிறந்தது. ஆறுமணி நேர போராட்

டத்துக்கு பின் ஸ்வாதியின் கர்ப்பப்பை அகற்றப்பட்டது.

படுத்திருந்தாள் ஸ்வாதி. ஸ்வாதியின் முதல் குழந்தையை விட இரண்டாவது குழந்தையின் அழகு கூடியிருந்தது. ஸ்வாதிக்கு குழந்தை பிறந்த அதே நேரத்தில் கஸ்தூரிக்கும் சுகப்பிரசவமாய் ஆண் குழந்தை பிறந்தது. தனது குழந்தையைத் தூக்கிக் கொண்டு கஸ்தூரி அக்கா படுத்திருக்கும் இன்டென்ஸிவ் கேர் யூனிட்டுக்கு ஓடி வந்து விட்டாள்.

பவதாரிணியின் முன் கஸ்தூரியின் குழந்தையும் ஸ்வாதியின் குழந்தையும் நீட்டப்பட்டன.

பவதாரிணி ஸ்வாதியின் குழந்தையை தூக்கிக் கொண்டாள். மெதுவாக கண்விழித்த ஸ்வாதி "முழு விருப்பத்துடன் தான் என் குழந்தையை உனக்கு தத்து தருகிறேன். என் கண்மணியை பத்ரமா பாத்துக்க!" என சமிக்ஞையில் பேசினாள்.

"ஓகே ஓகே! தாங்க்யூ ஸ்வாதி அண்ட் முரளி! வக்கீல் வைத்து தத்திற்கான டாக்குமென்ட் தயாரித்துள்ளேன். அனுப்புகிறேன். கையெழுத்திடுங்க. இனி இது என் குழந்தை. படைத்த கடவுளாலும் இக்குழந்தையை என்னிடமிருந்து பிரிக்க முடியாது!" வெளியேறினாள் பவா. விதி கண்சிமிட்டியது.

## 13

**க**ஸ்தூரி தனது குழந்தையை மடியில் இருத்தி தாய்ப்பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். மனைவியின் அருகே சென்று அமர்ந்தான் தினகர். மூக்கை சருட்சருட்டென்று இழுத்துக் கொண்டான்.



"என்ன மோப்பம் பிடிக்கிற புருஷா?

"உன்கிட்டயிருந்து வித்தியாசமான வாசனை ஒண்ணு வருது. அந்த வாசனை என்னை கிறங்கடிக்குது. உலகத்ல எல்லா பொண்ணும் எப்ப ரொம்ப ரொம்ப அழகாயிருக்காங்க தெரியுமா? தலைச்சன் குழந்தை பெத்த 72 மணிநேரத்துக்கு. உன் முகம் செக்ஸ் சார்ந்த கிளர்ச்சி தருது. தேவதைகள் எல்லோரும் கூடி உனது முகத்தில தாய்மைத் திருவிழா நடத்துகிறார்கள். பா.விஜய்யின் கவிதைகளாய் இருந்த உன் மார்பகங்கள் வைரமுத்துவின் கவிதைகளாய் புஷ்டித்து போயிருக்கின்றன..."

"எட்டி போ புருஷா! காலை டிபனை ஹெவியா முடிச்சிட்டு மதிய லஞ்சை உடனே கேட்டா எப்டி? நானே நொந்து போய் கிடக்கேன்!"

"எதுக்கு நொந்து போய் கிடக்க?"

"பவாக்கா ஸ்வாதியின் ரெண்டாவது குழந்தையை தத்தெடுக்றதில வெறியாயிருந்துச்சு. ஸ்வாதி தத்து தரவே முடியாதுன்னு அடம் பிடிச்சா. இடைல என்ன நடந்ததுன்னு தெரியல. குழந்தையை தாரை வார்த்துக் குடுத்திட்டா ஸ்வாதி!"

"உலகம் பூராவும் அடாவடிதனத்துக்குத்தான் மரியாதை. அன்பா- பாசமா- பவ்யமா கேட்டா குழந்தையை தத்து குடுப்பாளா ஸ்வாதி? போடின்னு விரட்டி விட்ருப்பா. தாட் பூட் தஞ்சாவூர்னு பவா அளப்பறை பண்ணினா. பயந்து போய் குழந்தையை தூக்கிக் குடுத்துட்டா!"

"குழந்தையை பவாக்கா இப்பவே தூக்கிட்டு போனது எனக்கு சரியாப்படல!"

"ஏன்?"

"குறைந்தபட்சம் மொத மூணு மாசத்துக்காவது குழந்தைக்கு தாய்ப்பால் அதி அவசியம். நோய் எதிர்ப்பு சக்தி அப்பத்தான் குழந்தைக்கு கிடைக்கும். புட்டிப்பால் வயிற்றுப் போக்கைத்தான்

ஏற்படுத்தும். அத்தோட பெத்த தாயின் அரவணைப்புல - கதகதப்புல குழந்தை இருத்தல் நலம்!''

''சரி, நா உன்னை கேக்கணும் கேக்கணும்னு நினைச்சேன். பிரச்சனை அவங்களுக்குள்ள இருக்க நீ எதுக்கு நம்ம குழந்தையை தத்து தரேன் தத்து தரேன்னு மூக்கை நீட்ன? குழந்தையை தர்ற மாதிரி பாவ்லாதான பண்ணின? பவாவும் ஸ்வாதியை விட்டுட்டு உன்பக்கம் திரும்பியிருந்தா நாஸ்தி ஆயிருப்ப!''

அற்ப புழுவை முறைப்பது போல பார்த்தாள். ''யோவ்! நா ஒண்ணும் பாவ்லா பண்ணல. என் குழந்தைய பவாக்காவுக்கு குடுக்கத்தான்ய்யா ரெடியா இருந்தேன். பவாக்காவுக்காக நான் என் உயிரையும் குடுப்பேன்ய்யா!''

''யோவ்வா? என் பெர்மிஷன் இல்லாம என் குழந்தையை நீ குடுத்திருவியா?''

''உன்னை எதுக்கு கேக்கணும்?''

''நம்ம குழந்தைல எனக்கு பிப்டி பர்சன்ட் ஷேர் இருக்குடி வாயாடி!''

''ஷேரை பத்தி பேசாதே மாவீரா. அன்னைக்கி பவாக்கா கருணைக்கண் காட்டலைன்னா நம்ம கல்யாணம் நடந்திருக்குமா? இன்னைக்கி நம்ம சித்தா பார்மாகுட்டிகல்ஸ் சிறப்பா நடக்க காரணமே - பவாக்கா நம்மை ஒரு வருஷம் வேலைக்கு அனுப்பி போட்டுக் கொடுத்த அஸ்தி வாரம்தான். பவாக்கா நல்லவளோ கெட்டவளோ எனக்கு தெரியாது. அவ என் தலைவி. நான் அவளின் தொண்டச்சி. அவ சரித்திரம் கண்ட நூறு வீரப் பெண்களின் கூட்டுக்கலவை.''

''அக்கா புராணம் பாடாதே. காது கூசுது. பவாக்கா மீது உனக்கு ப்ரியம்- பாசம்- பற்று- விசுவாசம் இருக்கு. ஓகே ஒத்துக்கிறேன். ஸ்வாதியும் உன் அக்காதான? அவமேல உனக்கு



பாசமில்லையா?''

''ஸ்வாதி மேல பாசம் இல்லாமயா, அவளுக்கு பதிலா குழந்தையை தத்துக் குடுக்க நான் முன் வந்தேன்?''

''ஸ்வாதியின் ஒரு குழந்தையை பவா தூக்கிட்டு போய்ட்டா. வேதனைக்கடலில் மூழ்கி இருக்கும் ஸ்வாதிக்கு எப்டி ஆறுதல் கூறப்போற?''

''ஏதோ வம்படி பன்ற திகைர்? வார்த்தை தூண்டில் போட்டு என் வார்த்தை மீன்களை இழுக்ற.''

''அட நீ வேற.... ரொம்ப ரொம்ப யதார்த்தமா தான் பேசுறேன் கஸ்தூரி. இப்ப பவாவுக்கு தத்தெடுத்த ஒரு மகன். ஸ்வாதிக்கு தத்து குடுத்தது போக மிஞ்சியிருப்பது ஒரே ஒரு மகன். தற்சமயம் உனக்கு ஒரே ஒரு மகன். இருந்தாலும் தொடர்ந்துநீ ஆணோ பெண்ணோ இரு குழந்தைகள் பெற உத்தேசித்திருந்தாய். ஒன் ஈக்குவல் டு ஒன் - சரி. ஒன் ஈக்குவல் டூ த்ரி தப்பில்லை? மூன்று அக்கா தங்கச்சிகளுக்குள் ஈகோ கிளாஷ் எழுமே? இன்று முட்டிமோதிக் கொண்ட பவாவும் ஸ்வாதியும் நீயும் ஒண்ணு நானும் ஒண்ணுன்னு கை கோர்த்துக்கு வாங்க. நீ அவங்க ரெண்டு பேருக்கும் பொது எதிரியாய்டுவ!''

கணவனை ஆச்சரியமாக பார்த்தாள் கஸ்தூரி. ''குயுக்தியா பேச எங்க கத்துக்கிட்ட?''

''பார்ரா பார்ரா... உண்மைய பேசறவன்களுக்கு பெண்கள் குடுக்கிற பட்டங்களை... நான் பேசறது குயுத்தி இல்லை.... மிகச் சரியான யூகம் பண்ணி பேசுகிறேன்!''

யோசித்தாள் கஸ்தூரி. ''நீ கேக்ற கேள்விய என் மனசு நேத்தே கேட்டிருச்சு. என்ன பண்ணலாம்னு மனசை ஐடியா கேட்டேன். மனசும் ஐடியா குடுத் துருச்சு 1=1=1ன்னு கணக்கை நேர்படுத்திட்டேன்!''

''என்னடி சொல்ற?''

''உன்னைக் கேக்காமயே லேப்ராஸ்கோப்பி பண்ணிக்கிட்டேன். இனி எனக்கு குழந்தை பிறக்காது.''

''உளர்றியா?''

''நிஜத்தைதான் சொல்றேன்!''

''என் அனுமதி இல்லாம நீ எப்டிடி குடும்பக் கட்டுப்பாடு செய்யலாம்?'' கழுத்தை நெறிக்கப் பாய்ந்தான்.

''கொல்லப் போறியா, கொல்லு!''

முன்னுக்கு பாய்ந்த கைகளை பின்னுக்கு இழுத்துக் கொண்டான்.

''டாமிட்! அறிவுகெட்ட முண்டமே! கூமுட்டை கூமுட்டை! அதிகப்பிரசங்கி!''

''வசவு வார்த்தைகள் ஸ்டாக் இல்லையா?''

''போயும் போயும் உன்னை போய் காதலிச்சேனே.... அக்கா தங்கச்சிகளாடி நீங்க. திமிர் பிடிச்ச கழுதைகள்! அகம்பாவம் பிடிச்ச அறிவிலிகள்! ஒண்ணுக்கு ஒண்ணு சலிச்சதுக இல்லை. ஒண்ணு ஏணில ஏறுதுன்னா இன்னொண்ணு தோணில ஏறுது. பாசம்ன்ற பேரால நீங்க பண்ற கிறுக்குத்தனங்களை தாங்க முடியலப்பா. உங்கஅப்பன் ஒரு ஆம்பிளை பிள்ளையும் சேத்து பெத்து போட்டுட்டு போயிருந்தான்னா நல்லா இருந் திருக்கும். அண்ணனாகவோ தம்பியாகவோ நின்னு உங்களுக்கு யதார்த்தத்தை சொல்லிக் குடுத்திருப்பான். மூணு பொட்டச்சிகள் சேந்து கனவுலகில சஞ்சரிக்கிறீங்க!''

''தட்ஸ் தி லிமிட். ஆஸ்பத்திரின்னு நினைச்சியா இத உன் படுக்கையறைன்னு நினைச்சியா? விட்டா பேசிக்கிட்டே போற. நாங்க பொட்டச்சிகள் அப்படித்தாய்யா இருப்பம். விருப்பமிருந்தா குடும்பம் நடத்து. இல்லன்னா போய் சித்தமருத்துவ மூலிகை பண்ணைல கயித்துக்கட்டில் போட்டு



...டுத்துக்க!''

பதில் பேசாமல் மௌனித்தான் தினகர்.

''என்ன ஊமையாய்ட்ட?''

''பிரச்சனைகள் இத்தோட முடிஞ்சிரும்னு நினைச்சிக்கிட்டிருக்கீங்கடி மூணுபேரும். இப்பத்தான் பிரச்சனைகளை விதைச்சிருக்கீங்க. இனி அவை வளர்ந்து பெரிய மரமாகி தீராத சங்கடங்களை உண்டுபண்ணும்!''

''பிரச்சனைகள் எந்த சைஸில் வந்தாலும் சந்திக்க நாங்க தயார்!''

அதற்கு மேலும் பேசாமல் அறையை விட்டு வெளியேறினான் தினகர்.

பவதாரிணியின் தத்து மகனுக்கும் கஸ்தூரியின் மகனுக்கும் பெயர் சூட்டும் வைபவம் நடந்தது. குழந்தைகளின் பிறந்த தேதியையும் ராசியையும் லக்னத்தையும் அடிப்படையாகக் கொண்டு எண் கணித வல்லுநர் கீழ்க்கண்ட உச்சரிப்பில் பெயர் சூட குறித்துக் கொடுத்திருந்தார்.

பவதாரிணியின் மகனுக்கு –

'ச சா சி சீ சு சூ செ சே சை சொ சோ சௌ' எழுத்துக்களில் ஆரம்பிக்கும் பெயர்

கஸ்தூரியின் மகனுக்கு

'ம மா மி மீ மொ மோ மௌ' எழுத்துக்களில் ஆரம்பிக்கும் பெயர்.

பவதாரிணி தனது மகனுக்கு 'சந்துரு' என பெயர் சூட்டினாள். பவா வைத்த பெயரை கஸ்தூரியும் ஸ்வாதியும் ஆமோதித்தனர். ''துறுதுறுப்பான பையனுக்கு சந்துரு பெயர் பொருத்தம் தான்!''

''சந்துரு! என் மகனே!'' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் ஸ்வாதி. ஸ்வாதியின் மகன் விக்னேஷ் சந்துருவுக்கு முத்தம் கொடுத்து ஒரு

பொம்மையை பரிசளித்தான்.

கஸ்தூரி "பவாக்கா! நீயே என் பய்யனுக்கு பேர் வச்சிடு!"

"நான் பேர்வச்சா உன் புருஷன் ஒண்ணும் சொல்ல மாட்டாரில்ல...?"

"அவர் வாயில்லாப்பூச்சி. என்ன சொல்லப் போறார்?"

"மனோகர்... மாரிமுத்து..." என சொல்லிக் கொண்டே போனவள், "மனோபாலா!" என நிறுத்தினாள்.

"மனோபாலா - பெயர் நல்லாத்தான் இருக்கு பவாக்கா!" மனோபாலா - எனும் பெயரை அனைவரும் ஆமோதித்தனர். 'கமலநாதன்' எனும் பெயர் தன் மூன்று பேரக்குழந்தைகளில் எக்குழந்தைக்கும் வைக்கப்படவில்லையே என உள்ளுக்குள் வெந்து போயிருந்தாள் சீதாலெட்சுமி.

விக்னேஷ் மனோபாலாவுக்கும் முத்தம் கொடுத்து இன்னொரு பொம்மையை பரிசளித்தான்.

புகைப்படக் கலைஞன் மூன்று தாய்மார்களுக்கும் பொதுவான விண்ணப்பம் வைத்தான்.

"எல்லோரும் அவங்கவங்க குழந்தையைத் தூக்கிக்கிட்டு போட்டோவுக்கு போஸ் குடுங்க!"

நடுவில் பவதாரிணி சந்துருவுடன் , பவதாரிணிக்கு இடப்பக்கம் ஸ்வாதி விக்னேஷுடன். பவதாரிணிக்கு வலப்பக்கம் கஸ்தூரி மனோபலாவுடன்.

பவா, ஸ்வாதி என்ன முகபாவம் காட்டுகிறாள் என ஓரப்பார்வை பார்த்தாள். இரவல் குழந்தையை வைத்துக்கொண்டு பவா என்ன முகபாவம் காட்டுகிறாள் என உளவறிந்தாள் ஸ்வாதி. பவாவும் ஸ்வாதியும் செய்யும் நிழல் யுத்தத்தை பத்து சதவீத வேதனையுடன் ரசித்து பார்த்தாள் கஸ்தூரி. மூன்று தாய்மார்களின் உள்ளக்கிடக்கைகளை மூன்று குழந்தைகளும் அறியாது சிரித்துக்



கொண்டிருந்தன.

'கிளிக்!'

பவா + ஸ்வாதி + கஸ்தூரி கூட்டணி தி.மு.க + காங்கிரஸ் + பா.ம.க.கூட்டணி போல் சிதறி ஓட நேரம் பார்க்கிறது. விக்னேஷ் + சந்துரு + மனோபாலா அடுத்த தலைமுறை கூட்டணி, காலத்துக்கும் நிலைக்குமா?

கடவுள் எதிர்மறையாய் உதடு பிதுக்கினார்.

## 14

உலா தொலைபேசி அழைத்தது. எடுத்து காதில் இணைத்தாள் பவா. எதிர்முனையில் ஜேஜி மருத்துவமனையின் தலைமை பெண் மருத்துவர் குரல் ஒலித்தது. "இஸிட் பவதாரிணி மேடம்?"

"எஸ்!"

"ஜேஜி மருத்துவமனை சீஃப் பேசறேன் . இப்ப நீங்க எங்கிருக்கீங்க?"

"காண்டாக்ட் செமினார் கிளாஸ் எடுக்க சென்னை வந்திருக்கேன்!"

"கூட அரவிந்த் வந்திருக்கிறாரா?"

"இல்லை... நான் மட்டும்தான்!"

"செமினார் கிளாஸஸ் எப்ப முடியும்?"

"மாலை ஆறுமணிக்கு!"

"என் மருத்துவமனைக்கு ஈவினிங் ஏழு மணிக்கு வந்திடுங்க. உங்ககிட்டக் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு!"

"என்ன விஷயம் டாக்டர்?"

"நேர வாங்களேன் சொல்றேன்...." எதிர்முனை மௌனித்தது.

- படபடப்புடன் செமினார் வகுப்புகளை எடுத்து முடித்தாள் பவா. கார் மருத்துவமனை நோக்கி சீறிப்பாய்ந்தது. காத்திருந்த நோயாளி

களைத் தாண்டி தலைமை பெண் மருத்துவரின் ஆலோசனை அறைக்குள் ஓடினாள் பவதாரிணி.

"வாங்க பவதாரிணி. உக்காருங்க!"

அமர்ந்தாள்.

"சொல்லுங்க டாக்டர்..., என்ன விஷயம்?"

"உங்க திருமண வாழ்க்கை எப்டியிருக்கு?"

"பிரமாதம்!"

"குழந்தை கிழந்தை தத்தெடுத்திட்டீங்களா?"

"ஆமா..."

"சொந்தத்திலா, அயலிலா?"

"என் மூத்த தங்கையின் இரண்டாவது மகனை தத்தெடுத்திட்டேன். உங்களைத் தவிர வேறு யாரிடமும் இந்த 'தத்து' என்கிற வார்த்தையை நான் கூறுவதில்லை. என்னுடைய நினைவு அகராதியிலிருந்து 'தத்து' என்கிற வார்த்தையை நிரந்தரமாக அகற்ற உத்தேசித் திருக்கிறேன்."

"மகனின் பெயர்?"

"சந்துரு!"

"கங்கிராட்ஸ். ஆனா.. நீங்க கொஞ்சம் அவசரப்பட்டுட்டீங்க பவதாரிணி!"

"எப்டி?"

"போன வாரம் என்னுடைய உதவி மருத்துவர் உங்க இருப்பிடத்துக்கு வந்து சில சோதனைகள் மேற்கொண்டு விட்டு சில திரவங்களை ஐஸ் பாக்ஸில் எடுத்து வந்தாரல்லவா?"

"ஆமா!"

"சோதனையில் உங்க சினைமுட்டை உற்பத்தி கேந்திரம் சிறப்பா செயல்பட ஆரம்பித்துள்ளது தெரியவந்துள்ளது. மைக்ரோஸ்கோப் ஸ்லைடில் பதிக்கப்பட்ட உங்க சினைமுட்டை இந்த புகைப் படத்தில் தெரியுது பாருங்க... உங்க பெலலோ பியன் ட்யூப்களை அடைத்திருந்த கொழுப்புகள் கரைந்து அகன்று விட்டன. இப்ப நீங்க அழகான ஆரோக்கியமான குழந்தையை சொந்தமாகவே பெத்துக்கலாம்!"

"கடவுள் ஒரு சாடிஸ்ட் டாக்டர். கேக்கும்



போது குடுக்க மறுத்திட்டு கேக்காதபோது வாரி வழங்கத் துடிக்கிறான். என்னுடைய குழந்தைத் தேடுதல் முற்றுப்பெற்றுவிட்டது. சாதாரணமாவா என் தங்கச்சி ஸ்வாதி தன்னுடைய குழந்தையை தத்துக குடுத்தா? ஏகப்பட்ட மெலோடிராமாஸ் டாக்டர்..." நடந்ததை ஓரளவு சுருக்கமாக விவரித்தாள்.

"தன்னுடைய குழந்தையை உங்க தங்கச்சி முழு மனசோட தாலன்னு நீங்களே சொல்றீங்க. நீங்க அடுத்த ஒரு வருஷத்ல குழந்தையை பெத்துக் கிட்டு அவங்க குழந்தையை திருப்பிக் குடுத் திருங்களேன். தத்து சம்பந்தப்பட்ட லீகல் டாக்கு மெண்டலையெல்லாம் கிழிச்சு விட்டு எறிங்க!"

"அது அவ்வளவு ஈஸி இல்ல டாக்டர்!"

"ஏன்?"

"சந்துருவை தத்தெடுத்து ரெண்டு வருஷ மாகுது. நான் அவனை பெறலையே தவிர அவன் தான் எனக்கு உண்மையான மகன். எங்களுக்கு இடையே உள்ள நெருக்கமான உறவை வார்த்தை களால் விவரிக்க முடியாது. ஐ எம் டோட்டலி அடிக்டட் டு ஹிஸ் லவ். நானில்லாம அவனில்லை. அவனில்லாம நானில்லை. என் காரின் ஆறு இடங்களில் அவனது புகைப்படம் இருக்கு. எனது பர்ஸில் அவனது இரு போட்டோக்கள் உள்ளன..."

"சரி, அவனும் இருக்கட்டும்! நீங்களும் ஒரு குழந்தை பெத்துக்கங்க. குழந்தைகள் ஒண்ணுக்கு ரெண்டா இருக்கட்டும். ஒண்ணுக்கு ஒண்ணு துணையாக போய்டும்!"

"நான் குழந்தை பெத்துக்கிறது புதிய மனக் கொந்தளிப்புகளை எங்க குடும்பத்துக்குள் உரு வாக்கும். எனக்காகவும் ஸ்வாதிக்காகவும் வேண்டி கஸ்தூரி முதல் குழந்தையோட லேப்ராஸ்கோப்பி செஞ்சிக்கிட்டா. தத்துக்கு பிறகு குடும்பம் அமைதியா உற்சாகமா போய்ட்டிருக்கு."

"அப்ப என்னதான் பண்ணலாம்னு சொல்றீங்க பவதாரிணி?"

''இந்த விஷயத்தை இத்தோட விட்டுருங்க டாக்டர் எனது கணவர் அரவிந்த்துக்கு இதுபத்தி தெரியவேணாம்.''

''உங்களையறியாம நீங்க கர்ப்பமாய்ட்டா?''

''மெனோபாஸ் பீரியட் வரைக்கும் தற்காலிக குடும்பக் கட்டுப்பாடு முறைகள் உபயோகித்து குழந்தை பெறுதலை தள்ளிப்போடுவேன் டாக்டர்.''

''அது நீங்க நினைக்ற மாதிரி எளிதில்ல!''

''என்னால முடியும் டாக்டர்!''

''நானும் இத்ன வருஷத்ல ஆயிரக்கணக்கான பெண்களுக்கு சிகிச்சை தந்திருக்கேன். ஒவ்வொரு பெண்ணும் விநோதமா - விசித்திரமாத்தான் இருக்கீங்க. ஒரு கிலோமீட்டர் தூரத்தை கடக்க மிக எளிய வழி இருந்தால் நூறுகிலோ மீட்டர் சுத்திப்போகும் ஆயிரம் மாற்று வழிகளில் ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்கிறீர்கள். இப்பவும் சொல்றேன்..., நீங்க தேர்ந்தெடுக்கும் வழி, சரியல்ல. அடுத்த ஒரு வருடத்துக்குள் உங்க உறவு சிக்கல்களையெல்லாம் நேர்படுத்திக்க ஓர் அற்புதமான வரம் குடுத்திருக்கான் அந்த ஆண்டவன். நீங்க மறுக்றீங்க!''

''சூரியன் கிழக்கில் உதிக்கும் எனும் விஞ்ஞான உண்மையை நீங்க அறிவுரையாகக் கூறினால் நான் கேக்கத் தயாரில்லை. ஒவ்வொரு முறையும் கத்தியை என் நெஞ்சில் குத்தித்தான் அதன் கூர்மையை முடிவு செய்கிறேன். ஏழெட்டு மொழிகள் கற்றறிந்தவன் மிகப் பெரிய குற்றங்களை சளைக்காமல் செய்வான்னு கூறுவாங்க. அதிக படிப்பு, அலங்கரிக்கப்பட்ட அறியாமைகளை ஆராதிக்கும். என்னுடைய வழில என்னைப் போக விடுங்க டாக்டர். எளிதான பாதைகள் என் கால்களுக்கு பிடிப்பதில்லை!''

''நீங்க தத்தெடுத்த சந்துருவின் புகைப் படத்தைக் காட்டுங்க!''

காட்டினாள்.

''ஹாலிவுட் நடிகர் பென்அப்லேக் ரெண்டு



வயசில இப்படித்தான் இருந்திருப்பார்.''

உலாதொலைபேசி சிணுங்கியது. ''என் பய்யன்தான் பேசுறான்!''ஹலோ சந்துரு!''

''ஹாய் மம்மி! சென்னைல என்ன பண்ணிட்டுருக்க?''

''தெரிஞ்சவங்ககிட்ட பேசிட்டுருக்கேன்!''

''வேகமா சி(த)ம்பரம் வந்து சேரு!''

''என் ஃப்ரெண்ட் கிட்ட ரெண்டு வார்த்தை பேசேன்!''

''அவங்க லேடீஸா, ஜென்ட்ஸா?''

''லேடி!''

உலா தொலைபேசியை வாங்கி காதில் இணைத்துக் கொண்டார் மருத்துவர். ''ஹலோ சந்துரு!''

''ஹாய் ஆன்ட்டி!''

அவனிடம் வேடிக்கையாக பேசிவிட்டு உலா தொலைபேசியை பவாவிடம் கொடுத்தார் மருத்துவர். பவா மேலும் பல சமாதான வார்த்தைகள் உதிர்த்து கருவியை மௌனப் படுத்தினாள்.

''எனி வே! பெஸ்ட் ஆப் லக் மிஸஸ் பவதாரிணி. இந்த அன்பும் பாசமும் ஆயுளுக்கும் தொடரட்டும். மீண்டும் ஒரு மகிழ்ச்சியான தருணத்தில் சந்திப்போம்!''

இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர். நிறுத்துமிடத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்த காரைக் கிளப்பினாள். கார் சீறிப் பாய்ந்தது.

இரும்பு கேட்டை ஓடிவந்து திறந்துவிட்டான் காவலாளி. காரை உள்ளே நிறுத்திவிட்டு தோட்டத்துக்கு நடந்தாள். அங்கே - விக்னேஷும் மனோபாலாவும் கைகட்டி அமர்ந்திருந்தனர். ஆசிரியன் போல் கையில் ஒரு மெலிதான பிரம்பு வைத்துக்கொண்டு பாடம் நடத்திக் கொண்டிருந்தான் சந்துரு. ''புரியுதா? எப்பவும் நான் புரபஸர், நீங்க ரெண்டு பேரும் ஸ்டூடன்ட்ஸ். எனக்கு

நீங்க அடங்கியே நடக்கணும். எதுமாதிரி தெரியுமா? எங்க மம்மிக்கு உங்க மம்மிக அடங்கி நடக்றமாதிரி. எதாவது வம்பு பண்ணீங்க..... பிச்சப்புடுவேன் பிச்சு!''

''சபாஷ்!'' கைதட்டியபடி வெளிப்பட்டாள் பவதாரிணி. சந்துரு ஓடிப்போய் அம்மாவை கட்டிக் கொண்டான். மூன்று ஸ்வீட் பாக்ஸ்களை சந்துருவிடம் நீட்டினாள். சந்துரு தனக்கு ஒன்றை வைத்துக்கொண்டான். மீதி இரண்டை விக்னேஷுக்கும் மனோபாலாவுக்கும் தானம் செய்தான்.

- இருவார பேய்மழை முரளியின் இறால்மீன் பண்ணைகளை ஒட்டுமொத்தமாய் அழித்து விட்டது. முரளிக்கு பத்து லட்சம் ரூபாய் நஷ்டம். ஸ்வாதியிடம் முரளி அழுது முறையிட்டுக் கொண்டிருந்தான்.

''யாமிருக்க பயமேன் முரளி!'' தன்னுடைய கரூர் வைஸ்யா வங்கியின் கிரெடிட் கார்டை ஸ்வாதியின் மடியில் விசிறினாள் பவா. ''எத்னி லட்சம் வேணுமானாலும் எடுத்துக்க. சந்துரு தவிர அரவிந்த் தவிர என்னுடைய எல்லாம் உனக்குத்தான்! உனக்கு ஊழியம் புரிய கதவோரம் காத்துக் கிடக்கிறேன் அருமைத் தங்கையே!'' பவாவின் உதடுகளில் இழிவான நகைப்பு நெளிந்தோடியது!

## 15

நான்காண்டுகள் கரைந்தோடின.

கஸ்தூரியும் தினகரும் தயங்கித்தயங்கி பவாவிடம் வந்தனர். ''என்னடி கஸ்.... என்ன விஷயம்?''

''நீயே சொல்லுப்பா!'' கணவனிடம் கிசுகிசுத்தாள் கஸ்தூரி.

''சொல்லுங்க தினகர்!''



''எங்க மூலிகை பண்ணைலதான் பிரச்சனையே!''

''என்ன பிரச்சனை?''

''எங்க மூலிகை பண்ணைக்கு பக்கத்ல கிடக்ற காலி இடத்தை ஒருகட்சிக்காரன் வேலி கட்டி ஆக்கிரமிச்சிருக்கான்!''

''எந்த கட்சி?''

''விடுதலைக்கரடிகள் கட்சி!''

''அப்றம்?''

''மெதுமெதுவா நம்ம பண்ணைக்குள்ளயும் கால் வைக்றான். 'என்னப்பா... இப்டி பண்ற'-ன்னு கேட்டதுக்கு ஒருலாரி நிறைய ஆடுகளை ஓட்டிட்டு வந்து மூலிகை பண்ணைக்குள்ள விட்டுட்டான். ஆடுகள் எல்லா மூலிகைகளையும் மேஞ்சிட்டு போய்ருச்சு. அதனால நமக்கு பலத்த நஷ்டம். சப்ளை பாதிச்சிருக்கு. அதட்டிக் கேட்டா நம்ம மூலிகைப்பண்ணை இடமே அவன் இடம்ன்றான். நேத்தைக்கி கஸ்தூரி முன்னாடி வேட்டியை கழட்டிப் போட்டுட்டு டான்ஸ் ஆடுறான். 'போலீஸ்க்கு போ. எனக்கு பயமில்லை'-ன்றான்!''

''அவன் பேரென்னன்னு விசாரிச்சீங்களா?''

''இம். அவன் பெயர் புயல்மாறன்!''

''அந்தக் கட்சில ஏதாவது பொறுப்பில இருக்கானா?''

''தெரியல...''

''அவன் கூட எத்னி ஆளுக இருக்காங்க?''

''எப்புவுமே நாலு ஆட்களுக்கு குறைவில்லாம நிக்றாங்க. ஒவ்வொருத்தனும் நூறு கிலோ நூறுகிலோ எடை இருப்பான். என்ன பண்றதுன்னு தெரியல!''

''எந்த நேரத்ல வந்து கலாட்டா பண்றான்?''

''காலைல பதினோரு மணி ரேஞ்சுக்கு - சாயந்தரம் ஆறுமணி ரேஞ்சுக்கு வரான். சாயந்தரம் வரும்போது புல் போதைல இருக்கான்!''

''அப்டியா? நாளைக்கு காலைல பத்தரை மணிக்கு உங்க மூலிகை பண்ணைக்கு வரேன்.

மத்தத நேரல பாத்துக்கலாம்!''

''பவாக்கா... எதுவும் அடிதடில இறங்கிடாதே... விஷயம் பெருசாய்டப் போகுது!''

பதில் பேசாமல் முறுவலித்தாள் பவதாரணி. மறுநாளைய நடவடிக்கை பற்றிய யோசனையில் அவளது மனம் ஆழ்ந்தது.

**சி**தம்பரம்-சீர்காழி நெடுஞ்சாலை, மூலிகை பண்ணைக்குள் காரைச் செலுத்தினாள் பவதாரணி. பவா ட்ராக் சூட்டில் இருந்தாள். அவளருகே சந்துரு அமர்ந்திருந்தான். இருவரும் இறங்கினர். கஸ்தூரியும் தினகரும் வரவேற்றனர். இளநீர் சீவி கொடுத்தான் பண்ணைக்காரன். உறிஞ்சினாள் பவா. உறிஞ்சத் தெரியாமல் திண்டாடினான் சந்துரு. இளநீரை ஒரு டம்ளரில் கவிழ்த்து குடிக்கக் கொடுத்தாள் பவா. பண்ணைக்கு வெளியே ''கஜினி முகமது கஜினிமுகமது படையெடுக்க வாடா!'' எனும் சினிமா பாட்டு கேட்டது.

தினகர் பதறினான். ''அந்த புயல் மாறன் வந்திட்டான்!''

''நீங்க எல்லாம் வேலி ஓரமா நின்னு வேடிக்கை பாருங்க! வெளியே வந்திராதிங்க!''

ஓட்டமும் நடையுமாய் வெளியே போனாள் பவா. காரை விட்டு இறங்கி குத்தாட்டம் ஆடிக் கொண்டிருந்தான் புயல்மாறன். விரல் சுண்டி அவனை அழைத்தாள் பவா. ''இங்க வா!''

''அண்ணன் அந்த பொம்பிளை உங்கள மரியாதைக் குறைவா கூப்ட்ரா!''

மெதுவாக மாறன் பவாவை நோக்கி நடந்து வந்தான். ''என்ன மப்பா? விரல் சுண்டி கூப்ட்ற?''

''வேறப்டி கூப்டுறது. பவள சம்பத், விண்ணரசன், நெட்டை அப்பி - இவன்ககூட சேர்ந்து கள்ளச்சாராயம் காய்ச்சினவன்தான நீ?''

''அது பழைய கதை. பேச வந்ததை பேசு!''

''என் தங்கச்சியோட மூலிகை பண்ணைக்குள்ள



புகுந்து அட்டூழியம் பண்ண உனக்கு யார் அதிகாரம் குடுத்தது?''

''எவன் குடுக்கனும்? அதிகாரத்தை நானே எடுத்துக்கிட்டேன்!''

''இறுதியா சொல்றேன்...... இனி நீ மூலிகை பண்ணைக்குள்ள வரக்கூடாது! பண்ணையை ஒட்டிய இடங்களை நீ ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது!''

''ஆக்கிரமிப்பு செஞ்சா என்னடி பண்ணுவ?''

''தூக்கிப் போட்டு நாலு மிதி மிதிப்பேன்டா!''

''பொட்டச்சிக்கு இவ்வளவு திமிரா?''

''பொட்டச்சி கிட்டசின்ன வாய்ல சூடு போடுவேன்!''

''எங்கண்ணனை தொட்ருவியா என்ன?''

எகிறிக் கொண்டு வந்த நான்கு தடியர்களை எதிர்கொண்டாள் பவா. முதலாமவனுக்கு முகத்தில் குத்து வெடித்தாள். இரண்டாமவனின் நடுநெஞ்சை உதைத்தாள். மூன்றாமவனின் இடது கையைத் திருகி உடைத்தாள். நான்காமவனுக்கு உயிர்நிலையில் உதைவிட்டு காற்றுப்போக்கில் கு.சு. பண்ணினாள். ''இப்ப நீ ஒருத்தன்தான்டா பாக்கி... வா...''

வெறித்தனமாய் பாய்ந்தான் புயல்மாறன். பலத்த கைச்சண்டை மூண்டது. பவா சரமாரியாகத் தாக்கினாள். டி. ராஜேந்தர் பாணியில் திட்டித்திட்டி அடித்தாள்.

''இந்த கால்தானடா டான்ஸ் ஆடுச்சு?''

''இந்த வாய்தானடா அசிங்க அசிங்கமா பேசுச்சு?''

புயல் மாறன் வாயிலிருந்து இரத்த நூலுடன் பற்கள் கொட்டின. ''க்கா! க்கா! அடிக்றத நிறுத்துக்கா! இனி ஒரு அடி தாங்க மாட்டேன்க்கா! உன் கால வேணாலும் பிடிச்சு கெஞ்சிக் கேக்றேன்!''

''இனி என் தங்கச்சி பண்ணைல மூக்கை நீட்ட மாட்டன்னு எழுதிக்குடுரா!''

''இப்ப நான் எழுதிக் குடுக்ற நிலமைலயா

இருக்கேன்? நாளைக்கி எழுதிக் குடுக்றேன்க்கா!''

''எந்திரிச்சு போடா பொறுக்கி கம்னாட்டி கம்னாட்டி!''

காரை ஸ்டார்ட் செய்த புயல்மாறன் தலையை வெளியே எட்டினான். ''என்னையாடி அடிச்சிட்ட? நாளைக்கி உனக்கு சங்குதான்டி. என் தலைவன் உன்னை பிரிச்சு மேஞ்சிடுவான்!''

''அதையும் பார்ப்பம்!'' பாதி மகிழ்ச்சியுடன் மீதி பயத்துடன் கஸ்தூரி-தினகர் காணப்பட்டனர். கைதட்டி ஆரவாரித்தான் சந்துரு. ''தூள்மம்மி தூள்!''

பதில் சொல்லாமல் சிரித்தாள் பவா. காரை கிளப்பினாள். போர்டிகோவில் காரை நிறுத்தி இறங்கின பவாவை அனைவரும் சூழ்ந்து கொண்டனர். ''என்னாச்சு பவா என்னாச்சு?''

''இனி அவன்க ஆயுளுக்கும் நம்ம எடத்ல வாலாட்ட மாட்டான்க!'' எல்லோரும் பெருஞ்சப்த மாய் சிரித்தனர்.

- பாட்டி சீதாலெட்சுமியின் மடியில் அமர்ந் திருந்தான் சந்துரு.

''இன்னைக்கி உங்கம்மாகாரி செஞ்சிட்டு வந்தத பாத்தியா சந்துரு?''

''பாத்தேன் பாட்டி!''

''உங்கம்மாக்காரி பவதாரிணி நடந்துக்கிற முறை கொஞ்சமும் சரியில்லை. தங்களோட அப்பட்டமான சுயநலத்துக்ககாக உங்கம்மாவோட ரௌடித்தனத்தை வீட்ல இருகிற எல்லோரும் ஊக்குவிக்றாங்க''.

''எங்கம்மாவைத் திட்டாதே!''

''பவா உங்கம்மா இல்ல, ஸ்வாதிதான் உங்க அம்மா. கேவலம் பணத்துக்காகவும் பாதுகாப்புக் காகவும் உங்கம்மா ஸ்வாதி உன்னை பவாவுக்கு நல்லவிலைக்கு வித்துட்டா. இத உன் மனசிலய வச்சுக்க. பவாகிட்ட கேட்ராத. கேட்டா இந்த வீட்ல ஒரு பூகம்பம் வெடிக்கும்!''

**சந்துருவின் பிஞ்சு இதயத்தில் விஷவிதை விதைக்கப்பட்டது!**



## 16

அடுத்தடுத்த நாட்களில் பலத்த ஆராய்ச்சியில் ஈடுபட்டான் சந்துரு. பவாவின் சாயலையும் ஸ்வாதியின் சாயலையும் தன் மனக்கண் முன் நிறுத்தி தனது முகத்தோடு யார் அதிகம் ஒத்து வருகிறார்கள் என பார்த்தான்.

பவா-ஸ்வாதி இருவர் சாயலும் சந்துரு முகத்தில் கூடாரமிட்டிருந்தன. ஸ்வாதி தன்னை யாருக்கும் தெரியாமல் இரகசியமாக 'மகனே' என பார்த்திருக்கிறளா - என மூளையை போட்டு கசக்கிக் கொண்டான் சந்துரு. 'நான் பெத்த மகனே' என்று பார்த்த மாதிரியும் இருந்தது. 'என் மதிப்புக்குரிய அக்கா மகனே' என் பார்த்தமாதிரியும் இருந்தது. பெத்தமகன் இல்லை தத்து மகன்தானே என்று பவா தன்னை ஒரு மாற்று அன்பு குறைத்து நடத்தியிருக்கிறாளா - என யோசித்தான்.. 'இல்லையே... நூறு வருடம் கர்ப்பம் சுமந்து பெத்த மகனைப் போலல்லவா என்னை அம்மா பாவிக்கிறாள்!

பாட்டி சொன்னது உண்மையா பொய்யா? - அம்மாவின் மீது பாட்டிக்கு என்ன கோபம்? - பாட்டிக்கு எரிச்சல் வரும் அளவிற்கு அம்மாவின் நடவடிக்கை இருந்தது போல் தெரியவில்லையே!'

ஒரு மாசத்திற்கு பின் ஒருநாள்....

ஸ்டோர் ரூமுக்குள் போகும் ஸ்வாதியைத் தொடர்ந்தான் சந்துரு. கதவை உட்புறமாக தாளிட்டான்.

''என்னடா சந்துரு கதவ பூட்ற... என்ன விளையாட்டு இது?''

''எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும் சித்தி!''

''என்ன உண்மைடா?''

''கேட்டா கோவிச்சுக்கக்கூடாது. நீதானே என்னை பெத்தம்மா? பவாம்மா என்னை தத்தெடுத்த

அம்மாதானா?'' திகில் கூடியது. 'இதென்ன புதுக்குண்டு? அமைதியாக நகரும் கூட்டுக் குடும்பத்தில் கண்ணிவெடி புதைத்தது யார்? ஒன்பது வயது சிறுவனுக்கு தானாக எப்படி இவ்வாறு கேட்க வரும்? யாரோ சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இதனை மறுப்பதே நல்லது'.

ஆரவாரமாய் சிரித்தாள். ''பவாக்கா-ஸ்வாதி-கஸ்தூரி மூணு பேருமே உங்க மூணு பேருக்கும் அம்மாதான். உங்க மூணு பேரையும் நாங்க என்னைக்காவது பிரிச்சு பாத்திருக்கோமா? பவாக்கா தான் உன்னை பத்து மாதம் சுமந்து பெத்தா. நானும் கஸ்தூரியும் உன் சித்திமார்கள். இந்த உண்மைய எக்காலத்திலயும் சந்தேகப்படாதே சந்துரு!''

''நீ என் கண்ணைப் பாத்து பேசமாட்டேங்குற. பணத்துக்காகவும் பாதுகாப்புக்காகவும் நீ என்னை பவாம்மாகிட்ட வித்துட்ட. இது உண்மையா இல்லையா?''

''அப்பட்டமான பொய். யாரோ சொன்ன அக்மார்க் பொய்யை நம்பி நீ கன்னாபின்னான்னு கேள்வி கேக்கலாமா?''

''மழுப்புற. நான் உன்னை நம்பமாட்டேன்!''

அவ்வளவுதான்.... சந்துருவை இழுத்துக் கொண்டு ஸ்டோர் ரூமை விட்டு வெளியே ஓடி வந்தாள் ஸ்வாதி. ''பவாக்கா! கஸ்தூரி! எல்லோரும் இங்க ஓடி வாங்க!''

அடுத்த பத்தே நிமிடத்தில் பவா-அரவிந்த், ஸ்வாதி-முரளி, கஸ்தூரி-தினகர் ஜோடிகள் குழுமினர். சந்துரு, விக்னேஷ், மனோபாலா கைகட்டி அவரவரின் பெற்றோரின் முன் நின்றனர். கடைசியாக வேண்டா வெறுப்பாக சீதாலெட்சுமியும் வந்து சேர்ந்தாள்.

''இப்ப சொல்லு ஸ்வாதி?''

''சந்துரு என் மகனாம். காசுக்காகவும் பணத்துக்காகவும் அவனை நான் உன்கிட்ட வித்துட்டேனாம். சந்துரு ஒளிஞ்சு ஒளிஞ்சு வந்து ஸ்டோர் ரூம்ல என்னைக் கேக்கிறான்!''



இரத்தம் கொதித்துப் போனாள் பவா. ''எந்த பாதகத்தி இப்டி ஒரு அபாண்டமான பொய்ய பச்சை மண் காதுல ஓதினா?''

எல்லோரின் முகங்களும் இருண்டு கறுத்தன. இருந்தாலும் சந்துரு அறிந்துகொள்ள முடியாதபடிக்கு திறமையாக நடித்தனர். ''எந்த கோயில்ல வேணாலும் வந்து சத்தியம் பண்றோம்ப்பா.... நீ பவாக்கா பெத்த அன்புமகன் - ஆசைமகன் - தங்கமகன்!''

அரவிந்த், சந்துருவின் தலைகேசத்தை கோதிக் கொடுத்தான். மகனின் உதட்டைக் குவித்து கன்னத்தில் முத்தமிட்டான். ''சந்துரு! இப்டி ஒரு கேள்வியை யார் சொல்லிக் குடுத்தாலும் நீ கேக்கலாமா? இத்னி வருஷத்ல என்னைக்காவது உன் மனம் கோணுற மாதிரி நடந்திருக்கோமா? நீ சாப்ட்ட பிறகுதான் நானும் அம்மாவும் சாப்டுறோம். எங்களை மீறி எங்க பாசத்தில ஏதாவது குறையிருந்தா சொல்லு- எங்களை திருத்திக்கறோம். எங்களை நாங்களே தண்டிச்சிக்கிறோம். நீ விரும்பின அளவுக்கு பாசத்தை கொட்ட முயற்சிக்கிறோம்!''

''என்னை மன்னிச்சிருங்கப்பா. தெரியாம கேட்டுட்டேன்!''

''என்கிட்ட மன்னிப்பு கேக்காதே. மனசு உடைஞ்சு அழும் அம்மாவ தேத்து!''

''போடா.... என்கிட்ட பேசாத....''

''ப்ளீஸ்ம்மா... என்னை மன்னிச்சிரும்மா!''

''முடியாது போடா!''

''நான் தவறா கேட்டதுக்கு என் வாய்ல குடு வேணா போடும்மா. என்கிட்ட பேசாம இருக்காதம்மா!''

அவ்வளவுதான்..... பாய்ந்து அவனை கட்டிக் கொண்டாள். ''மகனே! மகனே! மகனே! மகனே!'' ஆயிரம் தடவை மிழற்றினாள். எல்லோரின் கண்களும் கலங்கின. சீதாலெட்சுமியின் கண்கள் மட்டும் கலங்கவில்லை. 'நீயும் நடிச்சு மத்தவங்

களையும் சந்துரு முன்னாடி நடிக்கவைக்கறியா என் மூத்த ரௌடிமகளே!'' - என்கிற அர்த்தத்தில் வெறித்தாள். அந்த பார்வையை நொடியில் மோப்பம் பிடித்துவிட்டாள் பவா. அழுத கண்களை புறங்கையால் இழுவிக் கொண்டு அம்மாவின் மீது பாய்ந்தாள். ''நீதான நீதான என் மகன் கிட்ட பொய் சொன்னது?''

''என்னடி உளர்ற பவா? பனைமரத்ல தேள் கொட்னா தென்னமரத்ல நெறி கட்ன மாதிரி இருக்கு உன் பேச்சு!''

''வார்த்தைகள் தடுமாறுது. கொஞ்சநாளாகவே நீ என்னை பாக்ற பார்வையே சரியில்ல. அருவையா பாக்ற. என்னுடைய செய்கைகளை பத்தி மோசமா கமெண்ட் அடிக்ற. உனக்கு என் மேல பொறாமை. நாம பெத்து வளர்த்த மக ஆளு அதிகாரத்தோட பூத்துக்குலுங்க - நாம ஒளியா மூலைல உக்காந்திருக்கோமேன்னு இன்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ் உனக்கு.''

''நான் சொல்லலடியம்மா!''

''சரி, உன் வாயால சொல்லு... சந்துரு நான் பெத்த மகனா? நான் தத்தெடுத்த மகனா?''

''அதிலென்ன சந்தேகம்? சந்துரு நீ பெத்த மகன்தான்.''

'அப்றம் ஏன் பாட்டி என்கிட்ட அன்னைக்கி பொய் சொன்ன?' - என்கிற கேள்வியை பார்வையில் தொங்கவிட்டான் சந்துரு.

''நீ சந்துருகிட்ட எதுவும் சொல்லல! நாங்க நம்பலாம் - அப்டிதான?''

''சொல்லல! நான் எதுவும் சொல்லல. நீங்க என்னை நம்பலாம்!''

''சத்தியமா சொல்லு...... நீ என் மகனுக்கு எதுவும் சொல்லிக் குடுக்கல?''

''சத்தியம் சத்தியம். நான் என் பேரனுக்கு எதுவும் சொல்லிக் குடுக்கல!''

'' எந்திரி! எந்திரி!'' அம்மாவின் கையை பிடித்து



இழுத்தாள். ''என் கூட வா! எங்க கூட எல்லோரும் வாங்க!''

''எதுக்குடி? எங்கடி?'' மிரண்டாள் சீதாலெட்சுமி

''உன்னை என்ன கொலை பண்ணவா கூப்டுறேன்? பூஜையறைக்கு வா!''

தில்லை காளிம்மன் ஓங்காரமாய் சிங்கத்தின் மீது வீற்றிருந்தாள்.

சந்துருவை தனக்கும் தனது அம்மாவுக்கும் இடையே நிறுத்தினாள் பவா. ''என் மகன் மனசில இருக்ற கொஞ்சநஞ்ச சந்தேகமும் தலைதெறிச்சு ஓட சத்தியம் பண்ணும்மா - சந்துரு நான் பெத்த மகன்தான்னு - சந்துருவுக்கு யாரோ சொன்னது அப்பட்டமான பொய்ன்னு....''

மகளை பாவமாய் பார்த்தாள் சீதாலெட்சுமி. 'பொய் சத்தியம் பண்ணச் சொல்றியேடி?'

'நீ போட்ட முடிச்சை நீதானே அவிழ்க்கணும்?'

'இன்னைக்கி என் வாயை மூடிட்ட. நாளைக்கு உண்மை வேற யார் வாய்லயிருந்தாவது வரத்தானே போகுது?'

'அத அன்னைக்கி சமாளிக்கத் தெரியும். குடும்ப சந்தோஷத்துக்காகவும் மூத்த மக மகிழ்ச்சிக்காகவும் பொய் சத்தியம் பண்றது தப்பேயில்ல!'

அழுதாள் சீதாலெட்சுமி. 'கட்டாயம் பொய் சத்தியம் பண்ணணுமா?'

'ஆமாம்!'

தொண்டையை ஈரப்படுத்திக் கொண்டாள் சீதாலெட்சுமி. ''உக்கிரக்காளி மேல சத்தியமா....''

''நிறுத்து... எங்கப்பா மேல - உன் புருஷன் மேல சத்தியமா சொல்லு!''

''உக்கிரக்காளி மேல சத்தியமா இறந்து போன என் கணவரின் மேல சத்தியமா சந்துரு பவதாரிணி பெத்த மகன்!''

கற்பூரத்தட்டை அடித்து எரியும் கற்பூரத்தை வாய்க்குள் போட்டுக்கொண்டாள் சீதாலெட்சுமி. தட்டில் இருந்த விபூதியை கொத்தாய் அள்ளி நெற்றியில் பூசிக் கொண்டாள். விபூதியின் மீது

குங்குமம் அப்பினாள். "சத்தியம் போதுமா? வேற எங்காவது வந்து வேற யார் மேலயாவது இன்னும் சத்தியம் பண்ணனுமா?" ஆங்காரமாய் கேட்டு விட்டு தலைகேசத்தை அவிழ்த்து விட்டு தலை விரி கோலமாய் தோட்டத்துக்கு நடந்தாள்.

விடியற்காலையில் கொல்லைப்புறக் கதவைத் திறக்க வந்த ஸ்வாதி வீறிட்டாள். பிரேதமாய் சீதாலெட்சுமி அமர்ந்திருந்தாள். அவளின் இரு காதுகளிலும் நாசிகளிலும் வாயிலும் இரத்தம் வழிந்து கறுப்பாய் பிசுபிசுப்பாய் உறைந்திருந்தது. மடியில் கணவனின் புகைப்படம் மற்றும் குடும்ப அங்கத்தினர் புகைப்படம்.

பவாவின் முகத்தை மட்டும் துவாரமிட்டு வட்டமாய் அகற்றியிருந்தாள் சீதாலெட்சுமி.

## 17

பத்தாண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த பத்து வருடங்களில் ஸ்வாதி-முரளி, கஸ்தூரி-தினகரன் ஜோடிக்கு மேலும் பற்பல உதவிகள் செய்திருந்தாள் பவா. ஸ்வாதிக்கும் கஸ்தூரிக்கும் அலாவுதீனின் அற்புதவிளக்கு பூதமாய் திகழ்ந்தாள் பவா. அபயக்குரல் எழுப்பிய போதெல்லாம் உதவினாள். அபயக்குரல் எழுப்பாத போதும் உதவினாள். பவா ஒரு காவல் பூதம். பவா ஒரு காக்கும் தெய்வம். பவா ஒரு அமுதசுரபி. பவா ஒரு சர்வரோக நிவாரணி.

விக்னேஷ், சந்துரு, மனோபாலா மூவரும் வாலிபர்களாய் வளர்ந்திருந்தனர். விக்னேஷ் சூர்யா சாயல், சந்துரு சிம்பு சாயல், மனோபாலா தனுஷ் சாயல். விக்னேஷ் மருத்துவக் கல்லூரி மாணவன். சந்துரு பொறியியல் தகவல் தொழில் நுட்ப மாணவன். மனோபாலா இளங்கலை நூலக அறிவியல் மாணவன். மூவருமே மணிமேகலைப் பல்கலைக்கழகத்தில்தான் படித்தனர்.



டைனிங் டேபிள். பவதாரணி எடை கூடி இடுப்பு தடித்திருந்தாள். இரு காதோரம் நரை. வீக்கமான வட்ட முகம். மூன்று தாய்மார்களும் வெளிவாசலுக்கு வந்து மூன்று மகன்களை வழி யனுப்பினர். "பசங்க என்னமா வளர்ந்திட்டாங்க. நாம அவன்களை இன்னும் குழந்தைகளாகவே பாவிச்சிட்டிருக்கோம். அவங்க பெரிய மனுஷ தோரணைக்கு தாவிட்டாங்க, நம்ம மூணு பேருக்கும் எதுவும் தெரியாதுன்றான்கள்!"

"நாம மக்குகளாக இருக்கத் தயார் - அவங்க நிஜமான புத்திசாலிகளாயிருந்தா!"

"பவாக்கா!"

"என்ன?"

"அம்மா இறந்து பத்து வருஷமாகுது. இன்னும் எங்க ரெண்டு பேர் கனவிலயும் அம்மா வந்துக் கிட்டு தான் இருக்கு!"

"வந்து என்ன சொல்லுது?"

"பவா என்னை பொய் சத்தியம் பண்ண வச்சிட்டாளேன்னு முறையிடுது."

"உங்க கனவுல வர்ற அம்மா என் கனவுகள்ல வர்றதில்லை. பயம்போல!"

"முறையிடுறது மட்டுமில்ல. சவால் வேற விடுது!"

"என்னன்னு?"

"பெத்த தாய்ன்னும் பாக்காம அன்னைக்கி பவா என்னை மோசமா நடத்திட்டா. நான் பட்ட வேதனைக்கு பத்து மடங்கா பவா படுவா. அதுக்கான வேளை சீக்கிரமா நெருங்கிட்டிருக்குன்னு நான் சொன்னேன்னு அவகிட்ட சொல்லுங்க-ன்னும் சொல்லுச்சு!"

"இதெல்லாம் அம்மா சொல்லுதா, நீங்களா இட்டுக்கட்டி சொல்றீங்களா?"

"நாங்க பொய் சொல்லுவோமாக்கா?"

"தபாருங்கடி. அம்மா இறந்தது பத்தி எனக்கு எந்த குற்றஉணர்ச்சியும் இல்லை. முழுமையான

வாழ்க்கையை அனுபவிச்சிட்டுதான் செத்திருக்கு. குழந்தை இல்லாத தாயின் வேதனை அம்மாவுக்குத் தெரியாது. வரிசையா மூணு பெண் குழந்தைகளை பெத்த அம்மாவுக்கு குழந்தை பெறுகிற விஷயம் சர்வசாதாரணம். ஒரு ஒன்பது வயது பய்யன்கிட்ட மறைக்க வேண்டிய ஒரு உண்மையைக்கூறியது மன்னிக்க முடியாத குற்றம். அதற்குரிய தண்டனையைத்தான் தில்லைகாளி அம்மாவுக்கு கொடுத்தா. இனி அம்மா பத்தி என்கிட்ட தேவையில்லாம பேசாதிங்க!''

இரு தங்கைகளும் அவரவர் அறைக்கு நடந்து போயினர்.

## 18

மயில் கொன்றைப் பூ மரத்தடி. சகாக்களின் பைக்குகளுடன் தங்களது பைக்குகளையும் விக்னேஷும் சந்துருவும் நிறுத்தியிருந்தனர். விக்னேஷ் புகைத்த சிகரெட்டை பிடுங்கி சந்துரு புகைத்தான். ''என்ன டென்ஷனாயிருக்க பிரதர்?'' வினவினான் விக்னேஷ்.

''நா ஏன் டென்ஷனாயிருக்கேன்னு உனக்கு தெரியாதா பிரதர்?''

''என் ஆளு கயல்விழிக்காக நான் காத்திக் கிட்டுருக்கேன்!''

''நான் என் ஆளு பொற்கொடிக்காக!''

''சந்துரு! நீயும் நானும் அண்ணன் தம்பி முறை. கயல்விழியும் பொற்கொடியும் உடன் பிறந்த சகோதரிகள். கயல் மூத்தவ. பொற்கொடி இளையவ. மூத்தவ கயல்விழியை வயதில் மூத்த நான் காதலிக்கிறேன். இளையவள் பொற்கொடியை நீ காதலிக்ற. காதல் எவ்வளவு பொருத்தமா வந்திருக்கு - பார் நமக்கு!''

''நம்ம ரெண்டு பேருக்கும் காதல் வந்திருச்சு.



மூணாவது பிரதர் மனோபாலாவுக்கு ஏன் வரல?''

''அவன் கிடக்கிறான் சாமியார் பய்யன்!''

கயல்விழியும் பொற்கொடியும் தோள் மேல் கைகோர்த்துக் கொண்டு ஜோடியாக நடந்து வந்தனர்.

''ஹாய் கயல்விழி'' ஓடினான் விக்னேஷ்.

''ஹாய் பொற்கொடி'' ஓடினான் சந்துரு.

விக்னேஷும் கயல்விழியும் தனியே ஒதுங்கினர். ''உன் தம்பியோட சேர்ந்து வந்து என்னை பார்க்காதே! காதலிக்கக் கூடவா கூட்டா போவீங்க?''

''சந்துரு உன்னைத் தப்பா பார்க்கிறானா?''

''சேச்சே... அவன் ரொம்ப நல்லவன்டா... இப்பவே அண்ணி மரியாதை குடுக்கிறான்..... அதான் எனக்கு சங்கோஜமா இருக்கு!''

''எங்கம்மாக்கள் கிட்டயிருக்ற ஒத்துமை எங்ககிட்டயும் இருக்கிறது நல்ல விஷயம் தானே? பவாம்மாவுக்கு எங்கம்மாவும் மனோபாலாவின் அம்மாவும் ரொம்ப மரியாதை குடுப்பாங்க. 'வானத்தைப் போல' விஜயகாந்த் மாதிரி பவாம்மா. சந்துருவை விட நான் ரெண்டு வயசு மூத்தவன். ஆனாலும் நானும் பாலாவும் சந்துருவுக்கு ஸ்பெஷல் மரியாதை குடுப்போம். எங்க மூணு பேருக்கும் வரும் மனைவிமாரும் ஒத்துமையா இருக்கணும்னு எதிர்ப்பார்க்கிறோம். உங்கப்பா மூணாவதா ஒரு மகளை ட்ரை பண்ணியிருந்தா பாலாவுக்கு வசதியா போயிருக்கும்!'' சிரித்தான் விக்னேஷ்.

''உங்க குடும்பத்து விஷயத்தையே பேசி அறுக்காதே விக்னேஷ்!''

''ஆகட்டும் மேடம்!''

''இன்னைக்கி விஜய்யோட புதுப்படம் மாரியப்பால ரிலீஸாகுது. நாங்க கேர்ள்ஸ்ஸெல்லாம் மாஸ்கட் பண்ணிட்டு மேட்னி போறம். வரியா?''

''சந்துருவை ஒரு வார்த்தை!...'' இழுத்தான் விக்னேஷ்!

''உதைப்பேன்டா படவா. இன்னைக்கி மட்டும் நீ வராம இரு. என்ன பண்றேன்னு பொறுத்திருந்து பாரு!''

''எக்ஸ்க்யூஸ் மி'' இருவரின் உரையாடலிலும் சந்துரு குறுக்கிட்டான். ''டேய் விக்னேஷ்! அண்ணி! இன்னைக்கி மாஸ்கட். மாரியப்பாவுக்கு மேட்னி ஷோ வந்திருங்க. என் கூட என் செல்ல நாய்குட்டி பொற்கொடி வருது!'' சொல்லி முடித்தவன் காணாமல் போனான்.

**மா**ரியப்பா திரையரங்கம். ஜோடிஜோடியாய் மாணவர்களும் மாணவியரும் அமர்ந்திருந்தனர். விக்னேஷ்-கயல்விழி, சந்துரு-பொற்கொடி. விக்னேஷ் கயல்விழியின் கைகளை எடுத்து தனது மடியில் வைத்துக்கொண்டான். ''ஐ லவ் யூ கயல்!''

''பைத்தியக்காரனாயிருக்கியே! ஐ லவ் யூன்னு டெய்லியா சொல்றது?''

''எனக்கு தோணுறப்பல்லாம் சொல்வேன்!''

''சொல்லிட்டுப்போ!''

''நாம ஒழுங்கா படிக்கணும் கயல். இதுமாதிரியான பொழுதுபோக்குகளை நாம கொஞ்சம் கொஞ்சமா குறைச்சிக்கணும்.''

''சரிங்க ஸ்ரீலஸ்ரீ விக்னேஷ்வர ஸ்சுவாமிஜி!''

''நாம படிச்சு முடிச்ச வேலைக்கு போன மறுமாசம் கல்யாணம் பண்ணிக்கணும். தாமதம் கூடாது!''

''இம்!''

''நம்ம கல்யாணத்தோட சேத்து சந்துரு-பொற்கொடி திருமணமும் நடக்கணும். இரு ஜோடிகளும் ஒரே நேரத்ல குழந்தைகள் பெத்தக்கணும்!''

''நீ படம் பாக்க வந்தியா. உறிஸ்டீரிகலா புலம்ப வந்தியா?''

''அதென்னமோ தெரியல கயல்.... கொஞ்ச



நாளா எனக்கு கெட்ட கெட்ட கனவா வருது. நாம நடக்ற பாதைல வௌவால்களா செத்து கிடக்ற மாதிரி. நம்ம வகுப்பறைகள் இடிஞ்சு விழற மாதிரி. நாம அடிக்கடி சந்திக்கிற குல்மொஉறா மரம் இடிவிழுந்து கருகுகிற மாதிரி....''

நெட்டுயிர்த்தாள் கயல்விழி. ''பயப்படாதே. தலையணைக்கு அடில வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை எள்ளுப்பொட்டணம் வைச்சு படு. யதார்த்தமா இரு. நம்ம காதலை பத்தி அதிகம் கவலைப்படாதே!''

பால்கனியில் ரசிகர்களுக்குள் ஏதோ முட்டல் மோதல். ஒரு கனத்த சமாச்சாரம் மரண ஓலத்துடன் விக்னேஷ்-கயல்விழிக்கு இடையே தலைகீழாய் விழுந்தது. அது ஒரு ரசிகனின் உடல். தலைகீழாக பாய்ந்த அவனின் தலை சிமெண்ட் தளத்தில் மோதி நொறுங்கியது. தட்டார்! விக்னேஷ்- கயல்விழி முகத்தில் சடச்சட இரத்தம் பீய்ச்சி யடித்தது. அரங்கம் அல்லோலகல்லோலப்பட்டது. தலை நொறுங்கிய ரசிகனை தரையில் கிடத்தி சோதித்தனர். அவன் ஏற்கனவே இறந்து போயிருந்தான். விக்னேஷ் திகிலாய் முகத்தில் அப்பியிருந்த இரத்தத்தை பரபரவென தேய்த்து விட்டுக் கொண்டான்!

## 19

**ப**வதாரிணி பவர் கிளாஸ் அணிந்துகொண்டு பிரெட் லூத்தன்ஸ் எழுதிய 'ஆர்கனைஸேசனல் பிஹேவியர்' புத்தகத்திலிருந்து குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்தாள். சப்தம் எழாமல் பவாவுக்கு பின் நடந்து வந்து அம்மாவின் கண்ணாடிக் கண்களை பொத்தினான் சந்துரு. பொத்திய கைகளை விலக்கி தன் முன்னுக்கு இழுத்து வந்தாள் பவா.

''ஹாய் மம்மி உன்கிட்ட கொஞ்சம் பேசணும்.

புத்தகத்தை தூக்கி அப்டி போடு. ரிலாக்ஸ்டா சாஞ்சு உக்காரு!''

''இம், நீ சொன்ன மாதிரி உக்காந்துட்டேன்!''

''நானும் விக்னேஷும் அர்த்தமில்லாம ஒரு விஷயத்தை தேடிக்கிட்ருந்தம். கிடைக்கல.''

''என்ன தேடுனீங்க?''

''பவாம்மா மாதிரி ரெண்டு பொண்ணு தேடுனம். ஒண்ணு எனக்கு. இன்னொண்ணு அவனுக்கு. தேடினோம் தேடினோம் தேடிக்கிட்டேயிருந்தம். கிடைக்கல. களைச்சு போய் உக்காந்துட்டோம். கடவுளோட குரல் அசரீரியா கேட்டுச்சு. 'அட மடப்பசங்களா... பவாம்மா மாதிரி பெண்களை நான் நூறு வருஷத்துக்கு ஒரு தடவைதான் படைப்பேன்... தவிர பவாம்மாவின் அன்பு உங்களுக்கு பெருமழையா கிடைச்சக்கிட்ருக்கப்ப இன்னொரு பவாம்மா தேவையில்லையேடா. நான் உங்களுக்கு பொருத்தமான இரு பெண்களை அக்கா தங்கச்சியா படைச்சு உங்க யுனிவர்சிட்டிலேயே நடமாட விட்டிருக்கேன். மூத்தவ கயல்விழி- விக்னேஷுக்கு. இளையவ பொற்கொடி- சந்துருவுக்கு-ன்னு சொல்லுச்சு!''

''பரவாயில்லையே... இருபது இருபத்திரெண்டு வயசில எல்லாம் கடவுள்கிட்ட நேரடியா பேச ஆரம்பிச்சிட்டிங்களாடா? அதுசரி, பாலாவுக்கு கடவுள் ஏன்டா பொண்ணை இறக்கல?''

''பாலா பய்யன் அனுமார் சாயலில் இருக்கும் அனுமார் பக்தர். அவனுக்கு மனைவி தேவையில்லைன்னு கடவுள் நினைச்சிருப்பார்!''

''ஏன்டா! இந்த வயசில காதல் உங்களுக்கு தேவையா?''

''நாற்பது வயசுல பண்ணினா பொண்டாட்டி பிள்ளைகள் கோபப்படுவாங்களே மம்மி''

''காதல் கீதல்னு வந்தீங்க... உதைப்பேன்டா படவா... எந்திரிச்சு போடா... அப்டின்னு நான் கொதிச்சா?''

''நீ கொதிக்கமாட்ட. நீ நல்லவ - நீ வல்லவ - நீ



நாலும் தெரிஞ்சவ...'' போழகன் விவேக் டயலாக் மாடுலேஷனில் கொஞ்சினான் சந்துரு. ''சித்திமாரின் காதல் கல்யாணங்களை நடத்தி வச்ச பெருந்தகை!''

''குறும்பா குறும்பா! கயல்விழி-பொற்கொடியை நான் பார்க்கணுமே...''

''இப்பவே ஓடிப்போய் கூட்டிட்டு வரவா?''

''டேய்... இப்ப மணி ராத்திரி பதினொண்ணுடா. வர்ற ஞாயிற்றுக்கிழமை காலை அவங்களை கூட்டிட்டு வா. பட், ஒரு கண்டிஷன்!''

''என்ன?''

''ரெண்டு பேரும் பட்டுப்புடவை கட்டிக்கிட்டு ஹோம்லியா வரணும். அவங்க பேரன்ட்ஸ் கிட்ட பெர்மிஷன் வாங்கிட்டு வரணும். அன்னைக்கி முழுவதும் அவங்களுக்கு சாப்பாடு நம்ம வீட்ல தான்!''

''இம்இம்!''

''நீ வந்து இவ்வளவு நேரம் தைரியமா பேசிக்கிட்ருக்க. மூத்தவன் விக்னேஷ் எங்கடா?''

''அதோ கதவுக்கு பின்னாடி ஒளிஞ்சிக்கிட்ருக்கான்!''

''ஏய் விக்னேஷ்! வாடா இங்க!''

''ஹாய் பவாம்மா!''

அவனை இழுத்து இடது தோளிலும் சந்துருவை இழுத்து வலது தோளிலும் சாய்த்துக் கொண்டாள் பவா. ''நீங்க ரெண்டு பேரும் காதலிக்கிறீங்கன்ற விஷயத்தை இன்னும் என்னால நம்ப முடியால. என் மனக்கண்களில் நிற்கும் உங்களிருவருக்கும் வயது அஞ்சுதான். லாலிபாப் சிறுவர்களே காதலிங்க... வேணாம்னு சொல்லல. ஆனா படிப்பிலயும் கவனம் செலுத்துங்க. ஞாயித்துகிழமை வர்ற பொண்ணுக நம்ம குடும்பத்துக்கும் உங்களுக்கும் பொருத்தமில்லாதவங்கன்னு மூணு அம்மாமாருக்கும் தோணிச்சுன்னா நீங்க ரெண்டு பேரும் உங்க காதலை மறுபரிசீலனை பண்ணனும்.... புரியுதா?''

''உங்களுக்கு பிடிக்கலேன்னா அவங்க எங்க

ருக்கும் வேணாம் - போதுமா?''

''ஓகே... எனக்கு நிறைய வேலை பாக்கி இருக்கு. உங்கங்க அறைக்கு போங்க. குட் நைட்!''

''குட் நைட்!'' இருவரும் கிளம்பினார்.

ஞாயிற்றுக்கிழமை காலை விக்னேஷும் சந்துருவும் குட்டி போட்ட பூனைகள் போல் உலாத்திக்கொண்டிருந்தனர். பகவத்கீதை - தமிழ் பதிப்பு வாசித்துக் கொண்டிருந்தான் மனோபாலா. போர்டிகோவில் ஒரு டயோட்டோ கரோலா வந்து நின்றது. அதிலிருந்து இரு தேவதைகளாய் பட்டுப் புடவை அணிந்த கயலும், கொடியும் இறங்கினர். வரவேற்பறை சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்தாள் பவா. காலை சமையலில் ஈடுபட்டிருந்தாள் கஸ்தூரி. மின்னல் வேகத்தில் ஓடி இரு யுவதிகளையும் வரவேற்றாள் ஸ்வாதி. பவாவுக்கு எதிர் சோபாவில் வந்தமர்ந்தனர் மூன்று அப்பாக்களும். கயல், கொடியை பார்த்து விக்னேஷும் சந்துருவும் அசடுவழிந்தனர். இருபெண்களையும் கூட்டி வந்து பவாவின் முன் நிறுத்தினாள் ஸ்வாதி. ''எங்க வீடு பாகிஸ்தான்னா, பவாம்மா பர்வேஸ் முஸ்ராப் மாதிரி. இங்க அவங்க வச்சதுதான் சட்டம். அவங்களுக்கு உங்களைப் பிடிக்கணும்னு ஊர்ல இருக்ற எல்லா கடவுளையும் வேண்டிக்கங்க!''

பவா எழுந்தாள். இருவரின் கண்ணியமான அழகைக் கண்டு ஸ்தம்பித்தாள். இரு பெண்களும் சொல்லி வைத்தாற் போல பவாவின் கால்களில் விழுந்தெழுந்தனர். அவரவர் பெயரை அவரவர் வாயால் உச்சரிக்கச் சொன்னாள் பவா. அவர்களை நடக்கச் சொல்லி பார்த்தாள். அவர்களின் முன்னழகும் பின்னழகும் இயற்கையானதா ஆராய்ந்தாள். உரையாடலுக்கு இடையே அவர்களின் புத்திசாலித்தனத்தையும் சமயோசிதத்தையும் கணித்தாள். விக்னேஷ் - சந்துருவிடம் இவர்கள் எப்படி காதலை வெளிப்படுத்தினார்கள் அல்லது இவர்



களிடம் விக்னேஷ் - சந்துரு எப்படி காதலை வெளிப்படுத்தினார்கள் என்பதை நாசுக்காய் கேட்டறிந்து கொண்டாள் பவா. காலை டிபனை இருபெண்களுக்கும் ஊட்டிவிட்டாள் பவா. தனது அறைக்கு கூட்டிச் சென்று தனது பட்டுப்புடவைகளை எல்லாம் மாற்றி மாற்றி அவர்களுக்கு அணிவித்து அழகு பார்த்தாள். டிஜிட்டல் கேமிராவை மனோபாலாவிடம் கொடுத்து பெண்கள் இருவரும் பட்டுப்புடவையில் நின்று குரூப் போட்டோ எடுத்துக் கொண்டனர். இருவரையும் தோட்டத்துக்கு அழைத்துச் சென்று தன் வளர்ப்பு பூச்செடிகளின் அருமை பெருமைகளை விவரித்தாள் பவா.

''கயல்-கொடி! உங்க பெற்றோர் என்ன பண்றாங்க?''

''எங்கப்பா ஒரு செல்போன் டீலர், எலாஸ்ட் காம்ப்ளக்ஸ்ல எங்க ஷாப் இருக்கு. அம்மா ஹவுஸ் ஒய்ப்!''

''அவங்களுக்கு உங்க காதல் தெரியுமா?''

''சொல்லிருக்கோம். உங்களை அப்பாவுக்கு நல்லா தெரியுமாம். உங்க வீட்டு பையன்கதான் விக்னேஷ், சந்துருன்னு தெரிஞ்சவுடனே அப்பா ஓகே சொல்லிட்டார். ஆனா படிப்பை முடிச்சு வேலைக்கு போன பிறகுதான் கல்யாணமாம்.'' கயல்.

''உங்க குடும்பத்தை ஒரு சண்டே விருந்துக்கு இன்வைட் பண்ணச் சொன்னார் ஆன்ட்டி!''

''வந்திட்டாப் போச்சு!''

ஆடம்பரமான மதிய விருந்தை சமைத்து பரிமாறினாள் கஸ்தூரி. ஒரு வாய் எடுத்து கயல்விழி தைரியமாய் பவாவுக்கு ஊட்டினாள். அரவிந்த் தோள்களை குலுக்கிக் கொண்டான். ''இந்த மாதிரி சான்ஸை பவா எனக்கு குடுக்றதில்லை!''

இரவு உணவை ஏழு மணிக்கே முடித்தனர். ''டேய் பசங்களா! இவங்க கார் பின்னாடியே போய் வீடு வரைக்கும் விட்டுட்டு வாங்க!'' சந்தோஷமாய் ஓடினர். கயல்-கொடியுடன் அவர்

களின் கார் வீடு போய் சேர்ந்தது. தங்களின் காரி லிருந்து விக்னேஷ்-சந்துரு இறங்கி ஓடினர். ''தாங்க் காட்! பவாம்மாவுக்கு உங்களை பிடிச்சு போச்சு! உங்களுக்கும் பவாம்மாவை பிடிச்சுப் போச்சு! எவ்ரி திங் கோஸ் ஸ்மூத்!''. சகோதரர்கள் தார்சாலையில் பாலே நடனமாடினர்.

## 20

**அ**டுத்த ஐந்தாண்டுகளில் கயலும் கொடியும் பவா வீட்டு மருமகள்களாகவே வலம் வந்தனர். விக்னேஷ் எம்.பி.பி.எஸ் படிப்பை முடித்துவிட்டான். சந்துரு பொறியியல் தகவல் தொழில் நுட்பம் படித்து முடித்துவிட்டான். விக்னேஷ் மேற்படிப்பை மணிமேகலைப் பல்கலைக்கழகத்திலேயே தொடர உத்தேசித்தான். சந்துரு எல்.ஜி. கம்ப்யூட்டர்கள் டீலர்ஷிப் எடுத்தான்.

இருதரப்பு பெற்றோரும் கூடினர். ''நான் எம்.டி. படிச்சு முடிச்ச பிறகுதான் கல்யாணம்!''

''நான் முதலாளி ஆய்ட்டேன். நான் கல்யாணத்திற்கு தயார் தயார்!'' என்றான் சந்துரு.

''நம்ம வீட்டுப்பசங்க அஞ்சு வருஷம் காதலிச்சிருக்காங்க. ஆனா எந்த தப்புத்தண்டாவும் பண்ணல. நம்ம குடும்ப கௌரவத்துக்கு பங்கம் வராம பாத்துக்கிட்டாங்க. அவங்க மேல படிக்கட்டும், இல்ல வேலைக்கு போகட்டும், இல்ல வீட்ல ஹாயா இருக்கட்டும். அது பிரச்சனை இல்லை. கூட்டோட கூடா ரெண்டு கல்யாணத்தையும் ஜாம்ஜாம்னு நடத்திப்புடலாம்!'' பவா.

**சி**ன்ன சேலத்திலிருந்து ஜோதிடர் மோகனசுந்தர் வந்தார். நான்கு ஜாதகங்களையும் அலசி ஆராய்ந்தார். ''சந்துருவுக்கு இப்ப திருமணம்



..டக்கலாம். ஆனா விக்னேஷுக்கு திருமணத்தை ..ரெண்டு வருஷம் தள்ளிப்போடலாம்!''

''விக்னேஷ் ஜாதகத்துல எதாவது பிரச்சனையா?'' பதறினார் பெண்களை பெற்றவர்.

''இல்லல்ல..... விக்னேஷ் ஜாதகம் பிரமாதமாத் ..தான் இருக்கு. ரெண்டு வருஷம் கழிச்சு கல்யாணம் ..பண்ணினா கூடுதல நன்மைன்னு சொன்னேன்!''

''நோ நோ. ரெண்டு கல்யாணமும் ஒரே நால்ல ..தான். அப்படி இப்டி பேசாம முகூர்த்த தேதியை குறிச்சுக் குடுங்க மோகன்!'' ஜோதிடர் முகூர்த்த தேதியை குறித்துக் கொடுத்தார்.

**வி**டிந்தால் இரட்டைத் திருமணம். நண்பர்களுக்கு உற்சாகமான பார்ட்டி ஆரம்பித்து வைத்துவிட்டு விக்னேஷ் தனது காருக்கு நடந்தான். தூரத்தில் ஒரு லாரி நின்றிருந்தது. அதில் இருந்த ஓட்டுநர் உலா தொலைபேசி மூலம் புயல்மாறனிடம் பேசினான். ''தலைவரே! சந்துரு அதோ காருக்கு நடந்து போறான்!'' விக்னேஷை சந்துரு என தவறாக நினைத்துக்கொண்டான்.

''லாரியை ஏத்திக்கொன்னுட்டு விபத்துன்னு போலீஸ்ல சரணடை. சீக்கிரம்! என்னை ரோட்ல போட்டு தெருநாயை அடிக்கிற மாதிரி அடிச்சா அந்த பவா. இனி காலம் பூராவும் அவளுக்கு கண்ணீர் விடுறதுதான் வேலை!''

லாரி சீறியது. விக்னேஷ் சுதாரிக்கும் முன் பேய்த்தனமாய் அவன் மீது மும்முறை மோதியது. மெல்லிய உதறலுடன் விக்னேஷின் உயிர் அடங்கியது.

## 21

**வி**க்னேஷின் உடலில் விசேஷ ரசாயனப் பொருள் செலுத்தியிருந்தனர். தலைக் காயத்தை ட்ரஸ்ஸிங் பண்ணியிருந்

தனர். கண்ணாடி கேபினில் நிம்மதியாக தூங்குவது போல் காட்சியளித்தான் விக்னேஷ். மூன்று தாய்மார்களும் தலைவிரி கோலமாய் கேபினின் மீது முட்டி மோதி கதறிக் கொண்டிருந்தனர். கேபினின் கால் பகுதியில் கயல்விழியும், பொற்கொடியும் அமர்ந்திருந்தனர். தலைமாட்டில் சந்துருவும் மனோபாலாவும் நின்றிருந்தனர்.

''விக்னேஷ்! விக்னேஷ்! கல்யாணம் வேணாம்னு இதுக்குத்தான் சொன்னியா?... நாங்க கேக்கலையே.... திருமண வீடு இழவு வீடா மாறிடுச்சே! அய்யய்யோ நான் என்ன பண்ணுவேன்? - எது பண்ணுவேன்? - என் ஈரக்குலை என்னை விட்டுப் போயிருச்சே... என் மகன் போன பிறகு நானிருந்து என்ன பிரயோஜனம்? என்னையும், என் மகனோட சேர்த்து எரிச்சிருங்க. யார் கண்ணோபட்டுப்போச்சு. இனி இந்த வீட்டுக்கு நிம்மதி திரும்பாது. கல்யாணம் பண்ணிக்காமயே ஒரு பொண்ணை விதவையா நிறுத்திட்டு போய்ட்டியே கண்ணா... நாங்க அழறது பத்தாதுன்னு இன்னொரு குடும்பத்தையும் காலத்துக்கும் அழ வச்சிட்டு போய்ட்டியேசெல்லம்... இனி நம்ம வீட்டுக்குள்ள எந்த சாமி படமும் இருக்கக்கூடாது. கடவுளாவது மண்ணாவது! என் மகன் மேல லாரிய ஏத்தினவன் கைமேல புத்து முளைக்க. அவன் குடும்பம் உருப்படாம போக. எப்பவும் விக்னேஷும் சந்துருவும் ஒண்ணாத்தான் திரிவாங்க. நேத்தைக்கி விக்னேஷை விதி தனியா கூப்ட்டுருச்சு போல. அய்யோ! அய்யோ! அய்யோ! அய்யோ!'' நெஞ்சில் ரப்ரப் என்று அறைந்து கொண்டாள் சுவாதி.

இரவு முழுக்க வீட்டுச் சாமான்களை அடித்து நொறுக்கி பேயாட்டம் ஆடிய பவதாரிணிக்கு மயக்க மருந்து செலுத்தியிருந்தனர். அரை மயக்கத்தில் சரிந்து அமர்ந்திருந்தாள். கஸ்தூரி ஓலமிட்டாள். வாசலில் கட்டியிருந்த பந்தலை



பிரித்தாள். வாழைக்குலையை பிய்த்துப் போட்டு மிதித்தாள்.

சீதாலெட்சுமியின் ஆவி உள்ளே மிதந்து வந்தது. 'இறந்துபோனது என் மூத்த பேரன்தான். எனக்கும் வேதனையாத்தான் இருக்கு. ஆனா இந்த மரணம் தான் அகம்பாவம் பிடித்த பவாவுக்கு பல பாடங்களை கத்துத்தரப் போகுது. என் சாபம், பலிச்சுப் போச்சுடி பவா!'

பல்கலைக்கழக ஆசிரியர்கள் - மாணவ மாணவியர் குழுமியிருந்தனர். உறவினர்கள் வந்திருந்தனர். மாரியப்பன் நகர் முடிவில் ரயில்வே லெவல் கிராசிங் அருகில் ஒரு தகர ஷெட் போடப்பட்டிருந்தது. அதில் விக்னேஷை கிடத்தினர். மரக் கட்டைகளும் எருவாட்டிகளும் உடலின் மேல் அடுக்கப்பட்டன. அண்ணனின் சிதைக்கு தீ மூட்டினான் சந்துரு. விக்னேஷின் உடல் தகனம் செய்யப் பட்டது. தலைகேசத்தை சவரம் செய்து மீசையை மழித்திருந்தான் சந்துரு.

துக்கம் விசாரிக்க வந்தோர் புறப்பட்டுப் போயிருந்தனர்; வீடு வெறிச்சோடி கிடந்தது. மெதுவாக பவா தனது கையை ஸ்வாதியின் தோளில் வைத்தாள். ''அழாத ஸ்வாதி, நாம்பளே உடைஞ்சிட்டா எப்படி? ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதல் சொல்லி நம்மை நாமே தேத்திப்பம். இப்படி நடக்கணும்றது விதிப்பயன் போல..''

அக்காளின் கையை உதறினாள் ஸ்வாதி. ''என் மேல கையை வைக்காதே. பாம்பு ஊர்ற மாதிரி இருக்கு!''

''நான் உன் அக்காடி!''

''நீ எங்க அக்காவுமில்ல; நாங்க உன் தங்கச்சியுமில்லை. நீ ஒரு அதிகாரப் பேய். நீ ஒரு ஆணவப் பிசாசு. நீ எங்க குடி கெடுக்க வந்த கோடாலிக் காம்பு!''

''மனம் பேதலிச்சு பேசுற. நீதான பேசுற. பேசு.

எதுவேணாலும் பேசு. என்னை திட்னா உனக்கு ஆறுதல் கிடைக்குதுன்னா தாராளமா திட்டு!''

''நடிக்காதடி! எல்லாம் உன்னாலதான்!''

''என்னம்மா சொல்ற?''

''அன்னைக்கி பெத்த அம்மாவை பொய் சத்தியம் பண்ண வச்சு கொன்னவ நீதானே? உன அக்கிரமத்துக்கு துணை போனது தப்பு. கடவுள் அக்கிரமம் பண்ணினவளை தண்டிக்காம அக்கிரமத்துக்கு துணை போன என்னை தண்டிச்சிட்டான்!''

சந்துரு ஓடிவந்தான். ''ப்ளீஸ் சித்தி... கொஞ்சம் அமைதியா இருங்க... ஒத்துமைக்கு பேர் போன நீங்களே இப்டி கீழ்த்தரமா சண்டை போட்டுக் கிட்டா எப்டி? பாட்டி செத்தத சம்பந்தமில்லாம இங்க கொண்டு வந்து ஏன் பேசறீங்க?''

ஆங்காரமாய் பவாவிடம் திரும்பினாள் ஸ்வாதி. ''உனக்கு பரிஞ்சிட்டு பேசறான் பார் இவன். இவன் கிட்ட எல்லா உண்மையையும் சொல்லிடலாமா? உண்மைகளை தெரிஞ்சிகிட்ட பிறகு உன்னை இவன் எப்டி நடத்தப்போறான் பாரு!''

பவதாரிணி தங்கையின் கால்களுக்குப் பாய்ந் தாள். இரு கால்களிலும் தனது முகத்தை புதைத்தாள். ''என் மேல என்ன தப்பிருந்தாலும் இப்ப பேசாதே. தனியா வச்சு ஆயிரம் கேளு. செருப்பால அடி. மூஞ்சில காரி உமிழு. இரும்புக் கம்பியைச் சூடாக்கி உடம்பு பூராவும் சூடு போடு. தலை கீழா கட்டித் தொங்கவிடு. ஆனா இப்ப பேசாதே!''

''பேசுவேன்டி!''

அரவிந்த் ஓடி வந்து கும்பிட்டான். ''ப்ளீஸ்... எதுவும் பேசாதம்மா!''

''எவன் சொன்னாலும் கேக்க மாட்டேன். என்



புருஷே என் கையை விட்டு போன பிறகும் எதுக்கு பொறுமை காக்கணும்? இன்னைக்கி எல்லா உண்மைகளையும் உரக்க சொல்லியே தீருவேன்!''

''நீ ஏதாவது அட்டி பண்ணின... என்னை நீ உயிரோட பாக்க முடியாது!''

''நிறுத்தி உன் எமோஷனல் பிளாக் மெயிலை. நீ இரு... இல்லாம போ. எனக்கென்னடி? டேய் சந்துரு? இங்க வாடா!''. வந்தான்.

''நீ யாருடா? நீ யாரு மகன்டா?''

''நா... நான் பவாம்மா மகன்!''

''இல்லடா. இல்லவே இல்ல... நீ என் மகன்டா... என் ரெண்டாவது மகன்டா... பெத்த மக னுக்கு ஆசையா தாய்ப்பால் கூட குடுக்க விடாம உன்னை ஆஸ்பத்திரி தொட்டில்லயிருந்து தூக் கிட்டுப் போய்ட்டாடா இந்த தெவ்டியா முண்டை. பால் கட்டிக்கிட்டு எப்டி துடிச்சேன் தெரியுமா நான்? சிஸேரியன் பண்ணி வயித்துப்புண் ஆறாம கிழிஞ்சு வாழை நாரா கிடந்தேன்டா. நான் விரும் பியா உன்னை தத்து குடுத்தேன்? இல்லடா! வலுக்கட்டாயமா பறிச்சுக்கிட்டாடா இந்த ஆணவக்காரி. தத்து குடுத்தது தூரத்ல இருந்தா நம்ம கண்ணுல படாது. நாம்பளும் காலப்போக்கில் தத்து குடுத்தத லேசுபாசா மறந்திரலாம். ஒரே வீட்ல கூட்டுக்குடும்பமாய் இருக்கும் அக்காகிட்ட கட்டாய தத்து. தினம் தினம் நொந்து நூலாப் போனேன்டா. நான் மகிழ்ச்சியா இருந்த நாட்களை விட துக்கமாயிருந்த நாட்களே அதிகம். நடைப் பிணமா உழண்டேன். இவ என் ஒரு குழந்தையை வச்சுக்கிட்டு இன்னொரு குழந்தையை அடிமையா நடத்தினாடா. என் பய்யனுக்கு ரெளடித்தனம் கத்துக் குடுத்தாடா. இனி பொறுக்க என்னடா இருக்கு? பொங்கி எழுந்துட்டேன்!''

''சித்தி சொல்றது உண்மையாம்மா?'' பவாவை

உலுக்கினான்.

"இன்னும் பெத்தம்மாவை சித்தின்றியடா முட்டாள். திருடிகிட்ட போய் கேட்டா ஒத்துப்பாளா? மௌனசாட்சிகளாக நிக்கும் மத்தவங்க கிட்ட கேளுடா!"

சந்துரு அங்குமிங்கும் ஓடினான். "சொல்லுங் கப்பா... சொல்லுங்க சித்தப்பா.. கஸ்தூரி.. சித்தி.. பாலாதம்பி... சொல்லுங்க... நான் யார் பெத்த மகன்?"

அரவிந்த் உரக்க அறிவித்தான். "ஸ்வாதி சொல்றதெல்லாம் உண்மைதான். நீ ஸ்வாதி பெற்றெடுத்த மகன். ஸ்வாதியின் மூத்த மகன் விக்னேஷ். நீ இளையமகன் சந்துரு. நீ பிறந்த சில நாட்களிலேயே பவா உன்னை எழுத்துப் பூர்வமா தத்தெடுத்திட்டா. இப்ப நீ சட்டப்படி எங்க மகன். பவா- அரவிந்த்தின் ஒரே மகன். அந்த உரிமையை யாராலும் பறிக்க முடியாது. பவாகிட்ட எல்லார்கிட்டயும் இருக்கிற மாதிரி நல்ல குணங் களும் இருக்கு. கெட்ட குணங்களும் இருக்கு. யாரிங்க மகாத்மா சொல்லுங்க. பவா உதவி செஞ்ச போதெல்லாம் வாங்கி வாங்கி போட்டுக்கிட்டீங்க. அவளை தெய்வம்னு தலைல தூக்கி வச்சி கூத்தாடுனீங்க. வீட்ல ஒரு கெட்ட காரியம் நடந்து போச்சு. உடனே அவளை தரைல போட்டு உடைக்றீங்க. இது சரிதானா? சந்துரு எங்க தத்து மகன்றது எப்பயாவது தெரிய வேண்டிய விஷயம் தான். சொன்னதுக்கு நன்றி ஸ்வாதிம்மா!"

"நீயும் உன் பெண்டாட்டி கூட சேந்துக்கிட்டு நரிநியாயம் பேசறியா?"

"பவாவுக்கு நான் தொட்டு தாலி கட்ன புருஷன். என் நல்லதுலயும் கெட்டதுலயும் முழுசா பங்கெடுத்துக்கிட்டவ அவ. என் படுக்கையில் பாதியை பகிர்ந்திட்டவ அவ. ஒரு சிக்கலான தருணமிது. இப்ப எல்லாரும் அவள கைவிடுறீங்க.



நானும் அவள கைவிட்டா எப்படி? நான் அவளின் புருஷன் மட்டுமல்ல - ஆயுட்கால விசுவாசி. அவள் பத்துக் கொலைகள் செய்து இரத்தம் சொட்டும் கைகளுடன் பிடிபட்டாலும் அவளை நான் நிரப ராதின்னுவேன். உலகமே அவளுக்கு எதிரா திரண் டாலும் நா அவ பக்கம்தான். என்னா... ஐ லவ் ஹர்!"

எழுந்தாள் ஸ்வாதி. திமுதிமுவென ஓடி வந்தாள். பவாவின் கழுத்தை நெரித்தாள். கன்னத் தில் மாறி மாறி அறைந்தாள். "என் ஒரு பிள்ளையை பிடுங்கி வச்சிக்கிட்டதும் இல்லாம இன்னொரு பிள்ளையை முண்ட முழுசா முழுங்கிட்டியேடி பாவி! நீ நாசமா போக!"

"வெறி தீரும் வரை. அடி ஸ்வாதி!"

"அடியேய்! அடியேய்! நீ எங்களுக்கு செஞ்ச உதவியெல்லாம் திருப்பி குடுத்துடுறேன். இந்த வீட்ல எங்களுக்கு பங்கு வேணாம். கட்ன ஆடை யோட வெளியே போய்டுறோம். ஆனா ஒண்ணே ஒண்ணை மட்டும் திருப்பிக் குடுத்திடு!"

"எதைக் கேக்ற?"

முந்தானையை இரு குவித்த உள்ளங் கைகளின் மேல் பரப்பி திருவோடு போலாக்கி அக்காளின் முன் முழங்காலிட்டு ஒப்பாரி குரலில் இறைஞ்சினாள் ஸ்வாதி. "தத்துக் குடுத்த என் மகனை திருப்பித் தந்துருடி!"

"தானமா குடுத்தத திருப்பி கேக்றதும் தப்பு திருப்பிக் குடுக்றதும் தப்பு!"

"உன்கிட்ட என்னடி கேட்டுக்கிட்டு? சந்துரு! டேய் சந்துரு! உன்னை பெத்த அம்மா கூப்டு றேன்... வாடா போகலாம்! (கணவன் பக்கம் திரும்பி) நீ என்யா கல்மாதிரி நிக்ற? நீயும் வாய்யா... நீ - நான் - நம்ம மகன் எங்காவது பிச்சை எடுத்தாவது பிழைச்சிக்கலாம்!"

சந்துருவை தரதரவென இழுத்துக் கொண்டு

ஸ்வாதியும் முரளியும் நகர..

குத்துவிளக்கை தூக்கிக் கொண்டு ஓடிவந்து வாசலை மறித்தாள் பவா. ''சந்துரு என் மகன். அவன் உன் மகன் கிடையவே கிடையாது. மீறி அவனை நீ கூட்டிட்டு போகணும்னா என் பிணத்தை தாண்டித் தான் போகணும்!''

இருதாய்களும் போர்க்கோலம் பூண்டு பளபளக்கும் நீளவாள்களுடன் வட்டம் சுழன்றனர். வீழ்வது பவதாரிணி தலையா அல்லது ஸ்வாதியின் தலையா?.. மானசீகமாய் இரு தாய்களின் வானத்தில் நூற்றுக்கணக்கான பிணந்தின்னி கழுகுகள் ''ழீயேய்!'' என குரல் எழுப்பியபடி பறந்தன!

## 22

''ரெண்டு பேரும் கொஞ்சம் சண்டையை நிறுத்றீங்களா? நான் பெத்த தாய் பக்கம் போறேனா?- இல்ல தத்தெடுத்த தாய் கூட போறேனா? - என் விருப்பத்தைக் கேட்டீங்களா மொதல்ல? - எனக்கு உங்க ரெண்டு பேரையும் பாக்க பிடிக்கல. இப்ப நான் தனியா ஒதுங்கி நிக்கப் போறேன் - சுயேட்சையா. ஒரு ஆறு மாச காலம் போகட்டும். எந்தத் தாய் வேணும்னு அப்றமா முடிவு பண்ணிக்கிறேன். அதுவரைக்கும் உங்கள்ல யாரும் என்னை தொந்தரவு பண்ணக் கூடாது!'' இரு கைகளையும் அறைந்து கும்பிட்டபடி ஓட்டமும் நடையுமாய் பிரதான சாலைக்கு ஓடினான். ஓர் ஆட்டோவுக்கு கை காட்டினான். ஆட்டோ நின்றது. ஏறி மறைந்து போனான்.

கஸ்தூரியும் தனது கணவர் தினகருடனும் மகன் மனோபாலாவுடனும் கிளம்பினாள். ''ஒரு கூட்ல மூனுகிளிகள் ஒத்துமையா வசிச்சு



வந்துச்சுக. மூத்த கிளிக்கும் ரெண்டாவது கிளிக்கும் சண்டை. ரெண்டாவது கிளி கூட்டுக் குடும்பத்தை உடைச்சிட்டு தனியா பறந்து போகுது. சண்டை மொத ரெண்டு கிளிகளுக்குள்ளேதானேன்னு மூணாவது கிளி சும்மாயிருக்க முடியுமா? மூணாவது கிளிக்கும் சுயமரியாதை இருக்கே? நாங்களும் தனியா போறம்!''

ஸ்வாதி-முரளி, கஸ்தூரி-தினகர் ஜோடிகள் வெளியேறின.

நடப்பதை நம்ப முடியாமல் வெற்றிடத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள் பவா. கயலும் கொடியும் ''நாங்களும் புறப்படுறோம். நியாயம் யார் பக்கம் இருக்குன்னு எங்களுக்கு சொல்லத் தெரியல! திருமணத்திற்கு முந்தின நாளே அன்புக் காதலனை பறிகுடுத்துட்டு தவிட்டுக் குருவியா நான் நிக்றேன். விக்னேஷ் மரணத்தால கொடியின் கல்யாணமும் அந்தரத்ல அறுந்து நிக்குது. வயசில சின்ன எங்களுக்கு மூத்த நீங்கல்லாம் ஆறுதல் சொல்லுவீங்கன்னு பாத்தா நீங்க குழாயடி சண்டை போட்டுக்கிட்டு நிக்றீங்க. ஹூம்! இனி வீடு உருத்தேறாது!'' கால் செருப்புகளை தேட மனசில்லாமல் வெறுங்கால்களுடன் வீட்டை விட்டு வெளியேறினர்.

வெறுமை பவாவின் முகத்தில் அறைந்தது. கணவன் பக்கம் திரும்பினாள். ''நீ மட்டும் தான் பாக்கி. நீயும் என்னை விட்டுப்போய்ட்டா, நானும் என் நிழலும் அனாதரவா நிப்போம்!''

''துரியோதனனுக்கு கர்ணன். பவதாரிணிக்கு அரவிந்த். அது செஞ்சோற்றுக்கடன். இது பாதி படுக்கையறை கடன். விதி வந்து என்னைக் கூப்டுற வரைக்கும் நான் உன் கூடவே இருப்பேன்!''

கணவனின் மடியில் படுத்துக் கொண்டாள்

பவா. "எனது சாம்ராஜ்ஜியம் சிதறிவிட்டது. எனது இராணுவ தளபதி தனியே போய்விட்டாள். எனது மதியூக மந்திரி பிரியாவிடை பெற்றுக் கொண்டு பிரிந்துவிட்டாள். எனது அரண்மனைக்கிளி கூட்டை விட்டு பறந்தோடி விட்டது. எனது மந்திரி சபையில் இருந்தோர் ஆளுக்கொரு பக்கம் சிதறி ஓடிவிட்டனர். என் செய்வேன் நான் என் செய்வேன்?"

"அமைதிப் படு பவா!"

"இனி எனது வாழ்வில் ஏது அமைதி. எனது மீதி வாழ்நாட்கள் இரத்தம் பூசியே கழியும். மரணத்தில் தான் நிரந்தர அமைதி கிடைக்கும் போல. அமைதியான மரணம் வேண்டும் எனக்கு. கொடூரமான விதங்களில் நான் இறந்தா பாவிக்கு தக்க தண்டனை கிடைச்சிருச்சின்னு ஊர்உலகம் தூத்தும். ஆழ்ந்த தூக்கத்திலேயே என் உயிர் பிரிஞ்சிடணும். யுகம் யுகமாய் விரிந்து அகன்றிருக்கும் பிரபஞ்ச இருட் டில் ஒரு கைப்பிடி இருட்டு இரகசியமாய் கலந்து விட வேண்டும். அமேஸான் ஆற்றில் விழும் பறக்கத் தெரியாத குஞ்சு கொக்குகளை இரத்த வெறி பிடித்த பிரன்கா மீன்கள் கூட்டமாய் கூடி கடித்துக் குதறி ஒரு சிறு துணுக்கும் மிஞ்சாமல் விழுங்கி விடும்கள். அதனைப் போன்றதொரு விழுங்கல் எனக்குத் தேவை!"

"இபப என்ன நடந்து போச்சுன்னு புலம்புற? சட்டப்படி சந்துரு நம்ம மகன். இத ஸ்வாதியும் மறுக்க முடியாது. சந்துருவும் மறுக்க முடியாது. சந்துரு தனியா போயிருக்கானே தவிர திரும்பவும் நம்மகிட்ட வந்திடுவான். பெத்த பாசத்தை விட வளத்த பாசம் பெரிசில்லையா? சந்துரு எனக்கு வேண்டவே வேண்டாம்னு ஸ்வாதியை சொல்ல வைப்போம். பவாம்மாதான் எனக்குத் தேவைன்னு சந்துரு உரக்க அறிவிப்பான். ரெண்டுமே நடக்கும். ரெண்டையும் நடக்க வைப்பேன்!"



"சத்தியமா?"

"தில்லை காளியம்மனின் மீது சத்யமா கண்ணே!" பவாவின் நெற்றியில் முத்தமிட்டான் அரவிந்த்.

பவதாரிணியின் முகத்தில் சாத்தான் குடிசை போட்டிருந்தான். அவளின் எதிரில் நான்கைந்து இளைஞர்கள் கைகட்டி நின்றிருந்தனர். "மேடம் கூப்டீங்களாமே?"

"ஆமா கூப்டேன்டா. எனக்கு நீங்கல்லாம் ஒரு உதவி செய்யணும்!"

"சொல்லுங்க மேடம்!"

"என் தங்கச்சி ஸ்வாதியோட புருஷன் பரங்கிப் பேட்டைல இறால் பண்ணை வச்சிருக்கான் தெரியுமா?"

"தெரியுமே! அவங்களுக்கு யாராவது தொந்தரவு தராங்களா... சொல்லுங்க.. தொந்தரவு தரவுங்களோட கையை கால எடுத்துடுரோம்!"

"அவசரப்படாதிங்கடா.. நீங்க தொந்தரவு குடுக்க வேண்டியதே ஸ்வாதி புருஷனுக்குத் தான்!"

"என்ன மேடம் சொல்றீங்க? உங்களுக்கும் உங்க தங்கச்சிக்கும் டேர்ம் சரியில்லையா?"

"காரணகாரியமெல்லாம் கேக்காதிங்க. நானே நொந்துபோய் நிக்றேன். நைட்டோட நைட்டா ஸ்வாதி புருஷன் இறால் பண்ணையை அழிச்சு ஒழிச்சிருங்க. இனி அவன் தொழில்ல எந்திரிக்கவே கூடாது!"

"சரிங்க மேடம்!"

ஐம்பதாயிரம் ரூபாயை நீட்டினாள். "சங்கோஜப் படாம எடுத்துக்கங்கடா. பத்தலைன்னா கேளுங்க. பாக்கியையும் தரேன். நான் உங்க புரபஸர், நீங்க என்

முன்னாள் மாணவர்கள்ன்றத மறந்திடுங்க. செய்ற வேலைல கவனம் தேவை. போலீஸ்ல நீங்களும் சிக்கிரக்கூடாது. செய்யச் சொன்னது நான் தான்னு என் பேரும் வெளில வந்திரக்கூடாது!''

தலையாட்டியபடி இளைஞர்கள் புறப்பட்டனர். நள்ளிரவில் அந்த ஜீப் இறால் மீன் பண்ணைக்குள் சீறியது. இறால் குட்டையில் சயனைடு கலந்தனர். இறால் தீவனங்கள் விசிறியடிக்கப்பட்டன. பண்ணையின் தற்காலிக ஷெட்கள் சூறையாடப் பட்டன. தடுக்க வந்தோர் மரணக்காயப்பட்டனர். அடுத்த அரை மணி நேரத்தில் வந்த வேலையை முடித்துவிட்டு ஜீப் திரும்பி பறந்தது.

அடுத்தடுத்து காய்களை நகர்த்த ஆரம்பித்தாள் பவா. இறால் பண்ணையை அழித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமலிருக்க காவல்துறை ஆய்வாளருக்கு கையூட்டு கொடுத்தாள். ஸ்வாதி-முரளி குடியிருந்த வாடகை வீட்டை உரிமையாளரிடம் பேசி அதிரடியாக காலி பண்ண வைத்தாள். வாடகைக்கு யார் வீடு கொடுத்தாலும் சேதப் படுவார்கள் என மிரட்டினாள். முரளிக்கு வங்கிக் கடனோ தனி நபர்கள் வழி கடனோ கிடைக்காத படிக்கு லாபியில் ஈடுபட்டாள். வீட்டை விட்டு வெளியேறும் போது ஸ்வாதி வீட்டிலிருந்து அறுபது பவுன் நகைகளையும் இரண்டு லட்ச ரூபாய் ரொக்கத்தையும் எடுத்துச் சென்றுவிட்டதாக புகார் அளித்தாள் பவா. தத்து கொடுக்கும் போது ஐந்து லட்ச ரூபாய் வாங்கிக் கொண்ட ஸ்வாதி மேலும் இருபது லட்ச ரூபாய் கேட்டு தனது மகனை தன்னிடமிருந்து பிரித்து விட்டதாக இரண்டாவது புகாரும் அளித்திருந்தாள் பவா.

மணிமேகலை நகர் காவல் நிலையம். காவல்துறை ஆய்வாளர் மேஜையில் இருந்த டேபிள்வெயிட்டை உருட்டியபடி எதிரில் நிற்பவர்களை ஒரு ஸ்டெடிகேம் காமிரா பார்வை பார்த்தார்.



ஸ்வாதி தனது கணவன் முரளியுடன். பவா தனது கணவன் அரவிந்துடன்.

ஆய்வாளர் பவாவை மட்டும் அமரச் சொன்னார். அமர்ந்தாள்.

''நீதான் ஸ்வாதியா?''

''ஆமாம்!''

''இந்தம்மாவோட தங்கச்சியா?''

''எவன் சொன்னது? இவ யாரோ நாங்க யாரோ! ஆஸ்பத்திரில பிரசவம் பார்க்கும்போது எங்க அக்காவை யாரோ தூக்கிக்கிட்டு இந்த பொறுக்கி கழிசடையை போட்டுட்டுப் போய்ட்டாங்க. இவ சாயம் சமீபத்லதான் வெளுத்துப் போச்சு!''

''மேடம் ஒரு புரபஸர்! கொஞ்சம் மரியாதையா பேசும்மா. இத உன் வீடுன்னு நினைச்சியா? போலீஸ் ஸ்டேஷன்ம்மா. திருடுன நகையையும் பணத்தையும் எங்க ஒளிச்சு வச்சிருக்க?''

''அடப்பாவி! என் மேலயே திருட்டுப்பழி போடுறியா? குதிரை தள்ளியும் விட்டுட்டு குழியும் பறிச்ச மாதிரி இருக்குடி உன் செய்கை. உன் சங்காத்தமே வேணாம்னுதான் சம பங்குள்ள வீட்டை விட்டு வெளியேறினேன்? எங்க இறால் பண்ணையை ரௌடிகள் வச்சு நாசம் பண்ணின. எங்களை கடந்த ஆறு மாசமா தெருநாயை துரத்ற மாதிரி ஓடஓட விரட்டி வேட்டையாடுற. இன்னுமாடி உன் வெறி அடங்கல? தூ!'' காறி பவா முகத்தில் உமிழ்ந்தாள். முகத்தில் படர்ந்த கொத்து எச்சிலை துடைத்தவாறே சிரித்தாள் பவா.

''பாத்துக்கங்க இன்ஸ்பெக்டர் சார்! உங்க முன்னாடியே இந்த அடங்காப்பிடாரி ஆடுற பேயாட்டத்தை!''

''என்ன சார் இவ ஸ்டேஷனையே விலைக்கி வாங்கிட்ட மாதிரி பேசுறா? இந்த ஸ்டேஷனுக்கு நீங்க இன்ஸ்பெக்டரா, அவ இன்ஸ்பெக்டரா?

ஸ்டேஷனை நல்ல விலைக்கு அவளுக்கு வித்திட்டீங்களா?''

''இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசின... பொம்பளைன்னு பாக்காம லாக்கப்புல தள்ளி, நாறடிச்சிடுவேன்! வாய மூட்றி!''

''என் ஒய்ஃபை மரியாதையில்லாம பேசாதீங்க இன்ஸ்பெக்டர். இது குடும்பச் சண்டை... இதை நீங்க ஹேண்டில் பண்ற விதமே சரியில்லை. சுத்தி வளைச்சு பேசாம நேரா விஷயத்துக்கு வாங்க. நீங்க எங்ககிட்ட என்ன எதிர்பார்க்கிறீங்க?''

''இது கேள்வி. குடுத்த ரெண்டு புகாரையும் வாபஸ் வாங்கிப்பாங்க மேடம். அத்தோட யாரோ விஷமிகள் நாசம் பண்ணின இறால் பண்ணைகளை மீண்டும் அமைச்சு தருவார் மேடம். சொத்துக்களை மூணா பாகம் பிரிச்ச உங்க பங்கை உடனே குடுக்கச் சொல்றேன்.... ரொக்கமா பணம்கிணம் செலவுக்கு வேணும்னா கூசாம கேளுங்க - வாங்கித்தரேன். பதிலுக்கு நீங்க செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணு - தத்துக்குடுத்த மகனை சட்டத்துக்கு புறம்பா உரிமை கொண்டாடாம இருக்கணும்!''

''சிலந்தி வலை பின்னுற மாதிரி பின்னிருக்கா தட்டுவாணி! நாங்களும் ஒரு டீலை உங்க முன்னாடி வைக்கறோம். நாங்க எல்லாத்தையும் விட்டுத் தரோம்... கூடுதலா அந்த அவுசாரிக்கு ரொக்கமா பணம்கிணம் செலவுக்கு வேணும்னா கூசாம கேளுங்க - பத்து வட்டிக்கு கடன் வாங்கியாவது தரோம். பதிலுக்கு இந்த பரதேசி முண்ட செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணு- தத்து வாங்கின மகனை பெத்த தாய் கிட்ட ஒப்படைக்கணும்!''

தலையில் இரு கைகளையும் வைத்துக் கொண்டார் காவல்துறை ஆய்வாளர். ''தேவுடா!''



# 23

வெல்லப் பிறந்தான் முதலித் தெரு. அந்த நான்கு தள வீட்டில் நான்காவது தள அறைக்குள் ஒடுங்கியிருந்தான் சந்துரு. உரித்த பிராய்லர் கோழி போல ஆள் மெலிந்திருந்தான். மொட்டை அடித்த தலையில் லேசாக முடி முளைத்திருந்தது. முகத்திலும் மேலுதட்டிலும் ரோமப்புள்ளிகள் பூத்திருந்தன. விக்னேஷின் மரணம் கூட்டுக் குடும்பத்தை இலையுதிர்கால மரமாக்கிவிட்டது. வாசலில் அழைப்பு மணி சப்தம் டிங்டாங்கியது. வெறும் லுங்கியுடன் இருந்தவன் சட்டையை உடுத்திக் கொண்டு கதவைப் போய் திறந்தான். கயல்விழியும் பொற்கொடியும் நின்றிருந்தனர்.

''ஹாய் சந்துரு!''

பதிலுக்கு ஹாய் சொல்லாமல் அவஸ்தையாக முறுவலித்தான்.

''உள்ளே வரலாமா?''

வரவும் சொல்லாமல் வர வேண்டாம் எனவும் சொல்லாமல் குழப்பமாக நின்றிருந்தான். அவனைத் தள்ளிக் கொண்டு இருவரும் உள்ளே போயினர். தரை முழுக்க நசுக்கிப் போட்ட சிகரெட் துண்டுகள். செய்தித்தாள்கள் சிதறிக்கிடந்தன. தரைக் கோரைப்பாயில் நான்கைந்து தலையணைகள் அலங்கோலமாய் மடங்கி அமர்ந்திருந்தன.

''சாப்ட்டியா?'' கோரஸ் கேள்வி.

காது கேளாதவன் போல் இருந்தான்.

''உன்னைத்தான் கேக்றோம்.... சாப்ட்டியா? கடைசியா என்னைக்கு குளிச்ச? கண்ணெல்லாம்

உள்ள போய் கிடக்கு?''

சகோதரிகளை ஆழமாய் பார்த்தான். ''என்னைக் கேக்றீங்களே... நீங்க ரெண்டு பேரும் ஒழுங்கா சாப்டுறீங்களா? குளிக்றீங்களா? தூங்கறீங்களா?''

கயல்விழி அழுதாள். ''விக்னேஷும் நானும் நூறு வருட தாம்பத்யம் செய்ய கற்பனித்திருந்தோம். என்னென்ன கனவுகள்! என்னென்ன திட்டங்கள்! எல்லாம் தவிடு பொடியாகிவிட்டன. விக்னேஷுக்கு கூட்டுக்குடும்பம் கான்செப்டின் மீது அலாதி மரியாதை. தரைத்தளம் முதல்தளம் இரண்டாவது தளம் உள்ள ஒரு வீட்டை கட்டுவானாம் - குலுக்கு சீட்டு போட்டு வீட்டை சகோதரர்களுடன் பகிர்ந்து கொள்வானாம். வாராவாரம் சனிக்கிழமை மொட்டை மாடியில் நட்சத்திரச் சோறாம். அவன் போனான். அவன் சார்ந்த கூட்டுக் குடும்பமும் காணாமல் போய் விட்டது. அவனது இழப்பு எனது ஆயுளுக்கும் இருக்கும். நான் சத்தியவான் சாவித்திரி அல்ல - எமனுடன் போராடி விக்னேஷின் உயிரை மீட்டு வர. நான் சாதாரண மனுஷி. என்னால ஆக வேண்டிய காரியம் சில இருக்கு. அதில ஒண்ணு - உங்க ரெண்டு பேர் திருமணத்தையும் நடத்திப் பாக்றது. விக்னேஷின் ஆத்மா சாந்தியடையவாவது நீங்க ரெண்டு பேரும் சீக்ரம் கல்யாணம் பண்ணிக்கணும்!''

''இல்லண்ணி... நான் மிக மிக குழப்ப மனநிலையில் இருக்கேன்... என்னால எதை பத்தியும் யோசிக்க முடியல!''

''உன்னைப் பாக்க பவாம்மாவும் ஸ்வாதிம்மா வும் வராங்களா?''

''பவாம்மா ஸ்வாதிம்மா கஸ்தூரிம்மா மூணு பேரும் மாறி மாறி வராங்க. பவாம்மா எனக்கு பிடிச்ச பலகாரங்களை செஞ்சிட்டு வந்து என் முன்னாடி



படையல் மாதிரி வச்சு நான் சாப்பிட காத்திருக்காங்க. சந்துரு சந்துருன்னு ஒரு நோட்டல பத்தாயிரம் தடவை எழுதினதை காட்றாங்க. என்னை ஆஸ்பத்திரியிலயிருந்து தூக்கிட்டு வந்ததிலிருந்து நான் பிசியற வரைக்குமான நிகழ்வுகளை சொல்லிக் காட்றாங்க. காட்டாறு பாசமது. பெறாமலேயே ஒரு குழந்தை மீது இப்படியொரு அசுர பாசத்தை ஒரு தாய் காட்ட முடியுமா? காட்டியிருக்காங்க பவாம்மா!''

''ஸ்வாதிம்மா?''

''நெல்லை எக்ஸ்பிரஸ்ஸில் தாம்பரம் அருகே குழந்தையை பறிகொடுத்துவிட்டு வாஞ்சி மணி யாச்சியை ரயில் நெருங்கும்போது குழந்தையை கொடுத்துவிடு என குழந்தை திருடனிடம் பயணி கெஞ்சுவது போலிருக்கிறது ஸ்வாதிம்மாவின் காலம் தாழ்ந்த பாசஉணர்ச்சி. பவாம்மா உணவு தயாரித்து எடுத்து வந்தார். என் முன் வைத்து சாப்பிட காத்திருந்தார். ஸ்வாதிம்மாவோ சமைச்சு எடுத்துட்டு வந்தத பிசைஞ்சு உருண்டை உருட்டி வாயில் ஊட்டுறார். மனதிற்குள் எதை எதையோ நினைத்துக் கொண்டவராய் என்னைக் கட்டிக் கொண்டு அழுகிறார். அக்காவின் மீதிருந்த மரியாதை நனைந்த அன்பிற்காகத்தான் தத்து குடுத்தேன். வேறெதற்கும் அல்ல - என முறை யிடுகிறார்!''

''கஸ்தூரிம்மா?''

''அவரும் எனக்கு சமைத்து எடுத்து வருகிறார். அவர் எந்த அக்கா சார்பாகவும் பேசுவதில்லை. கண்கள் கலங்க என்னைப் பார்த்துக் கொண்டே யிருப்பார். எனது கையில் சாமிக் கயிறு கட்டிவிட்டி ருக்கார்.''

''மனோபாலா என்ன சொல்றான்?''

''திருமண உறவு எப்போதுமே பிரச்சனைகளின் தாய். அதனால்தான் நான்

அனுமன் பக்தனாய் இருக்கிறேன். நோ பாயிலி நோ ப்ராப்ளம். ஒரு டெடி பியருக்கு சண்டையிடும் இரு சிறுமிகள் போல மோதிக் கொள்கிறார்கள் இரு பெரிம்மாமார்கள்!' - என்கிறான். என்னையும் அனுமன் பக்தனாய் மாறிவிட நச்சரிக்கிறான்!''

''பவாம்மாவின் அன்பிருக்கும் தராசு தட்டு கனக்கிறதா, ஸ்வாதிம்மாவின் அன்பிருக்கும் தராசு தட்டு கனக்கிறதா சந்துரு?''

''இருவருமே வெவ்வேறு வகை ஆளுமை உள்ளவர்கள். இவர்களின் அன்பை வகை பிரித்து அளவுகோல் வைத்து அளந்து பார்க்க முடியாது. உண்மையைச் சொல்லப்போனா நான் திகைச்சுப் போய் நிக்றேன். எந்த பக்கம் போறதுன்னு எனக்கே தெரியல. என் பொருட்டு இவர்கள் தொடர்ந்து மோதி ஒரு ஈடுசெய்ய முடியாத இன்னொரு இழப்பை என்னை சந்திக்க வைத்து விடுவார்களோ என பயப்படுகிறேன்!''

''நியாயமான குழப்பம்தான் சந்துரு!''

பொற்கொடி குறுக்கிட்டாள். ''நான் ஒரு யோசனை சொல்றேன். ரெண்டு பேரும் கேப்பீங்களா?''

''என்ன?''

''நீ விக்னேஷை இழந்து நிக்ற. சந்துருவோ விக்னேஷோட சேத்து ஒட்டுமொத்த குடும்பத்தையும் இழந்து நிக்றான். சந்துருவின் குடும்பத்ல அக்கா தங்கச்சிகள் விட்டுக் குடுத்து செயல்பட மாட்டேங்கிறாங்க. இங்க நான் என் அக்காவுக்காக என் காதலை விட்டுத் தரேன். கயல்! சந்துரு! நீங்க ரெண்டு பேரும் திருமணம் செஞ்சிக்கிட்டா என்ன? ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலாயிருப்பீங்க. சந்துரு தனியா நிக்றது நல்லதில்ல.''

''முட்டாள்தனமா பேசாதே கொடி. நான் நிச்சயம் ஒருநா கல்யாணம் பண்ணிப்பேன். ஆனா மாப்பிள்ளை யாரோ ஒரு முகம் தெரியாத ஆணாக



இருப்பான். நான் ஆயுளுக்கும் சந்துருவுக்கு அண்ணி முறைதான்!''

''அண்ணி சொல்றதுதான் கரெக்ட். அண்ணனை கல்யாணம் பண்ணிக்கிற யாரும் எனக்கு அண்ணி முறைதான்.''

கயல்விழி சந்துருவை தனது இடப்பக்கம் இழுத்தாள். பொற்கொடியை தனது வலப்பக்கம் இழுத்தாள். இருவரும் திமிறினர். ''என்ன செய்ற? எங்க கைகளை விடு!''

இருவரின் கைகளையும் இணைத்தாள் கயல்விழி. ''நீங்க ரெண்டு பேரும் சீக்ரமா கல்யாணம் பண்ணிக்கங்க. பிரம்மச்சாரியாக சந்துரு நின்னா பவாம்மாவும் ஸ்வாதிம்மாவும் தொடர்ந்து அவனுக்காக உரிமை கொண்டாடுவாங்க. ஓர் ஆணின் மீது ஒரு தாய்க்கு முழு உரிமை அந்த ஆணின் திருமணம் வரைதான். ஒரு தாயின் சொத்தாக இருந்த ஆண் திருமணத்திற்குப் பின் மனைவியின் சொத்தாகி விடுகிறான்!''

பொற்கொடி செல்லமாக கிண்டலித்தாள். ''நீ பொல்லாத ஆளுடி கயல்!''

''எப்டி?''

''ரெண்டு மலையாடுகள் மாதிரி பவாம்மாவும் ஸ்வாதிம்மாவும் முட்டிக்கிட்டுருக்காங்க. இடைல நானும் சந்துருவும் கல்யாணம் பண்ணிக்கிட்டா விஷயம் உல்ட்டாவாயிடும். பவாம்மாவும் ஸ்வாதிம்மாவும் சேந்துக்கிட்டு என்னை முட்ட வருவாங்க. ஸ்வாதிம்மாவை ஹாண்டில் பண்ணிருவேன், பவாம்மாவை எனக்கு ஹாண்டில் பண்ணத் தெரியாது!''

''அதனால?''

''அதனால நான் கல்யாணத்துக்கு அவசரப்பட விரும்பல. மொதல்ல சந்துரு இரு அம்மாக்களில் யாருக்கு சொந்தம் என்பது முடிவாகட்டும். அது வரைக்கும் நான் பொறுமையா காத்திருக்கிறேன்!''

வாய்விட்டு சிரித்துவிட்டான் சந்துரு.

''என்னடா சிரிக்ற?''

''ஒரே குணமுடைய ஆயிரம் ஆண்களை ஒருங்கிணைச்சி ஊர்வலம் நடத்திரலாம். ஒரே குணமுடைய இரு பெண்களை இந்த உலகத்தில் பார்க்கவே முடியல. ஒண்ணு ஒரு பக்கம் போனா இன்னொண்ணு இன்னொரு பக்கம் போகுது. சிலது சுயநலமே இல்லாம இருக்கு. சிலது சுயநலத்தின் வடிவா இருக்கு. உலகத் தொகை ஒரு மகா சமுத்திரம்னா பெண்கள் எல்லாம் தனித் தனித் தீவுக்கூட்டங்கள்!''

''மொட்டையா! ஆளு மெலிஞ்சிருக்கியே ஒழிய திமிர் குறையலடா உனக்கு!'' செல்லமாய் வயிற்றில் குத்தினாள் பொற்கொடி. வலிப்பதுபோல் முகம் காட்டினான் சந்துரு. சட்டைக்குள் கையை விட்டு வயிற்றை நீவிவிட்டாள் கொடி. ''ஸாரிடா!''

தடவிக் கொடுத்த கையை வயிற்றுடன் பொத்திக் கொண்டான். நடுங்கும் விரல்கள் வயிற்றின் வெதுவெதுப்பை ரசித்தவாறே குசலம் விசாரித்தன. கயல் இல்லாவிட்டால் சந்துருவை மடியில் இழுத்துப்போட்டு அவனை உடல் முழுக்க தடவிக் கொடுத்து கைகால் விரல் நகங்கள் வெட்டி குளிக்க வைத்து, புத்தாடை அணிவித்து உணவு புகட்டி சீராட்டி பாராட்டியிருப்பாள் கொடி. மனைவியாலும் காதல் கணவனுக்குத் தாயாக முடியும் என்பதனை நிரூபித்துக் காட்டியிருப்பாள். சந்துருவின் அழகு முகத்தை பார்த்தாலே உலகின் அனைத்து தாய்மாரும் தனது மகனென்று உரிமை கொண்டாடவே செய்வர்.

''எனக்கு மட்டும் வசதியிருந்தால் சந்துருவை தூக்கிக் கொண்டு ஸ்விட்சர்லாந்து பறந்து விடுவேன். என் பெங்குவின் பறவையே! டால்பின் குட்டியே! கங்காரு குட்டியே! **ஒரு தெய்வம்**



**தந்த பூவே!''**

தொண்டையை செருமிக்கொண்டாள் கயல். ''சரி... சரி... வைத்தியம் போதும் கொடி!

பவாம்மா- ஸ்வாதிம்மா மோதலை முடிவுக்கு கொண்டு வந்த பின்தான் உங்களுக்கு கல்யாணம் தேவை-சரிதானா?''

''ஆமா!''

சில நொடிகள் யோசித்தவள் சூரியனித்தாள். ''இரு தாய்மார்கள் செய்யும் யுத்தத்துக்கு இடையே சமாதானத் தூதுவாய் நான் போகிறேன். இக்காரியத்தை என் விக்னேஷுக்காகவும் என் கொடிக்காகவும் செய்கிறேன். நான் வெற்றி பெற கடவுள் உதவட்டும்!''

உலா தொலைபேசி பவாம்மாவும் ஸ்வாதிம்மாவும் மணிமேகலை நகர் காவல் நிலையத்தில் இருப்பதாக தகவல் சொன்னது.

இரத்தக் களறியாய் கிடக்கும் போர்க்களத்திற்குள் சமாதானப் புறா சடசடப்பாய் பறந்தது!

## 24

**கா**வல்துறை ஆய்வாளர் ''யாரம்மா நீ?'' வினவினார்.

''நான் இவங்களோட மருமகள் - கயல்விழி''

''நீ ஏதாவது உன் பங்குக்கு குழப்பிட்டுப்போ!''

''நான் குழப்ப வால இன்ஸ்பெக்டர். பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வந்திருக்கேன். பவாம்மா, ஸ்வாதிம்மா மீது கொடுத்த இரு புகார்களை பதிஞ்சிராதிங்க. பதிவை ஒரு இருபத்திநாலு மணி நேரம் ஒத்திப்போடுங்க. நாங்களே பேசி ஒரு முடிவுக்கு வரம்.''

''இவள் சொல்வதை நான் ஒத்துக்கொள்ளலாமா? இவளின் பேச்சுக்கு நீங்களிருவரும் உடன்படுவீர்களா?''

பதில் சொல்லப்போகும் இரு தாய்மார்களைப் பார்த்து கும்பிட்டாள் கயல்விழி. ''ப்ளீஸ்... வாங்க உக்காந்து பேசுவோம். பேசி ஒரு முடிவுக்கு வருவம். முடிவு யாருக்கும் சாதகமாகவும் இருக்காது, பாதக மாகவும் இருக்காது. பல நேரங்களில் சமாதானம் வெற்றியைவிட உயர்ந்ததாக இருக்கும். சமாதானத் தில் ஈடுபடும் இருவருக்கும் வெற்றிதான் கிடைக் கும். சமாதானம் வன்முறையே இல்லாத வெற்றிப் பாதை. சமாதானப் பேச்சு வெற்றி பெறாவிட்டால் அவரவர் வழியில் போங்கள். அதற்கு உங்களுக்கு முழு உரிமை இருக்கிறது. அதன்பின் ஒருபோதும் நான் உங்க வழில குறுக்கிட மாட்டேன்...''

பவாவும் ஸ்வாதியும் சம்மதித்தனர்.

இன்ஸ்பெக்டர் காதுகளில் கிசுகிசுத்தாள் கயல். 'இவங்க சமாதானம் ஆய்ட்டா லஞ்சத்துட்டு கிடைக்காம போய்ரும்ன்னு பதறாதிங்க. சமாதானம் ஆய்ட்டா உங்களை பணத்தாலேயே குளிப்பாட்டுறேன்!''

அரவிந்த்தையும் முரளியையும் பார்த்து, ''ஸாரி அங்கிள்ஸ்! இந்த சமாதான பேச்சுவார்த்தையில் மேல்ஸ் ஆர் நாட் அலவ்டு!''

பவாவையும் ஸ்வாதியையும் அழைத்துக் கொண்டு காருக்கு நடந்தாள் கயல்.

குளிர்பதன மூட்டப்பட்ட அறை. அறைக் கதவை உட்புறமாகத் தாளிட்டாள் கயல்.

பவா, ஸ்வாதி, கஸ்தூரி, கயல், கொடி ஐவரும் ஒரு வட்டம் அமைத்து அமர்ந்தனர்.

''பேச ஆரம்பிக்கலாமா?'' என்றாள் கயல்.

நால்வரும் தலையசைத்தனர்.



''ஸ்வாதிம்மா! கோபப்படாம பதில் சொல்லணும் நீங்க... விக்னேஷ் இறக்கலேன்னா சந்துருவை திருப்பிக் கேட்டிருக்க மாட்டீங்கள்ல?''

''ஆ.... ஆ... ஆமா!''

''தானமா குடுத்த ஒரு பொருளை எச்சூழலிலும் திருப்பிக் கேட்கக் கூடாது என்கிறது திருக்குர்ஆன். ஆஸ்பத்திரியில பவாம்மா சந்துருவை தூக்கிக் கொண்டு போக முயற்சிக்கும்போது நீங்க முழு மூச்சாய் தடுத்திருந்தா பவாம்மா குழந்தையை தூக்கிட்டு போயிருந்திருக்க மாட்டார். சிலபல வாரங்கள் கோபமாய் இருந்துவிட்டு உங்களுடன் எப்போதும் போல பழக ஆரம்பித்திருப்பார். அதன் பின் அவரும் வேறு வழி இல்லாது ஏதாவது ஒரு குழந்தையை தத்தெடுத்திருந்திருப்பார். நீங்க விட்டுட்டீங்க. தத்து பத்திரத்லயும் மறுப்பேதும் தெரிவிக்காம கையெழுத்து போட்டுட்டீங்க. விக்னேஷ் மரணத்துக்குப் பின் சந்துரு தேவையாப்படுது உங்களுக்கு. மகன் என்ன தாம்ஸன் டிவியா?- வாரண்டி பீரியடுக்குள்ள பிக்சர் ட்யூப் போயிருச்சுன்னா இன்னொரு தாம்ஸன் டிவிய ரீப்ளேஸ்மென்ட்டா வாங்கிக்க? விக்னேஷ் மட்டும்தான் உங்க குழந்தை - சந்துரு பவா பெத்த மகன் என்றால் விக்னேஷ் மரணத்துக்குப் பின் சந்துருவை நீங்க தா கேக்க முடியுமா? அன்றைய விபத்தில் விக்னேஷுக்கும் சந்துருவுக்கும் சேர்த்து ஏதாவது ஆயிருந்தா? அல்லது சந்துருவுக்கு மட்டும் ஏதாவது ஆயிருந்தா? இப்படி பேசுறேனேன்னு என்னை தப்பா நினைச்சுக்காதிங்க. மரணம் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம் - எதுவும் சாசுவதமல்ல. மரணத்தின் நோக்கங்களும் செயல்பாடுகளும் வாழ்க்கையின் விளங்க முடியாத மர்மங்கள். எனது உயிர் காதலன் விக்னேஷை நான் இழந்திட்டேன்! அதுக்கு நா யாரப் போய் முட்டிக்க? மோதிக்க? இழப்பின் தாக்கத்தை வெளில காட்டாம வெளி

யுலகத்ல நான் உலவிகிட்டுத்தான் இருக்கேன். அப்டி உலவிக்கிட்ருக்ற எத்னி பேர நான் உங்களுக்கு காட்டட்டும்?''

ஸ்வாதி மௌனித்தாள். பவாம்மா பக்கம் திரும்பினாள் கயல். ''ஆன்ட்டி! நீங்க ரெண்டு தங்கச்சிகளுக்கு அக்காவா செயல்படல; அம்மாவா செயல்பட்டீங்க. அவங்க கேக்காமலேயே அவங்க விரும்பினதையெல்லாம் குடுத்திங்க. அவங்க சந்தோஷம்தான் உங்களுக்கு பிரதானமாயிருந்தது. நீங்க சறுக்னது எப்பன்னா... சந்துருவை வலுக் கட்டாயமா தத்தெடுத்தப்பதான். சந்துரு மீது அளவில்லாத பாசத்தை பேய்மழை பெருமழையா பொழிஞ்சீங்க. விக்னேஷ் மரணத்துக்குப் பின் உங்க தங்கச்சி ஸ்வாதி தத்து குடுத்த மகனை கேக்றாங்க. இப்ப நீங்க என்ன பண்ணியிருக் கணும்? தங்கச்சிகளுக்கு குடுத்தே பழகிய நீங்க சந்துருவைக் குடுத்திருக்கணும். உங்க ரெண்டு பேரோட கூட்டு பாசத்துல சந்துரு நிம்மதியா இருந் திருப்பான். ஸ்வாதிம்மா பிடிவாதமா கேட்டாங்க. நீங்க பிடிவாதமா குடுக்க மறுத்தீங்க. சந்துரு தனியா போய்ட்டான். ஸ்வாதியை பழிவாங்றதா நினைச்சு உங்க கண்ல ஒண்ணைக் குத்தி எறக் குறைய குருடாக்கிட்டீங்க. உங்க மோதலை முடிவுக்கு கொண்டு வர சந்துரு ஏதாவது ஒரு கோரமுடிவு எடுத்திட்டா என்ன பண்ணுவீங்க? திருமணத்திற்குப் பின் சந்துருவின் மனைவி, சந்துருவை உங்க கிட்டயிருந்து தனியா பிரிச்செடுத்திட்டா என்ன பண்ணுவீங்க? முட்டி மோதிக்ற நீங்க ரெண்டுபேரும் எங்கம்மா இல்லைன்னு சந்துரு அறிவிச்சிட்டா என்ன பண்ணுவீங்க!''

தலைகுனிந்தாள் பவா.

''வாழ்க்கைல முக்கால்வாசியை கழிச் சிட்டீங்க. மீதி கால்வாசியை நீங்க ரெண்டு பேரும் நிம்மதியா கழிக்க விரும்பலையா? மீதி கால்வாசி



வாழ்க்கைல உங்களைச் சார்ந்த மத்தவங்கள நிம்மதியா வாழ விட மாட்டீங்களா? வாழ்க்கைல பக்குவம் பெறும்வரை ஒத்துமையா இருந்துட்டு பக்குவம் பெற்ற பின் இப்டி மோதிக்றது சரியா? இந்த மோதல் அடுத்த தலைமுறைக்கும் தொடரணுமா? வேணாம் ஆன்ட்டீஸ். ஸ்வாதி ஆன்ட்டி! உங்களுக்கு பவாம்மா மீது கோபம் வரும்போது பவாம்மா உங்களுக்கு செஞ்ச நல்லதையெல்லாம் நினைச்சுப் பாருங்க. பவா ஆன்ட்டி! நீங்களும் ஸ்வாதிம்மா மீது கோபம் வரப்ப ஸ்வாதிம்மா உங்களுக்கு செஞ்ச நல்லதையெல்லாம் நினைச்சுப் பாருங்க. ஒருத்தர் மேல ஒருத்தர் வச்சிருக்ற கோபதாபம் காணாம போய்டும். இது ஒரு மனப் பயிற்சி. கெட்டதை நல்லதால் மூழ்கடிக்கும் மனப்பயிற்சி. உங்க மோதல் வீட்டின் அனைத்து ஆண்களுக்கும் தீராத மன உளைச்சலை பரிசளிச்சிருக்கு. பிலாசபி புரபஸர் கமலநாதனின் தலைமுறைகள் ஆயிரம் வருடம் ஒற்றுமையாய் ஆரோக்கியமாய் மகிழ்ச்சியாய் வாழ நீங்க விட்டுக் குடுக்கலாமே ஆன்ட்டீஸ்!''

''என்னை விட்டுத்தரச் சொல்றியா கயல்?'' பவா.

''என்னை விட்டுத்தரச் சொல்றியா கயல்?'' ஸ்வாதி.

''அதை நான் சொல்லமாட்டேன். நீங்களா மனம் விட்டுப் பேசி முடிவுக்கு வரலாம். ஒருத்தர் மூஞ்சியை ஒருத்தர் முழுசா பாத்து பல நாட்கள் ஆகியிருக்கும். ஒருவரையொருவர் முழுசா பாத்துக்குங்க. இந்த குறுகிய கால இடைவெளில உங்க முட்டல் மோதல் உங்க இருவரையும் உடல்ரீதியா எவ்வளவு பாதிச்சிருக்கும்னு சர்வே பண்ணிக்கங்க.''

ஸ்வாதி கண்கள் கலங்க பவாவை பார்த்தாள். சிங்கம் மெலிந்திருந்தது. கம்பீரமான மலர் வாடி

யிருந்தது. நினைவு தெரிந்த நாளிலிருந்து தன்னை பவாக்கா எப்படியெல்லாம் அன்பைக் காட்டி வந்திருக்கிறாள் என்பதனை நூற்றுக்கணக்கான மான்டேஜ் ஷாட்டுகளாய் மனக்கண்ணில் கண்டாள். மெதுவாக ஸ்வாதியின் கைகள் நீண்டன. அக்காவின் கைகளைப் பற்றின. பதிலுக்கு பவாவின் கை இறுக்கமாக தங்கையின் கைகளை பற்றிக் கொண்டது. ஸ்வாதியின் கைகள் பவாவின் முகத் தில் அளைந்தன. பவதாரிணிக்கும் ஸ்வாதியின் பணிவான பாசம் மனக்கண்ணில பார்வையானது. பவாவின் கைகள் ஸ்வாதியின் முகத்தில் அளைந்தன. இருவரும் அழுதனர். குலுங்கி குலுங்கி அழுதனர். கதறலாய் அழுகை வெளிப்பட்டது. இருவரும் ஒருவரையொருவர் கட்டி அணைத்துக் கொண்டனர். கஸ்தூரி தாவி இருவரையும் ஒருசேர கட்டியணைத்துக் கொண்டு ஆனந்தமாய் ஓலமிட்டாள். ''பவாக்கா! ஸ்வாதிக்கா! நீங்க ரெண்டு பேரும் சேர்ந்திட்டீங்கக்கா. மீண்டும் மூன்று சகோதரிகளும் ஒண்ணாய்ட்டோம். தியாகத்தின் மறு உருவம் பெண்மை - நாம விட்டுக்குடுக்காம வேற யாருக்கா விட்டுக் குடுப்பாங்க?''

பவாவும் ஸ்வாதியும் கட்டியணைத்துக் கொண்டே ஒருவர் பெயரை ஒருவர் ஆயிரம் முறை மிழற்றினர்.

''என் மேல கோபமா பவாக்கா?''

''மண்டு மண்டு. உன் மேல எனக்கென்ன கோபம்? உனக்கு என் மேல கோபமா ஸ்வாதி?''

''பாசத்தை தவிர நடப்பு நொடி மனசில எதுவு மில்ல - அதுவும் நிரம்பி வழியுது!''

''ஒருத்தர் மூஞ்சிய ஒருத்தர் பார்த்திருந்தா சண்டை போட்டிருப்போமா? கமலநாதனின் சிறு துணுக்கும் கமலநாதனின் பெரிய துணுக்கும் சண்டை போட்டுக்கலாமா?''



''இது சண்டையில்லை. நம்ம பாசத்தை இன்னும் நெருக்கமாக்க ஆண்டவன் நடத்திய திருவிளையாடல்!''

''ஸ்வாதி! தெளிவான மனோநிலைல சொல் றேன்... சந்துரு உன் மகன்தான்... அவன் உன்கிட்ட தான் இருக்கனும். அவனை அப்பப்ப பாக்க மட்டும் அனுமதி குடு!''

''பவாக்கா! நானும் தெளிவான மனோநிலைல தான் சொலறேன்.. சந்துரு உன் மகன்... அவன் உன்கிட்டதான் இருக்கனும். அவனை அப்பப்ப பாக்க மட்டும் அனுமதி குடுக்கா!''

சிரித்தாள் கயல். ''யாரும் சந்துருவை முழுசா விட்டுக் குடுக்க வேணாம். சந்துரு பவா-ஸ்வாதி-கஸ்தூரி சகோதரிகளின் மகன். சந்துரு கிணறாய் இருக்கட்டும். தாய்க்குலங்கள் மூவரும் வாளி இறைத்து மூச்சு முட்ட பாசநீர் அருந்தட்டும். சந்துருவுக்கு கல்யாணமாய்ட்டா கிங் ஷேர் பொற கொடிக்கே. மீதி பங்கைத்தான் மூவரும் பங்கிட்டுக் கொள்ளனும். ஓகே?''

''ஓகே!''

''இந்த சமாதானம் நிரந்தரமானதுதானே? வெளில வந்திட்டா மாறிடாதே?'' கிண்டலித்தாள் கயல். பேசிக்கொண்டே கதவைத் திறந்துவிட்டாள். வெளியே காத்திருந்த கணகளுக்கு 'வெற்றி' என கட்டை விரலால் சமிக்ஞை காட்டி னாள் கயல்விழி.

சந்துருவை உப்பு மூட்டை தூக்கினாள் ஸ்வாதி. உப்புமூட்டை தூக்கிய ஸ்வாதியை உப்பு மூட்டை தூக்கினாள் பவா. சந்துருவின் இடது கன்னத்தில் அரவிந்த் முத்தம் கொடுத்தான். வலது கன்னத்தில் முரளி முத்தம் கொடுத்தான். தினகர் சந்துருவின் வாயில் ரசகுல்லா திணித்தான். விபூதி எடுத்து எல்லோரின் நெற்றியிலும் ஈஷிவிட்டான் மனோ பாலா.

இரட்டைத் தாய்களின் மீது உப்பு மூட்டையாய் தொற்றியிருந்த சந்துருவின் முதுகில் தாவினாள் பொற்கொடி. அவ்வளவுதான்...

அனைவரும் ஒருவர்மேல் ஒருவராக கொத்தாய் தரையில் சரிந்தனர். எட்டு ஆணும் பெண்ணும் பாச பெவிக்காலால் ஒட்டிக்கொண்ட கோபுரமாய் உருண்டு திரண்டனர்.

'பிரிந்தவர்கள் கூடிவிட்டனர். எனது விக்னேஷ் இழப்பை நான் எப்படி ஈடுகட்டுவேன்?' துக்கத்தை மறைத்துக் கொண்டு எட்டு பேர் இணைந்த கோபுரத்தைக் கைதட்டி வரவேற்றாள் கயல்விழி.

தாய்ப்பாசம் முழுமையாய் ஆட்சி செய்யும் இடத்தில் சாத்தானின் குணங்களுக்கு இடமேது?

**முற்றும்.**

## வருந்துகிறோம்



நமது கோவை மாநகர முகவர் **A.வெங்கடாசலம்** அவர்களின் தாயார்

செய்வத்திரு

**மல்லியம்மாள்**

அவர்கள் அண்மையில் கோவையில் இயற்கை எய்தினார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

அவரது ஈடுசெய்ய முடியாத இழப்பால் வாடும் குடும்பத்தினர் அனைவருக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**-ஆசிரியர்.**



## வாசகர் கடிதம்



கலையென்றாலும் சரி, கற்பனையென்றாலும் சரி தன்னம்பிக்கையானதாக இருக்க வேண்டும் என்பதை சில உதாரணங்கள் மூலம் விளக்கிய ஆசிரியர் 'ஜீயே'வைப் பாராட்டுகிறோம்.

- தா.வானதி, சேலம்.

'கழுவுற மீனுல நழுவுற மீன்'னு சொல்லுவாங்களே... அது கங்காருவுக்கு ரொம்பப் பொருத்தம். சென்ற இதழ் பாக்கெட் நாவலில் (சித்த ஜாலம்) கங்காரு பதில்கள் பகுதியில் முதலாவது கேள்விக்கும், கடைசிக் கேள்விக்கும் கங்காரு சொல்லியிருக்கிற பதிலே இதுக்கு ஆதாரம். இதுக்காகக் கட்டாயம் கங்காருவைப் பாராட்டியே ஆகணும்.

**- இள.அரவிந்தன், கி.தாம்பரம்.**

சென்ற இதழ் பாக்கெட் நாவல் 'சித்த ஜாலம்' நாவலைத் தொடங்குமுன் 'மனிதர்', 'மனித வாழ்க்கை' பற்றி தன் முன்னுரையில் சொன்ன பல விஷயங்கள் எனக்குள்ளும் பல கேள்விகளை எழுப்பியது உண்மை.

**- பி.தேவராஜன், மதுரை.**

'சித்த ஜாலம்' நாவலில் சித்தர்களைப் பற்றிய செய்திகளை ஓரளவு தெளிவாகச் சொன்ன இந்திராஜியைப் பாராட்டுகிறோம்.

**- ஆர்.யுவராஜ், இராமநாதபுரம்.**

பிண்ணாக்கீசர், பாம்பாட்டிச் சித்தர், கடுவெளிச் சித்தர் போன்ற சித்தர்கள் வாழ்வில் நடந்த சம்பவங்கள் பற்றிய செய்திகள் மெய்சிலிர்க்க வைத்தன. இந்த அனுபவத்தைத் தந்த இந்திராஜிக்கு நன்றிகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**- எஸ்.சுபத்திரா, ஈரோடு.**